www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

ஏப்ரல் 2008
ரூ. 7.00



## உச்சநீதி மன்றத்தின்
# பச்சையான பாசிசம்!

படிப்பகம்

www.padippakam.com

## அனைத்துலக மகளிர் தினம்

# கேளிக்கை சடங்கல்ல, பெண்ணுரிமைக்கான போராயுதம்!

### உழைக்கும் பெண்களைப் பாலியல் நுகர்பொருளாகவும் கொத்தடிமைகளாகவும் மாற்றி வைத்துள்ள மறுகாலனியத் தாக்குதலுக்கு எதிராகப் போராட பெண்கள் விடுதலை முன்னணியின் அறைகூவல்.

அனைத்துலக மகளிர் தினமான மார்ச் 8-ஆம் நாளன்று, திருச்சியில் செயல்பட்டுவரும் பெண்கள் விடுதலை முன்னணி, இப்போராட்ட நாளில் மறுகாலனிய அடிமைத் தனத்தை வீழ்த்த உறுதியேற்று, "அனைத்துலக மகளிர் தினத்தை மகளிர் உரிமைக்கான தினமாக்குவோம்!" எனும் முழக்கத்துடன் உழைக்கும் பெண்களை அணிதிரட்டி ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.

தோழர் ஜெயமணி தலைமையில் புத்தூர் நாலுரோட்டில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், ஒரு சில பெண்ணுரிமை இயக்கங்கள் இப்போராட்ட நாளை கேளிக்கை தினமாக்கிக் கூத்தடிப்பதைச் சாடியும்; 1908-ஆம் ஆண்டில் நியூயார்க் நகரில் பெண் தொழிலாளர்கள் வாரத்துக்கு 70 மணி நேர வேலையும் அற்பக் கூலியும் கொத்தடிமைத்தனமும் நீடிப்பதை எதிர்த்துப் போராடியும் கூட, நூறாண்டுகளுக்குப் பின்னர் இன்றும் அதேபோன்ற நிலைமை நீடிப்பதை விளக்கியும்; புதிய வடிவில் வரதட்சிணைக் கொடுமைகளும் பெண்களை நுகர்பொருளாக்கும் ஏகாதிபத்திய பண்பாடும் கேள்வி முறையின்றித் தொடர்வதை எதிர்த்தும்; மதவெறியும் - சாதிவெறியும் பெண்களை உயிரோடு எரிப்பதை உணர்த்தியும் முன்னணியாளர்கள் எழுச்சியுரையாற்றினர். இளந்தோழர் சுபலட்சுமி, இன்று பெருமளவில் குழந்தைகள் கொத்தடிமைத் தொழிலாளர்களாக மாற்றப்பட்டு வருவதைக் கோபம் கொப்பளிக்கச் சாடினார். சினிமாவில் நடிகையின் தொப்புளில் பம்பரம் விட்ட கழிசடை நடிகர் விஜயகாந்த், இன்று ஒரு கட்சியைத் தொடங்கி மகளிர் தின மாநாடு நடத்தக் கிளம்பியுள்ள கேவலத்தை ம.க.இ.க. தோழர் ராஜா தோலுரித்துக் காட்டினார். திரளான உழைக்கும் பெண்கள் - குழந்தைகளின் பங்கேற்புடன் எழுச்சியோடு நடந்த இந்த ஆர்ப்பாட்டம் திருச்சி நகரெங்கும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

மதுரையில், ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகளின் சார்பில், இவ்வமைப்புகளைச் சேர்ந்த பெண் தோழர்களாலேயே ஏற்பாடு செய்யப்பட்ட அரங்கக் கூட்டம் மார்ச் 8-ஆம் நாளன்று வில்லாபுரத்தில் நடைபெற்றது. தோழர் யாழினி தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், மகளிர் சுய உதவிக் குழுக்களின் உண்மை முகத்தை தோழர் சுகுணா தோலுரித்துக் காட்டினார். உழைக்கும் பெண்கள் எதிர்கொள்ளும் சமூகக் கொடுமைகளையும், மறுகாலனியாக்கத்தை வீழ்த்துவதன் மூலமே பெண்ணடிமைத்தனம் உள்ளிட்ட அனைத்து அடிமைத்தனங்களையும் வீழ்த்தி விடுதலையடைய முடியும் என்பதையும் விளக்கி ம.உ.பா. மையத்தின் மதுரைக் கிளைச் செயலாளர் லயனல் அந்தோணிராஜ், ம.க.இ.க. மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் கதிரவன் ஆகியோர் சிறப்புரையாற்றியதோடு, புரட்சிகர அமைப்புகளில் பெண்கள் அணிதிரள வேண்டிய அவசியத்தையும் எடுத்துரைத்தனர். இக்கூட்டத்தில் நடத்தப்பட்ட குஜராத்தில் இந்துவெறி பாசிச பயங்கரவாதிகளால் கொடூரமாகக் கொல்லப்பட்ட கௌசர்பானுவைப் பற்றிய நாடகமும், புரட்சிகரப் பாடல்களும் பார்வையாளர்களிடம் போராட்ட உணர்வூட்டி புதிய நம்பிக்கையை விதைத்தன.

கோவில்பட்டியில் இயங்கிவரும் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் இணைப்புச் சங்கமான தீப்பெட்டி தொழிலாளர் பாதுகாப்புச் சங்கத்தின் சார்பில், அனைத்துலக மகளிர் தினத்தையொட்டி 16.3.08 அன்று மறவன் காலனியில் பொதுக் கூட்டமும் கலைநிகழ்ச்சியும் நடைபெற்றன. தோழர் அனுசியா தலைமையில் நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்தில் ஜி.வி.என். கல்லூரிப் பேராசிரியர் உமாதேவி, வழக்குரைஞர் பாலசுப்பிரமணியன், பு.ஜ.தொ.மு. தோழர் முருகன் ஆகியோர் தற்போதைய அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் பெண் விடுதலை சாத்தியமில்லை என்பதையும், நாட்டின் மீதும் மக்களின் மீதும் மறுகாலனிய அடிமைத்தனமும் உழைப்புச் சுரண்டலும் திணிக்கப்பட்டுள்ள நிலையில் ஆண்களோடு இணைந்து உழைக்கும் பெண்கள் போராடுவதன் மூலமே பெண் விடுதலையைச் சாதிக்க முடியும் என்பதையும் எடுத்துரைத்தனர்.

பள்ளி-கல்லூரி மாணவிகளின் கவிதை வாசிப்பு, சிறுவர்களின் கலைநிகழ்ச்சியுடன் நடந்த இப்பொதுக் கூட்டத்தின் இறுதியில் நடைபெற்ற ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சியானது, மறுகாலனிய அடிமைத்தனத்துக்கும் பெண்ணடிமைத்தனத்துக்கும் எதிரான புதிய போராட்ட வழியைப் பார்வையாளர்களின் நெஞ்சிலே பதிய வைத்தது.

— பு.ஜ. செய்தியாளர்கள்.



திருச்சியில்...



கோவில்பட்டியில்...


படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 23

**இதழ் 6**

ஏப்ரல் 2008

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 15



படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 94446 32561


### சி.பி.எம். மீது ஆர்.எஸ்.எஸ். தாக்குதல்:

## பழங்கதை பதிலடியாகாது!

திரிபுரா மாநிலத்தில் ஆறாவது முறையாகப் போலி மார்க்சிஸ்டுக் கட்சி தலைமையிலான போலி இடதுசாரிக் கூட்டணி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியதை வரலாற்று முக்கியத்துவமென்று அக்கட்சியின் இந்தியத் தலைமையகமான புதுதில்லி ஏ.கே.ஜி.பவனில் கொண்டாடிக் கொண்டிருந்தது, மத்தியக் கமிட்டி. அப்போது அங்கு அதைவிட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு ஒன்று நடந்தது. முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் தலைமையில் ஆயுதபாணிகளாக வந்த ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வின் புதுதில்லி மேயர், நகரமன்ற உறுப்பினர்கள், போலி மார்க்சிஸ்ட் கட்சியின் தலைமையகத்தைத் தாக்கினர். கட்சியின் ஏழு மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் பத்துக்கும் மேற்பட்ட அணிகள் படுகாயமுற்றனர். கட்சியின் தலைமை கோயபல்சான சீதாராம் யெச்சூரியுடைய கார் உட்பட பல வாகனங்கள் கொளுத்தப்பட்டன; பிற பொருட்கள் அடித்து நொறுக்கப்பட்டன. அதேநாளில் தமிழ்நாட்டில் நாகர்கோவில், உத்தரகாண்டில் டேராடூன், ஆந்திராவில் ஐதராபாத் ஆகிய இடங்களில் கட்சி அலுவலகங்களும் கர்நாடகாவில் கட்சிச் செயலர் வீடும் ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. குண்டர்களால் தாக்கப்பட்டன.

போலி மார்க்சிஸ்டு கட்சியின் மீதான இந்த இந்து மதவெறி பாசிச பயங்கரவாதிகளின் தாக்குதல்களுக்குக் காரணம், அந்த இரு தரப்புக்கும் இடையே கேரளாவில் நீடித்து வரும் வன்முறை மோதல்கள்; குறிப்பாக கண்ணூர் மாவட்டத்தில் சமீபத்தில் அதிகரித்துள்ள கொலைகள் ஆகும். கடந்த பத்து மாதங்களில் மட்டும் 12 போலி மார்க்சிஸ்ட் அணிகள் ஆர்.எஸ்.எஸ். குண்டர்களால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். கடந்த 30 ஆண்டுகளில் குறைந்தது 200 பேர் இரு தரப்பிலும் பலியாகியுள்ளனர். குறிப்பாக ஜனவரி-மார்ச் மாதங்களில் கண்ணூர் மாவட்டத்தில் மட்டும் ஏழு சி.பி.எம். அணிகளும், 5 பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். உள்ளூர் பிரமுகர்களும் கொல்லப்பட்டனர். இதன் தொடர்ச்சியாகத்தான் நாட்டின் பல இடங்களில் சி.பி.எம். கட்சி மீது ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. குண்டர்கள் கொலைவெறித் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இதற்கு ஐக்கிய முற்போக்கு மற்றும் ஐக்கிய தேசிய முற்போக்குக் கூட்டணி கட்சிகள் எல்லாம் கடும் கண்டனம் தெரிவித்திருக்கின்றன.

''இந்தத் தாக்குதல் பாசிசத் தன்மை வாய்ந்த கோழைத்தனமானது. இம்மாதிரியான தாக்குதல் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டு சி.பி.எம். அணிகளை மிரட்டி, அச்சுறுத்திப் பணிய வைத்து விட முடியாது. அவற்றைத் தக்கமுறையில் எதிர்கொள்ளும் பாரம்பரியம் மிக்கது, சி.பி.எம். கட்சி. 1972-77-இல் மேற்கு வங்கத்தில் அரை பாசிசத் தாக்குதல்களைச் சமாளித்து, ஆயிரக்கணக்கான அணிகள் உயிர் தியாகம் புரிந்து, பின்னர் நடந்த எல்லாத் தேர்தல்களிலும் வென்றும் ஆட்சியைப் பிடித்துள்ளனர். இட்லரின் பாசிச இராணுவத்தை முறியடித்த சோவியத் ஒன்றியத்தின் செஞ்சேனை பாரம்பரியத்தில் வந்த கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வை ஒன்றுமில்லாமல் செய்து இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பலப்படுத்துவோம்'' என்று சபத மேற்கிறது போலி மார்க்சிஸ்டு கட்சி.

இதெல்லாம் பழைய கதையும் வெற்று வாய்ச்சவடாலும்தான் என்பதை நாடறியும். போலி மார்க்சிஸ்டுகள் ஆளும் மேற்கு வங்கம் மற்றும் கேரளத்தில் ஒன்றுமே இல்லாமலிருந்த ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. சமீப ஆண்டுகளில் வலுவாகக் காலூன்றியிருக்கின்றன. குறிப்பாக, கேரளத்தில் தற்போது பா.ஜ.க.வின் முக்கியப் பிரமுகர்களாக உள்ளவர்களில் பலர் முன்னாள் சி.பி.எம். கட்சியினர் அல்லது போலி கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்களின் குடும்ப வாரிசுகள் தாம் என்ற உண்மை மறுக்க முடியாதது. மத்தியில் காங்கிரசுடன் தேர்தல் அரசியல் கூட்டு வைத்துக் கொள்வதற்கான சந்தர்ப்பவாத நியாயவாதத்திற்காக மட்டுமே ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. வகுப்புவாத சக்திகளை எதிர்ப்பதாகப் போலி மார்க்சிஸ்டுகள் நாடகமாடி வருகின்றனர். மற்றபடி பாபரி மசூதி முதல் ''ராமசேது பாதுகாப்பு'' என்று இந்து மதவெறிக் கும்பல் கூறிக் கொள்ளும் சேதுக் கால்வாய் திட்ட எதிர்ப்பு வரை, எல்லா விவகாரங்களிலும் இந்துத்துவா கும்பலுடன் சமரசப் போக்கை கடைப்பிடிப்பதே போலி மார்க்சிஸ்டுகளின் கொள்கையாக உள்ளது. 1992 மும்பை, 2002 குஜராத், 2007 ஒரிசா என்று மதச்சிறுபான்மையினருக்கு எதிராக இந்து மதவெறி பாசிச பயங்கரவாதிகள் நடத்தி வரும் படுகொலை வெறியாட்டத்துக்கு எதிராக இந்தப் போலி மார்க்சிஸ்டுகள் என்ன செய்தார்கள்? ஒரு துரும்பைக் கூட தூக்கிப் போடவில்லை என்பதிலிருந்தே இவர்களின் மதவாத எதிர்ப்பின் போலித்தனம் தெரிகிறது.

தனியார்மயம், தாராளமயம், உலகமயமாக்கம் என்னும் ஏகாதிபத்திய மறுகாலனியாக்கத்துக்கு மனிதமுகம் கொடுப்பது என்கிற தோரணையோடு மறைமுக ஆதரவு அளிப்பது, சிங்கூர்-நந்திகிராம் விவசாயிகளிடமிருந்து அவர்களின் வாழ்வாதாரங்களான விளைநிலங்களைப் பிடுங்கி, பன்னாட்டு முதலாளிகளுக்குத் தொழில்மயமாக்குவது என்ற பெயரில் தாரை வார்ப்பது, சிறுவணிகர்களை ஒழிக்கும் ஏகபோகங்களுக்கு நடைபாவாடை விரிப்பது, போராட்டங்களுக்கு எதிராக தொழிலாளர்களை மிரட்டுவது என்று ஆயிரத்தெட்டு வழிகளில் மக்கள் விரோத, நாட்டு விரோத நடைமுறையைக் கொண்டுள்ள போலி மார்க்சிஸ்டுகள் கம்யூனிச பாரம்பரிய உரிமை பாராட்டுவது வெறும் கேலிக் கூத்துதான்! ●

படிப்பகம்

www.padippakam.com



# உச்சநீதி மன்றத்தின் பச்சையான பாசிசம்

நாட்டின் உச்சநீதி மன்றமும், உயர்நீதி மன்றமும் பாரபட்சமின்றி அனைத்துத் தரப்புக்கும் சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்டும் நிறுவனங்களாக இல்லை. ஏழை-எளிய மக்கள், சிறுபான்மை மக்களின் விவகாரங்கள் என்றால், காட்டெருமைகளாக மாறி முட்டி மோதிக் குத்திக் கிழிக்கின்றன. அதிகாரபலமிக்க மேட்டுக்குடியினர் விவகாரங்கள் என்றால், அவர்களின் வளர்ப்புப் பிராணிகளாக மாறி, வாலை குழைத்துக் கொண்டு அவர்களின் காலை நாவால் நக்குகின்றன. அடுத்தடுத்து எவ்வளவோ வழக்குகள் இதற்குச் சான்றுகளாக விளங்குகின்றன.

நீதிமன்றங்கள், சிறு வணிகர்களின் கடைகளுக்கு சீல் வைக்கும்படி உத்திரவு போடுகிறது; சிறு முதலாளிகளின் ஆலைகளை மூடிவிடும்படிக் கட்டளை போடுகிறது. நீதிபதிகளோ தரைக்கடை வியாபாரிகளை, தலைச்சுமை வியாபாரிகளை விரட்டுங்கள், குடிசைகளை இடித்துத் தள்ளுங்கள்; ரிக்சா இழுப்பவர்களை நகரத் தெருக்களிலிருந்து தூக்கியெறியுங்கள்; வேலை நிறுத்தங்கள், கடையடைப்புப் போராட்டங்களை ஒடுக்குங்கள் என்று சீறுகிறார்கள். நீதிமன்றங்கள் எல்லாம் நாட்டின் பரந்துபட்ட ஏழை மக்களுக்கு நீதி வழங்கும் கருவியாக இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

அதற்கு மாறாக, நாட்டின் ஆளும் நிர்வாக அமைப்பு முழுவதையும் கட்டுப்படுத்தும் செல்வம் கொழிக்கும் கூட்டுப் பங்கு நிறுவனங்களின் நலன்களுக்குச் சாதகமாகவே நீதித்துறை சேவை செய்கிறது. ஆதிக்க சக்திகளும் அரசும் ஏழை எளிய, சிறுபான்மை மக்களுடைய உரிமைகளை அப்பட்டமாக மீறும் போதெல்லாம், அவ்வுரிமைகளை நிலைநாட்டுவதற்குப் பதிலாக, அவற்றை அடியோடு பறிக்கும் வகையிலே, அதாவது குப்புறத் தள்ளுவதோடு குழிபறிக்கும் வேலையையும் நீதிமன்றங்கள் செய்கின்றன.

ஏழை-எளிய மற்றும் சிறுபான்மை மக்களுக்கு எதிராக நாளும் பரவலாக இழைக்கப்படும் அநீதிகள், அக்கிரமங்களுக்கு நிவாரணம் தேடி நீதிக்காகவும் உரிமைக்காகவும் எவ்வளவு முயன்றாலும் அணுக முடியாதபடி நீதிமன்றங்களின் நெடிய கதவுகள் அடைபட்டே கிடக்கின்றன. ஏழை-எளிய மக்களின் உயிர் வாழ்வுக்கான நிலம் மற்றும் பிற இயற்கை வாழ்வாதாரங்களை அரசும் ஆதிக்க சக்திகளும் பிடுங்கிக் கொள்ளும்போது, பாதிக்கப்படுபவர்கள் பல முறை மனுப் போட்டு மன்றாடினால் கூட, நீதிமன்றங்கள் தலையிட மறுத்து விடுகின்றன. ஏழைக் குடிசைவாழ் மக்களை அவர்களின் வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றும்படி நீதிமன்றங்களே உத்திரவுகள் போடுகின்றன; அதேசமயம் அவர்களுக்கான மாற்றிடங்கள் பற்றி வாயே திறப்பதில்லை.

இவ்வாறு செய்யும்போது, இயற்கையான நீதியையும், வாழ்விட உரிமையையும் பற்றிய சட்டங்களுக்கு விரோதமாக, பாதிக்கப்படுபவர்களின் வாதங்களுக்கு நீதிமன்றங்கள் காது கொடுப்பதே கிடையாது. சமீபத்தில் புதுதில்லியில் குடிசைப் பகுதிகளை இராட்சத இயந்திரங்கள் கொண்டு இடித்துத் தள்ளிய போது, அந்தப் பகுதி நிலங்கள் சட்டப்படி அங்கு குடியிருந்தவர்களுக்கு உடமையானதில்லை என்று நீதிமன்றம் கூறியது; யமுனை ஆற்றங்கரையிலும், புதுதில்லியின் விளிம்பிலும் இருந்த குடிசைப் பகுதிகள் சுற்றுச் சூழல் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவை என்றும் கூறியது. ஆனால், செல்வாக்குமிக்க ஆதிக்க சக்திகள், அதே இடங்களில் பெரும் வணிக வளாகங்களைக் கட்டியபோதும் யமுனை ஆற்றங்கரையில் அக்சார்தம் கோவிலைக் கட்டியபோதும் மேற்கண்ட கண்துடைப்புக் காரணங்களை எல்லாம் ஊதி விட்டு, அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று அனுமதிக்கப்பட்டன.

உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி கே.ஜி. பாலகிருஷ்ணன்



இதேபோன்று, சட்டப்படி அனைத்துத் தரப்புக்கும் பாரபட்சமாக இல்லாது, ஏழை-எளிய மற்றும் சிறுபான்மை மக்களுக்கு எதிராக சிவில் உரிமை விவகாரங்களில் நீதிமன்றங்கள் உத்திரவுகள் போடுகின்றன. ஏழை நலிவுற்ற மக்கள், சிறுபான்மையினரின் பிணைக்கான மனுக்கள் பல ஆண்டுகளாகியும் நீதிமன்றங்களால் விசாரணைக்கு ஏற்கப்படுவதே இல்லை. அதேசமயம், வழக்குரைஞர் குழுமங்களினால் வாதாடப்படும் பெரும் பணமுதலைகள் மற்றும் ஆதிக்க சக்திகளின் பிணைக்கான மனுக்கள் உடனடியாகவே விசாரணைக்கு ஏற்கப்பட்டு, சாதகமான தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன. பினாயக் சென் என்ற சிவில் உரிமைப் போராளியின் பிணை மனு நீதிமன்றத்தால் பகைமையோடு நடத்தப்பட்டு, பிணை மறுக்கப்பட்ட அதேசமயம், கள்ளக்கடத்தல்காரர்கள், வெள்ளைச் சட்டை மோசடிப் பேர்வழிகள் போன்ற கிரிமினல்களுக்கு மின்னல் வேகத்தில் பிணை வழங்கப்படுகிறது.

உச்சநீதி மன்றத்தின் இதுபோன்ற அநீதி-அக்கிரம அணுகுமுறையை விமர்சித்து ''மாத்ருபூமி'' என்ற மலையாளப் பத்திரிகையில். கடந்த பிப்ரவரி இரண்டாம் வாரம் மும்பையைச் சேர்ந்த பிரபல வழக்கறிஞரும் சிவில் உரிமைப் போராளியுமான தீஸ்தா செதல்

www.padippakam.com


வாட் எழுதியிருந்தார். இதற்காக அடுத்த சில நாட்களில் உச்சநீதி மன்றத்தின் ஒரு அமர்வுக்கு தலைமை ஏற்ற தலைமை நீதிபதி கே.ஜி.பாலகிருஷ்ணன் ஆத்திரத்தில் பொங்கி வெடித்து எரிமலையாய்ச்சீறிவிட்டார்.

2002-ஆம் ஆண்டு இந்து மத வெறி பாசிச பயங்கரவாதிகள் முஸ்லீம் மக்களுக்கு எதிராக நடத்திய பாலியல் வன்முறை மற்றும் படுகொலை வெறியாட்டங்கள் அனைத்துக்கும் சாக்காக, அவர்கள் காட்டிய கோத்ரா தொடர் வண்டி எரிப்பு சம்பவத்திற்குக் காரணமானவர்கள் என்று அப்பாவி இசுலாமியர்கள் 84 பேர் கைது செய்யப்பட்டு, ''பொடா'' என்ற பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்டு ஐந்தாண்டுகளாக சிறையில் சித்திரவதைப்படுகின்றனர். ஆண்டுக்கணக்கில் இவர்களுடைய பிணைக்கான வழக்கு இழுத்தடிக்கப்பட்டு, கடந்த பிப்ரவரி 19-ந் தேதி உச்சநீதிமன்றத்தின் அமர்வுப் பிரிவின் கீழ் விசாரணைக்கு வந்தது. அப்போது, அங்கிருந்தவர்கள் வரலாறு காணாத காட்சியைக் கண்டு அதிர்ச்சியில் உறைந்து போனார்கள்.

கோத்ரா ரெயில் எரிப்பு வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பிணை மனு மீது வழக்குரைஞர்கள் தமது வாதத்தைத் துவங்குவதற்கு முன்பே ஆத்திரத்துடன் எழுந்த தலைமை நீதிபதி கே.ஜி. பாலகிருஷ்ணன் அவர்களைப் பார்த்து, ''யார் இந்த தீஸ்தா செதல்வாத்? உங்களில் யாராவது எந்த வகையிலாவது அவருடன் தொடர்புடையவர்களா? அவருடன் தொடர்புடைய எந்த மனு மீதான வாதங்களையும் இந்த அமர்வு நீதிமன்றம் கேட்க விரும்பவில்லை'' என்று அனல் கக்கினார்.

''தீஸ்தா செதல்வாட் என்ன கோத்ரா ரெயில் எரிப்பு வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் செய்தித் தொடர்பாளரா அல்லது மனுதாரர்களின் பிரதிநிதியா? ஒரு கட்டுரை வெளிவந்திருக்கிறது. அவர்களின் பிரதிநிதியாக தீஸ்தா இருந்தால், அவர்களின் மனுக்களை ஏற்று நாங்கள் விசாரணை நடத்த விரும்பவில்லை'' என்று ஆணித்தரமாகப் பிரகடனம் செய்தார்.

எப்படியாவது தங்களது பிணை மனு விசாரிக்கப்பட வேண்டும் என்ற பதைபதைப்பில், தீஸ்தா செதல்வாட்டை அவர்கள் கைவிடுவதாகப் பகிரங்கமாக நீதிமன்றத்தில் அறிவிக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அதன்பிறகுதான் அவர்களின் பிணை



குஜராத் கலவரத்தின் பொழுது தீக்கிரையாக்கப்பட்ட குல்பர்க் சொசைட்டி என்ற குடியிருப்பைப் பார்வையிட்ட தீஸ்தா செதல்வாட் (நடுவில் இருப்பவர்), அதனை ''இந்து மதவெறி எதிர்ப்பின் அருங்காட்சியகமாக'' அறிவிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மனுக்கள் விசாரணைக்கு ஏற்கப்பட்டன. ஆனால், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் இந்த முறையும் பிணையில் விடப்படவில்லை. விசாரணை தள்ளித்தான் போடப்பட்டது.

அப்படி என்னதான் உச்சநீதி மன்ற அமர்வு பிரிவு ஆத்திரமடையுமளவு தீஸ்தா செதல்வாட் எழுதிவிட்டார்? ''வெட்கக்கேடு, நீதி கேலிக் கூத்தாக்கப்படும் வெட்கக்கேடு'' என்ற கட்டுரை எழுதி, அதில் சில கேள்விகளை எழுப்பி இருந்தார். கோத்ரா ரயில் எரிப்பு சம்பவம் நடந்து ஆறாண்டுகளாகியும் குற்றஞ் சாட்டப்பட்ட 84 இசுலாமியரும் இன்னமும் ஏன் பிணையில் விடுவிப்புப் பெற முடியவில்லை? அவர்களில் பலரும் சந்தேகத்துக்கு இடமான மோசடிக் குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் கிடக்கின்றனர்; அவர்களில் ஒருவர் நூற்றுக்கு நூறு சதவீதம் பார்வையில்லாதவர்; தலைமறைவாகி விட்டவர்கள் என்று அறிவிக்கப்பட்ட 22 பேர்களில் ஒருவர் கோத்ரா ரயில் எரிப்புச் சம்பவத்தின்போது மராட்டிய மாநிலத்தில்தான் இருந்துள்ளார் என்று காட்டப்பட்டுள்ளது.

கோத்ரா ரயில் எரிப்பு வழக்கு ''பொடா'' சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது; ஆனால், பின்னர் நியமிக்கப்பட்ட ''பொடா'' மறு ஆய்வுக் கமிட்டி, இந்த வழக்கு ''பொடா'' சட்டத்தின் கீழ் வராது என்றும் அதன் காரணமாக குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்குப் பிணை வழங்கப்படுவதை மறுக்க முடியாது என்றும் அறிவித்தது. (இந்த முடிவின் அடிப்படையில்தான் ஈழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்று கைது செய்யப்பட்ட வைகோ முதலியவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். - பு.ஜ. ஆ.குழு) ''பொடா''வின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பிணையில் செல்வதற்கு மனுபோடுவதற்கு உரிமை உண்டு என்று 2006-ஆம் ஆண்டு உச்சநீதி மன்றமே அனுமதியளித்திருக்கிறது; ஆனாலும் 2004-ஆம் ஆண்டிலிருந்து கோத்ரா ரயில் எரிப்பு' குற்றவாளிகளின் பிணைக்கான மனுக்கள் விசாரிக்கப்படவே இல்லை. இதையெல்லாம் தீஸ்தா செதல்வாட் தனது கட்டுரையில் விவரித்துள்ளார்.

தீஸ்தாவின் கட்டுரையில் உள்ள கருத்துக்கள் எவையும் பொய்யானவை அல்ல; அல்லது இரகசியமாக வைக்க வேண்டியவையோ, இதற்கு முன்பு அவரது பத்திரிக்கையில் எழுதாதவையோ அல்ல. ஆனாலும் உச்சநீதி மன்றம், குறிப்பாக, அதன் தலைமை நீதிபதி வெகுண்டு ஆத்திரப்பட்டதற்குக் காரணம் தீஸ்தாவின் எழுத்துக்கள் அத்தனையும் உண்மையானவை! அது, நீதி தேவன்களின் கறுப்பு அங்கியை நார்நாராகக் கிழித்து முழுக்கவும் அம்மணமாக்கிவிட்டது. பின்வருவன தீஸ்தா எழுதிய கட்டுரையின் சாரம்:


- சுதந்திர இந்தியாவிலேயே மிக மோசமான மதவெறிப் படுகொலைகளை நடத்தியவர்களும் அவற்றுக்கு

www.padippakam.com

மூளையாக இருந்தவர்களும் ஆறாண்டுகளாகியும் சுதந்திரமாகத் திரிவதோடு இப்போது தேர்தல்கள் மூலம் இரட்டை அதிகார உரிமையும் பெற்றுள்ளார்கள். பணபலமும், சாதிபலமும் கொண்ட அரசியல் ஆதிக்க சக்திகளான குற்றஞ்சாட்டப்பட்ட அவர்கள், 2002-ஆம் ஆண்டே குஜராத் நீதிமன்றங்களால் எளிதாகப் பிணையில் விடுதலை பெற்று விட்டார்கள். இவ்வாறு பிணை பெறப்பட்ட 600 பேர்கள் பற்றிய விவரங்கள் உச்சநீதி மன்றத்தின் முன்பு நீதிக்கும் அமைதிக்குமான குடிமக்கள் அமைப்பினால் சமர்ப்பிக்கப்பட்டு விட்டது. இது பற்றிய பல ஆதாரங்களை ''தெஹல்கா'' வார ஏடு சமீபத்தில் அம்பலப்படுத்தியது.

• இதற்கு நேர்மாறாக, கோத்ரா ரயில் எரிப்பு வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு, சிறையிலுள்ள 84 அப்பாவிகள் ஆண்டுக்கணக்கில் இன்னமும் குஜராத் சிறையில் வதைபடுகிறார்கள். அவர்களில் பலரும் போலீசு சாட்சியங்களின்படி புனையப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்டவர்கள்; அவர்களில் நூற்றுக்கு நூறு பார்வையற்ற சிறுவனும் அடங்குகிறான். பலர் நோய்வாய்ப்பட்டுள்ளார்கள். உண்மையில் அவர்களின் குடும்பமே பஞ்சைபராரிகளாகி விட்டன. அதே சமயம் கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்துக்கு பின்னர் கொலைவெறியாட்டம் போட்டவர்களும் அதற்கு மூளையாக இருந்தவர்களும் சுதந்திரமாகத் திரிவதோடு குஜராத்தை ஆளுவோர் தமது நடவடிக்கைகள் மற்றும் பேச்சின் மூலம் பல அற்பத்தனமான மற்றும் தொல்லைதரும் கேள்விகளை மீண்டும் எழுப்புகின்றனர். பாரபட்சமான நீதி! நமது அரசியல் சட்டம் சொல்லுபவைகளைக் கோட்பாடு ரீதியாக இந்த பாரபட்சமான நீதி அமைப்பினால் தர முடியுமா? இம்மாதிரியான அப்பட்டமான பாரபட்சமாக கிரிமினல் நீதி வழங்கும் முறையானது ஒவ்வொரு குடிமகனின் குறிப்பாக, இம்மாதிரியான அமைப்பின் தாக்குதல்களைப் பெறும் நிலையில் உள்ள சமூகத்தின் நம்பிக்கையைப் பெற முடியுமா?

• நம்முடைய குற்றவியல் நீதி முறைமை அமைப்பைப் பொறுத்தவரை குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு பிணை விடுப்பு என்பது ஒரு இயற்கையான, சாதாரண நிவாரணம், பிணையில் விடுதலை செய்வது என்



சல்வா ஜுடுமை எதிர்த்ததால் சிறையில் அடைக்கப்பட்டுள்ள பினாயக் சென்னுக்கு, உச்சநீதி மன்றம் பிணை வழங்க மறுத்து வருகிறது.

பதில் கேள்விக்கிடமுள்ள விதிமுறைகளைக் கொண்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்டங்களான கொடூரச் சட்டங்கள்கூட, இம்மாதிரி நீடித்த, நிரந்தரமான முறையில் எந்த நபரையும் வெறுமனே சிறையில் அடைத்து வைப்பதை அனுமதிப்பதில்லை. பூதாகரமான வளர்ச்சி விகிதத்தையும், மின்னும் பளபளக்கும் முன்னேற்றத்தையும் கொண்ட இந்திய ஜனநாயகம் பிளவுபட்ட நீடித்த நிறுவனமயமான ஒருதலைபட்சத்தையும் சித்திரவதையையும் எப்படி நியாயப்படுத்த முடியும்?

இந்த வெட்கக்கேடான கதையின் சில கவனத்துக்குரிய அம்சங்கள் பின்வருமாறு உள்ளன.

• கோத்ராவில் எரிக்கப்பட்ட சபர்மதி துரித வண்டியின் ஆறாம் எண் பெட்டியின் தீயால் பாதிக்கப்பட்ட இந்துக்களிலேயே கூட சிலர் வழக்கு விசாரணையை குஜராத்துக்கு வெளியே மாற்றும்படி உச்ச நீதி மன்றத்திடம் கோரியுள்ளனர். இதற்கான வழக்கு 2003-ஆம் ஆண்டே பதிவு செய்யப்பட்டது. இவ்வாறு ஜனநாயகம் மற்றும் அமைதிக்கான மக்கள் அமைப்பு மனு செய்ததைத் தொடர்ந்துதான் கோத்ரா வழக்கு விசாரணைக்கு 2003 நவம்பரில் உச்சநீதி மன்றம் தடை விதித்தது.


2004 அக்டோபர் முதலே கோத்ரா ரயில் எரிப்பு வழக்கில் கைது செய்யப்பட்ட முஸ்லீம்களுக்கு பிணை விடுவிப்பு உத்திரவு நீதிமன்றங்களால் வழங்கப்படவில்லை. கடைசியாக, 2004 அக்டோபர் இறுதியில் அவர்களுக்குப் பிணை விடுவிப்பை மறுத்து குஜராத் உயர்நீதி மன்றம் உத்திரவு போட்டது. அதன் பிறகு உச்ச நீதி மன்றம் அவர்களின் பிணை விடுதலை கோரும் மனுக்களை வெறுமனே விசாரிக்கவே கிடையாது.

• குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் தலைமறைவானதாகக் கூறப்பட்ட 22 பேர்களில் ஒருவர் ஒரு மௌலவி; அந்த மௌலவி கோத்ரா மசூதியின் மொட்டை மாடியில் நின்று கொண்டு சதித்திட்டம் திட்டியதைப் பார்த்ததாக மற்றொரு குற்றவாளியும் சாட்சியுமான சிக்கந்தர் என்பவர் கூறியிருக்கிறார். ஆனால், அந்த நாளில் அந்த மௌலவி கோத்ராவிலேயே இருக்கவில்லை, மகாராஷ்டிராவில் இருந்தார் என்பது நிரூபணமாகி விட்டது. இம்மாதிரி, பல கைதுகளில் அப்பட்டமான பாரிய பிழைகள் - முறைகேடுகள் இருப்பது குறித்து எடுத்துரைத்தும், அவை எவற்றுக்கும் அரசுத் தரப்பில் பதில் சொல்ல வில்லை.

• எல்லாவற்றிலும் மோசமானது, 2004 ஆட்சி மாற்றத்தையடுத்து, ''பொடா'' சட்டம் ரத்துச் செய்யப்பட்டதற்கும் பிறகு, மத்திய ''பொடா'' மறுஆய்வுக் கமிட்டி, கோத்ரா வழக்கு ''பொடா'' சட்டத்தின் கீழ்வராது என்று அறிவித்தது. ''பொடா'' சட்டவிதி முறைகளின் படியேகூட, அதை முறைகேடாகப் பயன்படுத்துவதையும் அதன் கொடூரமான விதிமுறைகளையும் தனித்தனி வழக்குகளில் மறு ஆய்வு செய்வதை அனுமதிக்கிறது. கோத்ரா வழக்கில் கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் எதற்கும் ''பொடா'' சட்டத்தைப் பிரயோகிக்கக்கூடியதாக இல்லை என்று 2005 மே 16-ஆம் தேதியிட்டத் தீர்ப்பில் மத்திய பொடா மறுஆய்வுக்கமிட்டி கூறியது. ஆனாலும் கமிட்டியின் முடிவை குஜராத் அரசோ, நீதிமன்றமோ, ஒரு பொருட்டாகவே கருதவில்லை. கோத்ரா வழக்கில் கைது செய்யப்பட்டவர்களின் பிணைக்கான வழக்கில் உச்சநீதி மன்றத்தின் முன்பு இந்த விவகாரங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால், இவையும்கூட தாமதமாக்கப்பட்டு வருகின்றன.

• இறுதியாக, குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பிணைக்கான ரிட் மனுவை பதிவு செய்ய உச்சநீதி மன்றம் அனுமதித்தது. இந்த பிணை விவகாரத்தில் ஆறுமுறை கேட்புக்குப் பிறகும் பிணை விடுவிப்புப் பெறமுடியவில்லை. மத்திய ''பொடா'' மறுஆய்வுக்கமிட்டியின்

www.padippakam.com



முடிவுகள் மீதான வழக்கு விசாரணையின் போது குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரும் பிணை விடுவிப்புக்காக வழக்கைப் போடுவதற்கு உச்சநீதி மன்றம் அனுமதித்த போது, ஏழு தனித்தனி வழக்குகள் பதிவுசெய்யப்பட்டன. இருப்பினும் ஆறுமுறை கேட்புக்கு வந்தும்கூட, இன்னும் முழுமையாக விசாரணை நடத்தப்படவே இல்லை. 2008 பிப்ரவரியில் உச்சநீதி மன்றத்தின் முன்பு இந்த விவகாரம் வருகிறது. இந்த முறையாவது நீதி கிடைக்குமா?

● மீண்டும் ஒருமுறை இந்தியத் தலைமை நீதிமன்றமான உச்சநீதி மன்றத்தின் வழக்கு பதிவு அமைப்பின் சொரணையற்ற அல்லது பொறுப்பற்ற வழக்கு நடப்புக்களை முறைப்படுத்துதல் காரணமாக அடிப்படை ஆதார உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

இதன் விளைவாக கோத்ரா ரயிலை எரித்ததாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள 84 பேர்களின் (அவர்களில் ஒருவர் முழுக்க முழுக்க பார்வையில்லாதவர்) தனி மனித சுதந்திரம் ஆறு ஆண்டுகளாக மறுக்கப்பட்டிருக்கிறது. இந்திய குற்றவியல் சட்டப்படியும் நீதித்துறையின் நாகரிகத்தின் படியும் பிணை விடுவிப்பு என்பது குற்றஞ்சாட்டப்பட்ட ஒவ்வொருவரின் அடிப்படை உரிமையிலிருந்து பிரிக்க முடியாத ஆதாரத் தேவை. இவ்வாறான ஒரு நீண்ட காலத்துக்கு விசாரணைக் கைதிகளை சிறையில் வைப்பதை அனுமதிப்பதன் மூலம், போலீசுக்கும் நிர்வாக அதிகாரிகளுக்கும் கேள்விக்கிடமற்ற அதிகாரங்களை வழங்குகிறது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம். அதுவும் கூட தீவிரமாக எதிர்த்து வழக்காடப்படுவது உண்டு.

உச்சநீதி மன்றத்தின் முன்புள்ள கோத்ரா பிணை விவகாரங்களின் காலவிவரம்:

*பிப்ரவரி 22, 2002* கோத்ரா வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் உச்சநீதி மன்றத்தின் முன்பு பிணை விடுவிப்புக் கோரி மனுப் போடலாம் என்று ஓய்வு பெற இருந்த நீதிபதி பி.பி.சிங் ஒரு உத்திரவு போட்டார். அவர்தான் கோத்ரா வழக்கு ''பொடா'' சட்டத்துக்குப் பொருந்தாது என்று தீர்ப்புச் சொன்னவர்.

*ஏப்ரல் 10, 2007:* உச்சநீதி மன்றத்தின் முன்பு பிணைக்கான மனுக்கள் போடப்பட்டன.

*ஏப்ரல் 19, 2007:* உச்சநீதி மன்றத்தின் வழக்குப் பதிவு அலுவலகத்தால் விவகாரம் விசாரணைக்கு நாள் குறிப்பிடப்பட்டது; ஆனால், அனைத்திந்திய நீதிபதிகள் சங்க விவகாரம் கேட்புக்கு வந்ததால் கோத்ரா பிணை வழக்கு விசாரிக்கப்படவில்லை. இரண்டு நாட்களுக்குப் பிறகு கோடை விடுமுறை தொடங்க இருந்தது. இதனால் கோத்ரா வழக்கு விசாரணை ஜூலை 19, 2007 அன்று ''இறுதித் தீர்ப்பு''க்கு என்று பட்டியலிட வேண்டும் என்று உச்சநீதி மன்றம் வழிகாட்டியது. அதற்குப் பிறகு என்ன நடந்தது? உச்சநீதி மன்றம் கோடை விடுமுறைக்குப் பிறகு ஜூலை 18, 2007 அன்று திறந்தபோதும் இந்த விவகாரம் குறித்த எந்த அசைவும் நடக்கவில்லை.

*ஆகஸ்டு முதல் வாரம், 2007:* இதர விவகாரங்களுக்கான நாளில் விசாரிப்பதற்காக கோத்ரா வழக்கு விவகாரம் பட்டியலிடப்பட்டது. அப்போது இப்படிச் செய்வதால் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பிரதிநிதிகளும், வழக்கறிஞர்களும் கோத்ராவில் இருந்து சொந்த செலவில் மீண்டும் நீதிமன்றம் வரவேண்டி இருக்கும் என்பதால் விசாரணைக்காக இதர அலுவல்கள் இல்லாத நாளில் பட்டியலிடும்படியும், அப்போதுதான் இறுதி வாதங்கள் நடத்த முடியும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

நீதிபதிகள் அரசியல் சட்ட அமர்வு பிரிவில் பங்கேற்பதால், இரண்டரை அல்லது மூன்று மாதங்கள் ஒரு பொருட்டே இல்லை என்ற அடிப்படையில் விவகாரம் பட்டியலிடப்பட்டது. அதன் பிறகு, விவகாரம் இருப்பில் இருப்பதாகக் காட்டப்பட்ட போதும் உச்சநீதி மன்றப் பதிவு அலுவலகத்தால் நவம்பர் 18-19-இல் பட்டியலிடப்படவில்லை.

*நவம்பர் 21, 2007:* குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் சட்டப் பிரதிநிதிகளால் விவகாரம் மீண்டும் சுட்டிக் காட்டப்பட்ட பிறகு அதைப் பட்டியலில் சேர்க்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது.

*டிசம்பர் முதல்வாரம், 2007:* பிணை விவகாரங்கள் ''பொடா'' மறு ஆய்வு விவகாரங்களோடு சேர்த்து மீண்டும் இதர அலுவலக நாளில் பட்டியலிடப்பட்டது; அதாவது, வாதங்கள் முடிக்கப்பட முடியாது என்றாகியது.

*டிசம்பர் 12, 2007:* விவகாரங்கள் தலைமை நீதிபதி மற்றும் நீதிபதி பஞ்சால் முன்பு பட்டியலிடப்பட்டது. அதனால், விவகாரத்தை டிசம்பர் 11 அன்றே பட்டியலிடும்படி குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பிரதிநிதிகள் கோரினார்கள்; நீதிபதி பஞ்சால் குஜராத்தைச் சேர்ந்தவர், அவரது சகோதரர் குஜராத் அரசின் அதிகாரப்பூர்வ வழக்குரைஞராக உள்ளார் என்ற காரணங்களால் அவர் முன்பு வழக்கு விசாரணை வரக்கூடாது என்பதை அவர்கள் சுட்டிக் காட்டினார். நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. மீண்டும் ஒருமுறை பதிவு அலுவலகம் என்ன செய்கிறது?

*டிசம்பர் 12, 2007:* இந்த விவகாரத்தின் சூழ்நிலையில் அனைத்தும்

www.padippakam.com

அறிந்திருந்தும் டிசம்பர் 11 அன்று வழக்கைப் பட்டியலில் சேர்த்த பதிவு அலுவலகம், நீதிபதிகள் அகர்வால் மற்றும் சிங்வி முன்பு வைத்தது. (நீதிபதி சிங்வி ஏற்கெனவே ''பொடா'' மறுஆய்வுக் கமிட்டியில் விசாரணை நடத்தியவர் என்பதால் நீதிபதி பஞ்சாலைப் போன்ற பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டி வரும்) எதிர்பார்த்தபடியே ''என் முன்பு வேண்டாம்'' என்று நீதிபதி சிங்வி அடுத்தநாள் அறிவித்தார். மீண்டும் ஒருமுறை விவகாரத்தை வாதிட்டு, பிணை விடுவிப்பு பெறும் வாய்ப்பைப் பாதிக்கப்பட்டவர்கள் இழந்தார்கள்.

*டிசம்பர் 12, 2007:* குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பிரதிநிதிகள் கிளர்ச்சியடைந்து அதே நாளன்று மதியம் விவகாரத்தை தலைமைத் தளபதியின் முன்பு கொண்டு சென்றார்கள்; பதிவு அலுவலகத்தில் மீண்டும் மீண்டும் பிரச்சினை எழுவதைக் குறிப்பிட்டார்கள். விவகாரம் ஜனவரி இரண்டாம் வாரம் குறிப்பிடப்பட வேண்டும் என்று வழிகாட்டிய தலைமை நீதிபதி, அதன் பிறகு மூன்று சிறப்பு நீதிபதிகள் அடங்கிய அமர்வுப் பிரிவை அமைத்து ஜனவரி இறுதிவாரத்தில் விசாரணைக்குப் பட்டியலிடுவதாகக் கூறினார்.

*ஜனவரி 17, 2008:* தலைமை நீதிபதியின் உத்திரவை ஒரு பொருட்டாக மதிக்காத உச்சநீதி மன்ற பதிவு அலுவலகம் ஜனவரி 17, 2008 வியாழனன்று வழக்கு விசாரணைக்குப் பட்டியலிட்டது; அந்த நாள் ஒரு இதர அலுவல் நாளாக இல்லாவிட்டாலும் வழக்கு விவாதங்கள் அடுத்த வாரத்துக்கும் நீடிக்கும். முதலில் வழக்கு விசாரணை நீதிபதிகள் சூரஜ் பான், சின்ஹா மற்றும் மாத்தூர் முன்பு விசாரணைக்கு வரும் என்று பட்டியலில் காட்டப்பட்டது; மாலையில் தலைமை நீதிபதி ரவீந்திரன் மற்றும் பஞ்சால் முன்பு ஜனவரி 16-ஆம் தேதியே விசாரிக்கப்படும் என்று மாற்றப்பட்டது. ஏற்கெனவே ஆட்சேபிக்கப்பட்டும், வழக்கை விசாரிக்க முடியாத ஒரு நீதிபதி முன்பு விசாரணை நடத்தும்படி பதிவு அலுவலகம் எப்படிப் பட்டியலிடலாம்? விவகாரம் அடுத்த வாரத்திலேயோ, அதற்கு முந்தைய தேதியிலோ விசாரணை நடக்கும் என்று ஜனவரி 17, 2008 அன்று தலைமை நீதிபதி தள்ளி வைத்தார். தனிநபர் சுதந்திரம் மீண்டும் மறுக்கப்பட்டது; நாட்டின் அதி உயர்ந்த நீதிமன்றப் பதிவு அலுவலகத்தில் என்ன நடக்கிறது என்று கேள்வி எழுப்பப்படவே இல்லை.

உச்சநீதி மன்றத்தின் இயக்க அமைப்பு முறை குறித்து எந்தக் கேள்வியும் எழுப்ப முடியுமா?

எந்த விவகாரம் தானாக முக்கியத்துவம் பெற முடிகிறது? முக்கியத்துவம் பெற முடியாமல் போகிறது?

எந்த விவகாரம் உச்சநீதி மன்றத்தின் கால தாமதங்களாலும் இடைக்கால உத்தரவுகளாலும் பாதிக்கப்படுகிறது?

தனிநபர் சுதந்திரம், அடிப்படை உரிமைகள் மறுப்பு, பெரும்திரள் குற்றங்கள் ஆகியவற்றுக்கும் பணக்காரர்களை தண்டனைகளில் இருந்து பாதுகாப்பது, ஆதிக்க சாதிகளின் அக்கறைக்குரியவை ஆகியவற்றுக்குமிடையில் எதற்கு முன்னுரிமை வழங்குவது என்பது கிடையாதா?

கேள்வி எழுப்பாவிட்டால் நாம் பதில் பெற முடியாது.

நாட்டின் அதிஉயர்ந்த நீதிமன்றத்தின் பொறுப்புகளைக் கேள்வி கேட்கும் சமயம் வந்துவிட்டது.

இந்திய உச்சநீதி மன்றம் அதன் ஆன்மாவை இழந்து விட்டதா, அடிப்படை உரிமை மீறல்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் கண்கள் குருடாகி விட்டனவா?

அப்படியானால் நாம் யாரிடம் போவது?

•••

இவ்வாறு உச்சநீதி மன்றத்தின் பாரபட்சமான போக்குகளை ஆதாரத்துடன் எடுத்து வைத்து இந்தக் கேள்விகளை எழுப்பி அதை தோலுரித்துக் காட்டிவிட்டார் தீஸ்தா என்பதற்காகத் தான் தலைமை நீதிபதி பாலகிருஷ்ணன் அவர்மீது பாய்ந்திருக்கிறார்.

தமிழ்நாட்டிலே ஒரு கதை சொல்வார்கள். பிறந்தது முதல் பல ஆண்டுகள் பேசாதிருந்த குழந்தை ஏதோ புண்ணியத்தால் பேச்சு வந்து, முதலில் வாய் திறந்ததும் தாயைப் பார்த்துக் கேட்டதாம், ''எப்பம்மா தாலி அறுப்பாய்!'' அதைப் போல முதன்முறையாக ஒரு தலித் உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதியாகியிருக்கிறார் என்று பாலகிருஷ்ணன் பதவியேற்றபோது கொண்டாடினார்கள். அவர் தான் இப்போது ஒரு இந்துமதவெறி பாசிசத்தின் பாதந்தாங்கி என்பதைக் காட்டிவிட்டார்.

உச்சநீதி மன்றம் இவ்வாறான பாரபட்சத்தையும் பச்சையான பாசிச போக்கையும் காட்டுவது ஒன்றும் புதியதில்லை.

நாட்டின் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம், உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி காரே, பிரபல முதிய வழக்குரைஞர் டாண்டன் போன்றவர்களுக்கு எதிராக வெறும் 40,000 ரூபாய் இலஞ்சம் கொடுத்து குஜராத்-அகமதாபாத் குற்றவியல் நீதிபதி பிரம்பட் என்பவரிடம் பிணையில் வரமுடியாத கைது வாரண்ட் வாங்கி, நீதித்துறையில் நிலவும் இலஞ்ச ஊழல் அதிகார முறைகேடுகளை அம்பலத்தினார், 'ஜி' தொலைக்காட்சி பத்திரிக்கையாளர். அந்த நீதிபதியை குற்றமற்றவர் என்று குஜராத் உயர்நீதி மன்றம் தீர்ப்புக் கூறியது. உச்ச நீதி மன்றத்துக்கு இந்த வழக்கு வந்து மத்திய-மாநில அரசுகளுக்கும், குஜராத் உயர்நீதி மன்ற பதிவு அலுவலகத்துக்கும், குற்றவாளி பிரமபட்டுக்கும் நோட்டீசு அனுப்பிய போதும், அரசு, விசாரணை அதிகாரியை நியமிக்காது வழக்கைக் கிடப்பில் போட்டுவிட்டது. ஆனால், நீதித்துறையை அம்பலப்படுத்திய பத்திரிக்கையாளர் விஜய் சேகரை நீதிமன்றத்துக்கு இழுத்து நிபந்தனையற்ற மன்னிப்புக் கேட்டும்படி உத்திரவிட்டுள்ளது, உச்சநீதி மன்றம்.

போலி மோதல் கொலை உட்பட இந்து பாசிச வெறியாட்டத்தை நியாயப்படுத்தி மோடி போன்ற கிரிமினல் குற்றவாளிகள் பகிரங்கமாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தும்கூட, அவர்களைத் தண்டிப்பதில் எந்த வேகமும் விவேகமும் காட்டவில்லை. அதேசமயம் உச்ச நீதி மன்றத் தீர்ப்பை விமர்சித்தார் என்பதற்காக அருந்ததி ராய் மீதும், முன்னாள் தலைமை நீதிபதி சபர்வாலின் அதிகார முறைகேடுகளை அம்பலப்படுத்தியத்திற்காக மும்பை ''மிட்டே'' இதழின் பொறுப்பாளர்களையும் நீதிமன்ற அவமதிப்பு வழக்குப் போட்டுத் தண்டித்தது, உச்சநீதி மன்றம்

அரசின் ஊழல் தடுப்பு அமைப்புகள் போன்ற பிற அங்கங்கள், இராணுவம் உட்பட வேறு ஏதாவது அரசு நிறுவனங்களுக்கோ, நீதிமன்றங்களுக்கோ பதில் சொல்ல வேண்டியவைகளாக, குறைந்தது சட்டப்படியாவது, இருக்கின்றன. ஆனால், உயர் மற்றும் உச்ச நீதி மன்றங்கள் ஜனநாயகபூர்வமாக மக்களுக்கோ, வேறு எந்த அமைப்புக்கோ பதில் சொல்ல வேண்டியதில்லை என்பதால் பச்சை பாசிச ஆட்டம் போடுகிறது.

● ஆர்.கே.

www.padippakam.com

# மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் சிவகங்கை கிளை தொடக்க விழா: நம்பிக்கையின் ஒளிக்கீற்று!

திருச்சி, மதுரை, கடலூர், கோவை மாவட்டங்களில் செயல்பட்டு வரும் மனித உரிமை பாதுகாப்பு மையம் (HRPC) தனது சிவகங்கை மாவட்டக் கிளை தொடக்கவிழாவை கடந்த மார்ச் 2-ஆம் தேதியன்று செந்திலாண்டவர் திருமண மண்டபத்தில் நடத்தியது.

வழக்குரைஞர் கா.அம்பேத்கர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், ம.க.இ.க. மாவட்ட அமைப்பாளர் தோழர் எழில் மாறன், ம.உ.பா. மையத்தின் மதுரை மாவட்ட துணைச் செயலர் வாஞ்சிநாதன், பஞ்சாயத்து செயல் அலுவலர் சங்க மாநிலத் தலைவர் மு.கணேசன், கிராம நிர்வாக அதிகாரிகள் முன்னேற்ற சங்க மாவட்டச் செயலர் சந்திரமோகன், அரசுப் பணியாளர் சங்கத்தின் ஹைதர் அலி மற்றும் மூத்த வழக்குரைஞர்கள் பலர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர். ''சட்டத்தில் சமநிலை; சமூகத்தில் இழிநிலை - இதுவே மனித உரிமைகளின் நிலை'' என்ற தலைப்பில் மதுரை உயர்நீதி மன்ற வழக்குரைஞர் லஜபதிராய் அவர்களும், ''முதுகெலும்பு விவசாயத்தை மோதி முறிக்கும் ஏகாதிபத்திய உலகமயம்'' என்ற தலைப்பில் பெங்களூரு உயர் நீதி மன்ற வழக்குரைஞர் எஸ்.பாலன் அவர்களும் மறுகாலனியத் தாக்குதலுக்கு எதிராகப் போராட அறைகூவிச் சிறப்புரையாற்றினர்.




உலகமயத்தின் தீய விளைவுகளைப் பற்றி உரையாற்றும் வழக்குரைஞர் பாலன்.

தொடக்க விழாவில் கலந்து கொண்ட மக்கள் திரளின் ஒரு பகுதி.



இத்தொடக்கவிழாவை இளையான்குடி சாலை - அண்ணா மலை நகரில் பந்தல்போட்டு நடத்த ஏற்பாடு செய்து வந்த நிலையில், சிவகங்கை போலீசு அதற்குத் திடீர் தடை விதித்தது. அதன்பிறகு பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு நடுவே இவ்விழாவை நடத்திய ம.உ.பா. மையத்தினர், மனித உரிமை அமைப்பினருக்கே இந்த நிலை என்றால், சாமானிய மக்களின் கதியைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை என்று மனித உரிமையின் லட்சணத்தை அம்பலப்படுத்தி விழாவில் உரையாற்றினர். புதிய நிர்வாகிகள் அறிமுகப்படுத்தப்பட்டனர். விழாவின் இறுதியில் நடைபெற்ற ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சி, போராட்ட உணர்வுக்குப் புது ரத்தம் பாய்ச்சியது.

ஏற்கெனவே தாழ்த்தப்பட்டோர் மீதான வன்கொடுமைக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தி உழைக்கும் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ள சிவகங்கை ம.உ.பா.மையம், பாசிச இருள் சூழ்ந்து வரும் இன்றைய நிலையில் மனித உரிமை-ஜனநாயக உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராட இவ்விழாவில் உறுதியேற்றது. திரளான உழைக்கும் மக்களும் ஜனநாயக சக்திகளும் பங்கேற்ற இந்த விழா, சிவகங்கை மாவட்ட மக்களிடம் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.

– பு.ஜ. செய்தியாளர்.

# சாலரப்பட்டி: சாதிவெறியர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

கோவை மாவட்டம் உடுமலைப் பேட்டைக்கு அருகாமையிலுள்ள கிராமமான சாலரப்பட்டியில் அருந்ததியர் மக்கள் மீது படையாச்சிக் கவுண்டர் என்றழைக்கப்படும் வன்னிய ஆதிக்க சாதி வெறியினர் நடத்திய கொலைவெறித் தாக்குதலைக் கண்டித்து ம.க.இ.க., பு.ஜ.தொ.மு., பு.மா.இ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் கடந்த 03.03.08 அன்று மாலை 5.00 மணிக்கு உடுமலை பேருந்து நிலையம் எதிரில் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தின.

தோழர் கி.தங்கவேல் (பு.ஜ.தொ.மு.) தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் தோழர் மணிவண்ணன் (ம.க.இ.க. செயலர், கோவை); தோழர் காஞ்சனா ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

''தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான ஆதிக்க சாதியினரின் வெறியாட்டத்தையும் ஆதிக்க சாதிவெறியினர் மீது நடவடிக்கை எடுக்கத் துணியாத அதிகார வர்க்கத்தின் கள்ளக் கூட்டையும்'' சாடிய இவர்கள், ''சட்டம், நீதி, போலீசு, அதிகார வர்க்கம், ஓட்டுப் பொறுக்கிகள் அனைத்துமே சாதிவெறியர்களுடன் கைகோர்த்து நிற்கும்போது, தாழ்த்தப்பட்டோர் தமது சமூக உரிமைகளுக்காக அனைத்துப் பிரிவு உழைக்கும் மக்களுடன் இணைந்து ஆதிக்க சாதிவெறிக் கும்பலைத் தனிமைப்படுத்தி, அக்கும்பலின் வாக்குரிமை உள்ளிட்ட அனைத்து சிவில் உரிமைகளையும் ரத்து செய்யுமாறு, சட்ட வரம்புகளை மீறி, தெருப் போராட்டத்தில் இறங்குவது ஒன்றே தீர்வு'' என வலியுறுத்தினர்.

பாதிக்கப்பட்ட மக்களும் புரட்சிகர-ஜனநாயக சக்திகளும் திரளாகப் பங்கேற்று நடத்திய இந்த ஆர்ப்பாட்டம், சாதிவெறியர்களுக்கு எதிராக உழைக்கும் மக்கள் ஐக்கியப்பட்டுப் போராட அறைகூவுவதாக அமைந்தது.

— பு.ஜ. செய்தியாளர், கோவை.

www.padippakam.com

# விவசாயக் கடன் தள்ளுபடி:
# புண்ணுக்குப் புனுகு

**உலகமயத்தால் நாசமாக்கப்பட்ட விவசாயம், வங்கிக் கடன் தள்ளுபடி என்ற கவர்ச்சியால் சீர்பட்டு விடாது.**

அடுத்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திக்க வேண்டும் என்பதால், 2008-09-ஆம் ஆண்டுக்கான மைய அரசின் வரவு-செலவு அறிக்கையும், தமிழக அரசின் வரவு-செலவு. அறிக்கையும் விவசாயிகளைக் கவரும் நோக்கத்தோடு தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மைய அரசு 60,000/- கோடி ரூபாய் பெறுமான விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்யப் போவதாக அறிவித்திருக்கிறது; தமிழக அரசின் பட்ஜெட்டில் விவசாயக் கடனுக்கான வட்டி 4 சதவீதமாகக் குறைப்பு; 1,500 கோடி ரூபாய் பெறுமான புதிய விவசாயக் கடன்; பயிர்க் காப்பீடு திட்டத்திற்கு 40 கோடி ரூபாய் ஒதுக்கீடு எனச் சில சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஐந்து ஏக்கர் வரை விளைநிலங்களைச் சொந்தமாகக் கொண்டுள்ள சிறு / குறு விவசாயிகள், 31.3.2007 முடிய பொதுத்துறை வங்கிகள் / கிராமப்புற வங்கிகள் / கூட்டுறவு வங்கிகளிடம் வாங்கிய கடன்கள் அல்லது அந்த தேதி வரை நிலுவையாக இருக்கும் அவர்களின் கடன்களை ரத்து செய்ய ரூ.50,000 கோடியும்; ஐந்து ஏக்கருக்கு மேல் நில உடைமை வைத்திருக்கும் விவசாயிகள், தாங்கள் மேற்படி வங்கிகளில் 31.3.2007-க்குள் வாங்கிய அல்லது தங்களின் பெயரில் நிலுவையில் உள்ள கடன்களில் 75 சதவீதத்தை ஒரே தவணையில் அடைத்து விட்டால், மீதமுள்ள 25 சதவீதக் கடனை ரத்து செய்ய ரூ. 10,000 கோடியும் ஒதுக்கப் போவதாக மைய அரசு அறிவித்துள்ளது. மேலும், இந்த அளவுகோலுக்குள் வரும் விவசாயக் கடன்கள் அனைத்தையும் 30.06.2008-க்குள் ரத்து செய்துவிடுவோம் என்றும் மைய அரசு உறுதியளித்திருக்கிறது.

விவசாயத்தில் உலகமயம் புகுத்தப்பட்ட பிறகுதான் இந்தியாவெங்கும் விவசாயிகள், மீளவே முடியாத கடன் வலைக்குள் சிக்கிக் கொண்டார்கள். அக்கொள்கைப்படி விவசாயிகளுக்கு மானியம்கூடத் தரக்கூடாது என வாதிட்டு வரும் மன்மோகன் சிங் - ப.சிதம்பரம் - மான்டேக் சிங் அலுவாலியா கும்பலிடமிருந்து இந்தக் கடன் தள்ளுபடியைப் பெறுவதற்கு, ஒரு இலட்சத்துக்கும் அதிகமான விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ள வேண்டியிருந்தது.

ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, கேரளா எனப் பரவிய விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள் என்ற சூறாவளி கடந்த மூன்று ஆண்டுகளாக மகாராஷ்டிராவின் விதர்பா பகுதியில்தான் மையம் கொண்டுள்ளது. கடந்த ஆண்டில் மட்டும், விதர்பாவைச் சேர்ந்த 1,242 பருத்தி விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இந்த ஆண்டின் முதல் மூன்று மாதத்திற்குள் (மார்ச் 22 முடிய) 220 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். விதர்பா பருத்தி விவசாயிகளின் இந்தக் "கலகம்"தான், கடன் தள்ளுபடி அறிவிக்கப்படுவதற்குத் தூண்டுகோலாய் அமைந்திருக்கிறது.

எனினும், விதர்பாவைச் சேர்ந்த 18 இலட்சம் பருத்தி விவசாயிகளுள் பெரும்பாலானோருக்கு இக்கடன் தள்ளுபடி கிடைக்க வாய்ப்பேயில்லை. ஏனென்றால் விதர்பாவைப் பொருத்தவரை, இப்பகுதியில் சராசரி நில உடைமை 7.5 ஏக்கராக இருப்பதால், அரசின் கடன் தள்ளுபடியில் இருந்து, பருத்தி விவசாயிகள் விலக்கப்பட்டு விடுவார்கள். விதர்பாவைச் சேர்ந்த சிறு விவசாயிகளிடம் கூட ஐந்து ஏக்கருக்கு மேல் நிலம் உடைமையாக இருப்பதற்குக் காரணம், இப்பகுதி வானம் பார்த்த பூமி என்பதுதான். அதேசமயம், பாசன வசதி மிக்க மேற்கு மகாராஷ்டிராவைச் சேர்ந்த சிறு விவசாயிகளின் சராசரி நில உடைமை ஐந்து ஏக்கருக்கும் குறைவாக இருப்பதால், அவர்களுக்குக் கடன் தள்ளுபடியால் பலன் கிடைக்கும் எனக் கூறப்படுகிறது.

"விதர்பாவின் பருத்தி விவசாயிகளுக்கு 600 கோடி ரூபாய் அளவிற்குதான் கடன் தள்ளுபடி சலுகை கிடைக்கும்; அதேசமயம், மகாராஷ்டிராவின் மேற்குப் பகுதியைச் சேர்ந்த கரும்பு, திராட்சை விவசாயிகளுக்கு இச்சலுகை 6,000 கோடி ரூபாயாக இருக்கும்" என்

**வேளாண்மை வீழ்ச்சியால், வீடு, வயல், கால்நடைகள் உள்ளிட்டு முழு கிராமத்தையும் விற்கப் போவதாக அறிவித்து, மகாராஷ்டிராவின் தோர்லி கிராம நுழைவாயிலில் கட்டப்பட்டுள்ள பதாகை.**





படிப்பகம்

www.padippakam.com

கிறார், விதர்பா மக்கள் இயக்கத்தின் தலைவர் கிஷோர் திவாரி. அதனால் தான், விதர்பா பகுதி விவசாயிகள் நஞ்சை-புஞ்சை என்ற நிலவள வேறுபாட்டை கணக்கில் எடுத்துக் கொண்டு, கடன் தள்ளுபடிக்கான அளவுகோலை மாற்ற வேண்டும் எனக் கோரத் தொடங்கியுள்ளனர்.

அதிகாரத்தில் இருக்கும் மெத்த படித்த மேதாவிக் கும்பலோ, ''தான் பிடித்த முயலுக்கு மூணே கால்'' என அடம் பிடித்து, கடன் தள்ளுபடி நிபந்தனையை மாற்ற மறுக்கிறது. அதனால் தான், கடன் தள்ளுபடி அறிவிக்கப்பட்ட பிறகும்கூட, விதர்பாவில் விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள் நிற்காமல் தொடர்கிறது. அறுவடைப் பண்டிகையான ஹோலியன்று கூட மூன்று பருத்தி விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். விதர்பாவில் எட்டு மணி நேரத்திற்கு ஒரு விவசாயி என்ற அளவில் தற்கொலைச் சாவுகள் தொடருவதாகக் கூறுகிறார், கிஷோர் திவாரி.

நஞ்சை, புஞ்சை என்ற வேறுபாடு மகாராஷ்டிராவில் மட்டுமின்றி, இந்தியாவெங்கிலும், காணப்படக்கூடியது. மைய அரசின் அளவுகோலின்படி பார்த்தால், ஆந்திராவின் அனந்தப்பூர், ராயலசீமா பகுதிகள், தமிழகத்தின் இராமநாதபுரம், விருதுநகர் மாவட்டங்கள், குஜராத்தின் கட்ச், சட்டீஸ்கர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பெரும்பாலான புஞ்சை விவசாயிகளுக்கு, இக்கடன் தள்ளுபடியால் எந்தப் பலனும் கிடைக்காது. இவர்கள் தங்களின் வங்கிக் கடனில் 25 சதவீதம் ரத்து செய்யப்படும் சலுகையைப் பெற வேண்டும் என்றால், 75 சதவீதக் கடனை ஒரே தவணையில் அடைக்க வேண்டும். அந்த அளவிற்கு வசதியிருந்தால், விவசாயி ஏன் கடனைத் தள்ளுபடி செய்யக் கோரிப் போராடியிருக்க வேண்டும்? தற்கொலை முடிவை தெரிவு செய்திருக்க வேண்டும்? இதுவொருபுறமிருக்க, ''வங்கிக் கடனை, கந்துவட்டிக்குக் கடன் வாங்கி அடைத்துவிட்ட சிறு, குறு விவசாயிகளுக்கு மைய அரசு என்ன நிவாரணம் வழங்கப் போகிறது?'' என்ற கேள்வியை விவசாயிகளே எழுப்பி வருகின்றனர்.

•••

தேசிய மாதிரி கணக்கெடுப்பு நிறுவனம், விவசாயிகளின் கடன் பிரச்சினை பற்றி 2003-ஆம் ஆண்டு அளித்துள்ள அறிக்கையில், ''இந்தியாவில் 10-இல் எட்டு விவசாயக் குடும்பங்களுக்கு ஐந்து ஏக்கர் அல்லது அதற்குக் குறைவான நிலம் சொந்தமாக இருப்பதாகவும்; இதில் 50 சதவீதக் குடும்பங்கள், கந்துவட்டிக்காரர்களிடம் சராசரியாக 9,000 ரூபாய் வரை கடன்பட்டிருப்பதாகவும்'' குறிப்பிட்டுள்ளது.



> கடன் தள்ளுபடி என்ற கவர்ச்சியின் பின்னே, கூட்டுறவு வங்கிகளை அரசின் பிடியில் இருந்து விடுவிக்கும் இரகசியத் திட்டம் மறைந்திருக்கக் கூடும் என சிதம்பரத்தின் இரசிகர்களே சந்தேகிக்கின்றனர்.

''இந்திய விவசாயிகளுள் 42.3 சதவீதத்தினருக்கு வங்கிகளில் கடன் கிடைப்பதில்லை; அவர்கள் பயிர்க் கடனுக்குக் கந்துவட்டிக் கும்பலைத்தான் நம்பியிருக்கிறார்கள்; 2003-ஆம் ஆண்டு நிலவரப்படி விவசாயிகளின் கந்துவட்டிக் கடன் 43,000 கோடி ரூபாயாகும்'' என வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் குறிப்பிடுகிறார். இப்புள்ளிவிவரங்கள்கூட முழுமையானது; உண்மையானது எனச் சொல்லி விட முடியாது.

கந்துவட்டிக் கும்பலின் அச்சுறுத்தலுக்கும், அவமதிப்புக்கும் பயந்துதான், விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கின்றனர். விவசாயிகளின் நிலங்களைச் சட்டவிரோதமாகப் பறித்துக் கொள்ளும் அளவிற்கு அபாயகரமானதாக கந்துவட்டிக் கும்பல் வளர்ந்து நிற்கிறது. ''கடன் நிவாரண கமிசன் ஒன்றை அமைத்து, அதன் மூலம் தங்களின் கந்துவட்டிக் கடனை அடைப்பதற்குக் குறைந்த வட்டியில் கடன் கொடுக்க வேண்டும்'' என விவசாயிகள் கோரி வருகிறார்கள். ப.சிதம்பரம் இக்கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டதோடு, கந்துவட்டிக்கும் அரசுக்கும் சம்பந்தம் இல்லை எனக் கையை விரித்து விட்டார்.

இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் கந்துவட்டிக்கு எதிராகப் பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. இச்சட்டங்களைப் பயன்படுத்தி, விவசாயிகள் கந்துவட்டிக் கும்பலிடம் பட்ட கடன்கள் அனைத்தையும் நட்டாடின்றி ரத்து செய்ய எந்தவொரு மாநில அரசும் தயாராக இல்லை. பஞ்சாப் மாநிலத்தில், விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் வேளாண் விளைபொருட்களுக்கான கட்டணத்தைக் கொடுக்கும்பொழுது, அதில் 67 சதவீதத்தைப் பணமாக, கந்துவட்டிக்காரர்கள் மூலம் விவசாயிகளுக்குக் கொடுப்பதை சட்டமே அங்கீகரிக்கும் அளவிற்கு, அக்கும்பலின் அரசியல் செல்வாக்கு கொடிகட்டிப் பறக்கிறது. கந்துவட்டிக் கடன் கொடுமையைக் கண்டு கொள்ளாமல், வங்கிக் கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்தால் கூட, அது பாதிக் கிணறு தாண்டிய கதையாகத்தான் முடியும்.

•••

''இந்திய வங்கித் துறையின் வளர்ச்சி மற்றும் தற்காலப் போக்கு'' எனும் தலைப்பில் இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில், ''2003-ஆம் ஆண்டு தொடங்கி 2006 வரையிலும் பொதுத்துறை வங்கிகள், விவசாயிகளுக்குக் கொடுத்த கடனில் 75 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையிலான கடன்கள் வசூலிக்கப்பட்டு விட்டதாகவும்; 2006-ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி அதற்கு முந்தைய ஆண்டுக் கடன்கள் முழுமையாக வசூலிக்கப்பட்டிருப்பதாகவும்; 2006-ஆம் ஆண்டின்படி, பொதுத்துறை வங்கிகள் / கிராமப்புற வங்கிகள் / கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள்ள மொத்த விவசாயக் கடன்களில் சிறு/குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய கடன் 22,507 கோடி ரூபாய் தான்'' என்றும் குறிப்பிட்டுள்ளது.

www.padippakam.com

இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால், வங்கிகளில் சிறு/குறு விவசாயிகள் வாங்கியுள்ள கடனில் 50,000 கோடியை ரத்து செய்யப் போவதாக ப.சிதம்பரம் கூறியிருப்பதை உண்மைக்குப் புறம்பான, ஊதிப் பெருக்கப்பட்ட, ஓட்டுப் பொறுக்குவதற்கான கவர்ச்சி அறிவிப்பு என்றுதான் சொல்ல வேண்டும்; இல்லையென்றால், விவசாயிகளின் பெயரைச் சொல்லி, வேறெந்த கும்பலோ கடன் வாங்கி ஏப்பம் விட்ட தொகையை அடைக்கும் திருட்டுத்தனமாக இருக்க வேண்டும்.

இந்தக் கவர்ச்சி வேடம் கலைந்துவிடக் கூடாது என்பதற்காகவே, ப.சிதம்பரம் பொதுத்துறை வங்கிகள் / கூட்டுறவு வங்கிகள் 31.3.2007 முடிய எவ்வளவு விவசாயக் கடன்களை வழங்கியுள்ளன? அதில் சிறு/குறு விவசாயிகளுக்கு எவ்வளவு கடன் வழங்கப்பட்டுள்ளது? விவசாயக் கடன் தள்ளுபடிக்காக அரசு எவ்வளவு நிதி ஒதுக்கியுள்ளது? போன்ற விவரங்களை பட்ஜெட் அறிக்கையில் குறிப்பிடாமல், ஒதுக்கித் தள்ளிவிட்டார் போலும்.

இன்னும் விளக்கமாகச் சொன்னால், விவசாயக் கடன் தள்ளுபடி என்ற வார்த்தை பட்ஜெட் அறிக்கையில் எங்குமே இடம் பெறவில்லை; அதற்காக பட்ஜெட்டில் ஒரு பைசா கூட நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ப.சிதம்பரம் பட்ஜெட் உரையை நாடாளுமன்றத்தில் படிக்கும்பொழுது, விவசாயக் கடன் தள்ளுபடியை ஒரு திடீர் அறிவிப்பாகத்தான் வெளியிட்டார்.

மைய அரசால், கூட்டுறவு வங்கிகளைச் சீர்திருத்துவதற்காக அமைக்கப்பட்ட கமிட்டி, ''கடன் வழங்குவது மற்றும் வசூலிப்பது, கடனைத் தள்ளுபடி செய்வது ஆகிய நிர்வாக நடவடிக்கைகளில் அரசின் தலையீட்டை அறவே ஒழித்து விட வேண்டும்'' என்ற ஆலோசனையை ஏற்கெனவே வழங்கியுள்ளது. கூட்டுறவு வங்கிகளில் நிலுவையாக உள்ள கடன்களைத் தள்ளுபடி செய்ய ரூ. 18,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்துவிட்டு, இப்பரிந்துரையை அமல்படுத்த மைய அரசும், மாநில அரசுகளும் தயாராக இருந்து வந்தன. தற்பொழுது அறிவிக்கப்பட்டுள்ள கடன் தள்ளுபடி என்ற கவர்ச்சியின் பின்னே, கூட்டுறவு வங்கிகளை அரசின் பிடியில் இருந்து விடுவிக்கும் இரகசியத் திட்டம் மறைந்திருக்கக் கூடும் என முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்களே சந்தேகிக்கின்றனர்.

''நெல், கோதுமை உள்ளிட்ட அனைத்து விவசாய விளைபொருட்களுக்கும் கட்டுப்படியாகக் கூடிய விலையை அரசு நிர்ணயிக்க வேண்டும். சர்வதேச விலை ஏற்ற/இறக்கங்கள், உள்ளூர் இடைத்தரகர்களின் ஆதிக்கம் போன்றவற்றால் விவசாயிகளுக்கு நட்டமேற்படுவதைத் தடுக்க, 'விலை நிலைப்படுத்தல் நிதியம்' ஒன்றை உருவாக்க வேண்டும்; விவசாய இடுபொருட்களின் விலை அதிகரித்துக் கொண்டே செல்வதைத் தடுக்க வேண்டும்; விவசாயிகள் பெயரில் தரப்படும் உர மானியத்தை உரக் கம்பெனி முதலாளிகள் சுருட்டிக் கொள்வதைத் தடுக்க வேண்டும்; பொதுத்துறை வங்கிகள், விவசாயத்திற்குக் கடன் வழங்குவதற்கு முன்னுரிமை தருவதோடு, விவசாயக் கடனுக்கான வட்டியை 7 சதவீதத்தில் இருந்து 4 சதவீதமாகக் குறைக்க வேண்டும். கடன் வலையில் சிக்கித் தவிக்கும் விவசாயிகளுக்கு உதவிட கடன் நிவாரண கமிசன் ஒன்றை ஏற்

# கொள்ளைக் கூட்டத்தின் ஒப்பாரி

''இப்படிக் கடன் தள்ளுபடி ஆவது, பொருளாதாரத்திற்கும் நல்லதல்ல; கடன் வாங்கியவர்களின் பொறுப்புணர்வு வளர்வதற்கும் உகந்தது அல்ல. இன்று கடன் வாங்கினால், நாளை அது தள்ளுபடி என்ற வழக்கம், ஊதாரித்தனத்தையும் நேர்மையின்மையையும் வளர்க்கும்; பொருளாதாரத்தையும் நசுக்கும்'' என துக்ளக் ''சோ'' எழுதுகிறார். இது அவரின் சொந்த கருத்து மட்டுமல்ல. விவசாயக் கடன் தள்ளுபடி குறித்த விமர்சனம் என்ற பெயரில் மேட்டுக்குடி கும்பலின் வர்க்க வெறுப்பும், பொச்சரிப்பும் இப்படித்தான் பொங்கி வழிகிறது.

ஒரு 60,000 கோடி ரூபாய் தள்ளுபடி (இதுவே ஃபிராடு என்பது தனிக்கதை) குறித்து இப்படி அங்கலாய்த்துக் கொள்ளும் ''சோ'' வகையறாக்கள், ஒவ்வொரு ஆண்டும் வரிச் சலுகை என்ற பெயரில் பல பத்தாயிரக்கணக்கான கோடி ரூபாய்கள், தரகு முதலாளிகள் - மேல்தட்டு வர்க்கத்திற்காகத் தள்ளுபடி செய்யப்பட்டு வருவது குறித்து கள்ள மௌனம் சாதிக்கிறார்கள்.

கடந்த (2007-08) பட்ஜெட்டில், பெரும் முதலாளித்துவ நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட வரிச் சலுகையால் அரசுக்கு ஏற்பட்ட நட்டம் 58,655 கோடி ரூபாய். இது, அதற்கு முந்தைய ஆண்டு ஏற்பட்ட இழப்பை விட 30 சதவீதம் அதிகமாகும்.

பங்குதாரர் நிறுவனங்கள் உள்ளிட்ட பிற வர்த்தகத் தொழில் நிறுவனங்களுக்கு 2007-08 பட்ஜெட்டில் கொடுக்கப்பட்ட வரிச் சலுகையால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு ரூ. 4,000 கோடி.

தனிப்பட்ட நபர்களுக்கு, 2007-08 பட்ஜெட்டில் கொடுக்கப்பட்ட வருமான வரிச் சலுகையால் ஏற்பட்ட இழப்பு 38,000 கோடி ரூபாய்.

நுகர்பொருள் விற்பனையைத் தாங்கி நிற்பதற்காகவே மேட்டுக்குடியினருக்கு வரிச் சலுகைகள் வாரியிறைக்கப்படுகின்றன.



www.padippakam.com

படுத்த வேண்டும்.'' - இவைதான், விவசாயிகளின் முக்கிய கோரிக்கைகள்.

உலகமயம் என்ற பெயரில் விவசாயத் தொழில் சூதாட்டமாக மாறிப் போனதை மீட்டெடுக்க வேண்டும் என்பதுதான் விவசாயிகள் முன்வைத்துள்ள கோரிக்கைகளின் உட்பொருள். ஆனால், ப.சிதம்பரமோ இந்த அடிப்படையான உற்பத்தி சார்ந்த கோரிக்கைகளுள் ஒன்றைக் கூட ஏற்கவில்லை. மாறாக, அழும் குழந்தையை மிட்டாய் கொடுத்து ஏமாற்றுவது போல, கடன் தள்ளுபடி என்ற கவர்ச்சிகரமான, அரை வேக்காட்டுத்தனமான திட்டத்தை அறிவித்திருக்கிறார்.

அரசின் வருமானம் கடந்த பட்ஜெட்டை விட இந்த ஆண்டு 15 சதவீதம் அதிகரிக்கும் எனக் கூறப்பட்டாலும், உணவு மானியம், கிராமப்புற வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம், கல்வி, சுகாதாரம், பாசன வசதி, பயிர்க் காப்பீடு உள்ளிட்டு எந்தவொரு சமூக நலத் திட்டத்திற்கும் தேவையான நிதி ஒதுக்கப்படவில்லை. ப.சிதம்பரத்தைப் பொருத்தவரை, 9 சதவீதப் பொருளாதார வளர்ச்சியைக் கட்டிக் காக்க வேண்டும்; பற்றாக்குறையைக் குறைத்து, உலக வங்கியின் பாராட்டைப் பெற வேண்டும் என்பதுதான் குறிக்கோள். தனது முதல் இலக்கை அடைய தரகு முதலாளிகளுக்கும், மேட்டுக்குடி கும்பலுக்கும் வரிச் சலுகைகளை வாரியிறைத்திருக்கும் ப.சிதம்பரம், இரண்டாவது குறிக்கோளை நிறைவேற்ற, மக்களின் வயிற்றில் அடித்திருக்கிறார்.



கடன் தள்ளுபடியையல்ல, மைய அரசின் விவசாயக் கொள்கையையே கைவிடக் கோரி பஞ்சாப் மாநில விவசாயிகள் அமிர்தசரஸ் நகரில் நடத்திய ரயில் மறியல் போராட்டம்.

● ரஹீம்

தொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட உற்பத்தி வரிச் சலுகையால், 2007-08-இல் அரசுக்கு ஏற்பட்ட வருமான வரி இழப்பு 88,000 கோடி ரூபாய்.

சுங்கவரி விதிப்பில் கொடுக்கப்பட்ட சலுகைகளால், அரசுக்கு ஏற்பட்ட இழப்பு 1.48 இலட்சம் கோடி ரூபாய்.

மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளில் கூட, பெரும் முதலாளித்துவ நிறுவனங்கள் மீது விதிக்கப்படும் ''கார்ப்பரேட் வரி'' சராசரியாக 33.66 சதவீதமாக இருக்கும் பொழுது, இந்தியாவில் தரகு முதலாளித்துவ நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்கள் மீது விதிக்கப்படும் சராசரி ''கார்ப்பரேட் வரி'' 20.6 சதவீதம்தான்.

2007-08-ஆம் ஆண்டுக்கான வரி வருமானத்தைத் தாக்கல் செய்துள்ள 3,28,000 நிறுவனங்களில், ஒரு சதவீதத்துக்கும் குறைவான, வருடத்திற்கு 50 கோடி ரூபாய் முதல் 500 கோடி ரூபாய்க்கும் மேல் இலாபமீட்டும் நிறுவனங்கள் மீது விதிக்கப்பட்ட கார்ப்பரெட் வரி 19 சதவீதம் தான். தகவல் தொழில் நுட்பத் துறையைச் சேர்ந்த பி.பி.ஓ. நிறுவனங்கள், மென்பொருள் தயாரிப்பு நிறுவனங்களின் மீது விதிக்கப்பட்ட ஒட்டுமொத்த சராசரி வரி 2.08 சதவீதம் தான். அதேசமயம், பொதுத்துறை நிறுவனங்கள் மீது 23.35 சதவீதம் கார்ப்பரேட் வரி விதிக்கப்பட்டுள்ளது.

ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் தரகு முதலாளிகளுக்கும், மேட்டுக்குடி கும்பலுக்கும் அளிக்கப்பட்ட பல்வேறு வரித் தள்ளுபடிகளால் அவர்கள் 2007-08-இல் அடைந்துள்ள இலாபம் மட்டும் 2.79 இலட்சம் கோடி ரூபாய். வரி ஏய்ப்பின் மூலம் அவர்கள் அடிக்கும் கொள்ளை இந்தக் கணக்கில் சேராது.

2000-க்கும் 2004-க்கும் இடைபட்ட ஆண்டுகளில் மட்டும், பொதுத்துறை வங்கிகள் முதலாளித்துவ நிறுவனங்களுக்குக் கொடுத்திருந்த கடனில், ரூ.44,000/- கோடியை வாராக்கடன் என எழுதி தள்ளுபடி செய்துள்ளன. இந்தத் தள்ளுபடியால் பலன் அடைந்தவர்களுள், பங்குச் சந்தை மோசடியில் ஈடுபட்டதால் கைது செய்யப்பட்ட கேதான் பாரேக் என்ற கிரிமினலும் அடங்குவான். அவன் வாங்கியிருந்த 60 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

2008-09-ஆம் ஆண்டு பட்ஜெட்டில் கொடுக்கப்பட்ட வருமான வரிச் சலுகையால், வருமான வரி கட்டும் 3.2 கோடி பேரில், ஒவ்வொருவருக்கும் அவரின் வருமானத்துக்கு ஏற்ப, ரூ.4,100/- முதல் ரூ.50,000/- வரை இலாபம் கிடைக்கும். இந்த இலாபம், கடன் தள்ளுபடியால் ஒவ்வொரு உழவனுக்கும் கிடைக்கப் போகும் பணச் சலுகையைவிட அதிகமாகும். ''இந்த வருமான வரிச் சலுகையால், இவர்கள் வெளிநாட்டுக்குச் சுற்றுலா போகலாம்; அல்லது இரண்டாவது கார் வாங்கி ஓட்டலாம்'' எனப் பொருளாதார நிபுணர்கள் குதூகலித்து எழுதுகின்றனர்.

விவசாயிகள் உயிர் வாழ்வதற்கும், நாட்டிற்கு உணவு கொடுப்பதற்கும் சலுகை கேட்டால், மேட்டுக்குடி கும்பலுக்கோ, அவர்களின் ஊதாரி-சுகபோக வாழ்வுக்குச் சலுகைகள் வாரியிறைக்கப்படுகின்றன. விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் 'கடன் தள்ளுபடி' ஊதாரித்தனம் என்றால், முதலாளிகளுக்குக் கொடுக்கப்படும் வரி மற்றும் கடன் தள்ளுபடியை என்னவென்பது? ●

www.padippakam.com

### வன்னிய கிறித்தவர்களின் சாதிவெறியாட்டம்:

# தேவனின் ராஜ்ஜியத்திலும் தீண்டாமை

**இந்தியக் கிறித்துவ சமயப் பிரிவிலும் ஆதிக்க சாதிவெறி புழுத்து நாறுவதை எறையூர் தாக்குதல் சம்பவம் அம்பலப்படுத்தி விட்டது.**

**பா**ர்ப்பன இந்து மதத்தைப் போலவே, இந்தியாவில் கிறித்துவ மதத்திலும் சாதிய - தீண்டாமைக் கொடுமைகள் நீடித்திருப்பதை எறையூரில் வன்னிய கிறித்தவர்கள், தாழ்த்தப்பட்ட கிறித்தவர்கள் மீது நடத்திய வெறியாட்டம் மீண்டும் நிரூபித்துக் காட்டியிருக்கிறது.

விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகிலுள்ள எறையூரில் ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட ரோமன் கத்தோலிக்கப் பிரிவைச் சேர்ந்த ஜெபமாலை அன்னை தேவாலயம் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் வன்னிய கிறித்தவர்கள் பெரும்பான்மையாகவும்; தாழ்த்தப்பட்ட கிறித்தவர்கள் சிறுபான்மையாகவும் உள்ளனர். சாதி-தீண்டாமையைக் கோட்பாட்டளவில் கிறித்துவ மதம் ஏற்காத போதிலும், இக்கிராமத்தில் தாழ்த்தப்பட்ட கிறித்தவர்கள் மீது வன்னிய கிறித்தவர்களின் ஆதிக்கமும் அடக்குமுறையும் நீண்டகாலமாகப் பங்குத் தந்தையின் ஆசியோடு நீடித்து வருகிறது.

தாழ்த்தப்பட்ட கிறித்தவர்களுக்குத் தனிக் கல்லறை, தனிசவஊர்தி (தூம்பா), தேவாலயத்தின் பொதுவழியைப் பயன்படுத்த அனுமதி மறுப்பு, ஆலயத்திற்குள் நுழையவிடாமல் தடை, ஊர்ப் பஞ்சாயத்து என்ற பெயரில் கட்டப் பஞ்சாயத்து நடத்தி தாழ்த்தப்பட்ட கிறித்தவர்களுக்கு அபராதமும் தண்டனையும் விதிப்பது, சாதிவெறியோடு தாழ்த்தப்பட்டோரைக் கிண்டல்-கேலி செய்து அவமதிப்பது என வன்னிய கிறித்தவர்களின் சாதிவெறிக் கொட்டம் கேள்விமுறையின்றித் தொடர்ந்து வருகிறது.

கடந்த 1999-ஆம் ஆண்டு பிப்ரவரி 16-ஆம் நாளன்று, முகையூரில் பாதிரியாராக இருந்த எறையூரைச் சேர்ந்த தலித் கிறித்தவரான ஃபாதர் இருதயநாதனின் தாயாரது இறுதி ஊர்வலத்தைத் தேவாலயத்தின் பொதுவழியாகச் செல்லத் தடைவிதித்து, ஆயுதங்கள் - வெடிகுண்டுகளுடன் சாலையை மறித்து வன்னிய கிறித்தவ சாதிவெறியர்கள் எச்சரிக்கை விடுத்தனர். புதுச்சேரி - கடலூர் மறை மாவட்டப் பேராயர் வந்து கெஞ்சியும் கூட இச்சாதிவெறியர்கள் அசைந்து கொடுக்கவில்லை. வேறு வழியின்றி ஃபாதர் இருதயநாதன் தாழ்த்தப்பட்டோருக்கென விதிக்கப்பட்ட குறுகிய சந்தின் வழியாகத் தனது தாயாரின் உடலை எடுத்துச் சென்று, தலித்துகளுக்கான தனிக் கல்லறையில் அடக்கம் செய்தார். பாதிரியாருக்கே இந்தக் கதி என்றால், சாமானிய தலித் கிறித்தவர்களின் மீதான வன்னிய கிறித்தவ சாதிவெறியர்களின் அடக்குமுறை பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

எறையூரில் கடந்த ஆண்டு ஆகஸ்டில் நடந்த திருவிழாவின் போது தேவாலயத்திற்கு வழிபடச் சென்ற தாழ்த்தப்பட்ட கிறித்தவப் பெண்களை செல்போனில் படம் பிடித்த வன்னிய கிறித்தவ இளைஞர்களைத் தட்டி கேட்டதற்காக வன்னிய சாதிவெறியர்கள் அடிதடி - கைகலப்பில் இறங்கினர். தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் தீண்டாமை வழக்கின் கீழ் புகார் கொடுத்ததும், மளிகைக் கடைகளில் தாழ்த்தப்பட்டோருக்குப் பலசரக்குகளைக் கொடுக்கக் கூடாது, ஓட்டல்களில் சாப்பாடு கொடுக்கக் கூடாது என்று தடைவிதித்தனர். இந்த அவமானங்களையும் புறக்கணிப்புகளையும் கண்டு குமுறிய தாழ்த்தப்பட்ட கிறித்தவர்கள், தங்களுக்கென தனியாக சகாயமேரி மாதா ஆலயம் என்ற பெயரில் தனி தேவாலயத்தை கடந்த டிசம்பரில் கட்டியமைத்துக் கொண்டனர். இத்தேவாலயத்திற்கு புதுச்சேரி-கடலூர் மறை மாவட்ட அங்கீகாரத்தையும் தனி பாதிரியாரையும் கேட்டு விண்ணப்பித்தனர். ஆனால், சாதி அடிப்படையிலான தனி தேவாலயத்தை அனுமதிக்க முடியாது என்று நிராகரித்தது கிறித்தவ பேராயம்.

தாங்கள் கட்டிய தேவாலயமும் முழுமையடையாமல், ஜெபமாலை அன்னை தேவாலயத்திலும் வழிபட முடியாமல் தத்தளித்த தாழ்த்தப்பட்ட மக்கள், கடந்த மார்ச் முதல் வாரத்தில்

**வன்னிய சாதி வெறியாட்டம்: நொறுக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோரின் உடைமைகள்.**




படிப்பகம்

www.padippakam.com

''சாதிப் பாகுபாட்டை நீக்கு; இல்லாவிட்டால் சாதிப் பாகுபாடு காட்டும் தேவாலயத்தைப் பூட்டு'' என்று முழக்கத்துடன் சுவரொட்டிகளை ஒட்டி, தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டனர். ஆனாலும் உள்ளூர் தேவாலயப் பாதிரியாரோ, மாவட்ட முதன்மை குருவோ, பேராயரோ, மூன்றாவது நாள் உண்ணாவிரதத்தில் சிலர் மயங்கி விழுந்த பின்னரும் எட்டிக் கூடப் பார்க்காமல் அலட்சியப்படுத்தினர்.



ஈஸ்டர் பண்டிகையைப் புறக்கணித்து, சாதிப் பாகுபாடு காட்டும் தேவாலயத்துக்குப் பூட்டு போட்டு... பண்ருட்டி அருகே அழகப்பா சமுத்திரத்தில் தீண்டாமைக்கெதிராக தாழ்த்தப்பட்ட கிறித்தவர்களின் ஆர்ப்பாட்டம்.

மதகுருபீடமே தாழ்த்தப்பட்டோரை அலட்சியப்படுத்திப் புறக்கணிப்பதைக் கண்ட வன்னிய சாதிவெறியர்கள் சும்மா இருப்பார்களா? ''தேவாலயத்தைப் பூட்டுவோம்னு போஸ்டராடா ஒட்டுறீங்க?'' என்று அரிவாள், தடிகளோடு மார்ச் 9-ஆம் தேதியன்று நூற்றுக்கணக்கில் திரண்ட சாதிவெறியர்கள், தாழ்த்தப்பட்டோரை மிருகத்தனமாகத் தாக்கி அவர்களது வீடுகளை இடித்து நாசப்படுத்தி, அற்ப உடைமைகளைச் சூறையாடி வெறியாட்டம் போட்டனர். தேவாலய விவகாரத்தையொட்டி பாதுகாப்புக்காகக் குவிக்கப்பட்டிருந்த போலீசாரையும் இச்சாதி வெறியர்கள் தாக்கியதால் ஆத்திரமடைந்த போலீசு கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தி இருவரைக் கொன்று பலரைப் படுகாயப்படுத்தியது.

இத்துப்பாக்கிச் சூட்டில் இறந்த இரு வன்னிய கிறித்தவர்களின் உயிருக்குப் பழிக்குப் பழியாக இருபது தலித்துகளைக் கொன்று பதிலடி கொடுப்போம் என்று வெளிப்படையாக ஆதிக்க சாதியினர் அச்சுறுத்தி வருகின்றனர். முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் வி.எஸ்.ஆசீர்வாதம் (தி.மு.க), இந்நாள் தலைவர் எம்.சி. ஆரோக்கியதாஸ் (அ.தி.மு.க.) மற்றும் பாதிரியார் இலியாஸ் ஆகிய மூவரும் கூட்டணி சேர்ந்து கொண்டு வன்னிய சாதிவெறியர்களை வழிநடத்துகின்றனர். இம்மூவர் கூட்டணியோ, வன்னிய சாதி வெறியர்களோ இன்றுவரை கைது செய்யப்படவில்லை. அவர்கள் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டமும் பாயவில்லை.

பானை சோற்றைப் பதம் பார்த்தாற் போல, தமிழகமெங்கும் பல தேவாலயங்களில் நிலவும் சாதிப்பாகுபாடு - தீண்டாமைக்கு எறையூர் ஓர் உதாரணம். பல பகுதிகளில் தாழ்த்தப்பட்டோருக்குத் தனிக் கல்லறை, வழிபாட்டு உரிமை மறுப்பு, தாழ்த்தப்பட்ட பாதிரியாரை அவமதித்தல் எனத் தீண்டாமைக் கொடுமைகள் பரவலாக தொடர்ந்து நீடிக்கின்றன. கிறித்தவ மதம் இந்தியாவில் நுழையும் போதே, பார்ப்பன இந்து மதத்தின் சாதிய-தீண்டாமைகளோடு சமரசம் செய்து கொண்டுதான் படிப்படியாகக் காலூன்றியது. இன்று அது ஆதிக்க சாதியினருடன் கூட்டுச் சேர்ந்து தாழ்த்தப்பட்டோரை ஒடுக்குமளவுக்கு மாறிவிட்டது.

இந்து மதத்தில் தாழ்த்தப்பட்டோருக்கு பெயரளவிலாவது சட்டப் பாதுகாப்பு உள்ளது. ஆனால், கிறித்தவ மதத்தில் அதுகூடக் கிடைப்பதில்லை. மதச் சிறுபான்மையினர் விவகாரம் என்பதால், தொடரும் இச்சாதிவெறித் திமிரையும் தீண்டாமைக் கொடுமையையும் தமிழக அரசு கண்டும் காணாமல் இருக்கிறது. சாதிப் பாகுபாட்டை ஒழிக்கச் சட்டரீதியாக நெருக்கடி கொடுக்கக் கூட அது தயங்குகிறது.

இருப்பினும், விழுப்புரம் - கடலூர் மாவட்டங்களில் தமது செல்வாக்குள்ள பகுதிகளில் தாழ்த்தப்பட்ட பாதிரியார்களும் கிறித்தவ தன்னார்வக் குழுக்களும் தாழ்த்தப்பட்ட கிறித்தவர்களை அணிதிரட்டி விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் துணையுடன் ஈஸ்டர் பண்டிகையைப் புறக்கணிக்கும் போராட்டத்தை அறிவித்து, 21 தேவாலயங்களைப் பூட்டி கருப்புக் கொடியேற்றும் போராட்டத்தை கடந்த மார்ச் 16 அன்று நடத்தினர். அதன் தொடர்ச்சியாக, இப்பாதிரியார்களும் தன்னார்வக் குழுக்களும் தாழ்த்தப்பட்டோரைத் திரட்டி வந்து திருமாவளவன் தலைமையில் புதுச்சேரியில் ஆர்ப்பாட்டமும் நடத்தினர். ஈஸ்டர் பண்டிகை நேரத்தில் இவ்வளவு தேவாயலங்களிலும் வழிபாடு நடக்காததை வைத்துப் பேராயரின் பதவியே பறிக்கப்பட்டு விடும் என்பதால், அரண்டு போன கடலூர்-புதுவை மறைமாவட்டப் பேராயரான ஆனந்தராயர், ''இனி சாதிப் பாகுபாடே இருக்காது; அனைவரும் தேவாலயத்தில் வழிபடலாம்'' என்று வாக்குறுதி அளித்துள்ளார். சாதிவெறியர்களுடன் கூடிக் குலாவிக் கொண்டு இதை எப்படிச் செயல்படுத்த முடியும் என்பது அவருக்கே வெளிச்சம்.

மறுபுறம், எறையூர் வன்னிய கிறித்தவர்களோ பேராயரின் முடிவை ஏற்க மறுத்து, தங்களுக்கும், தலித்துகளுக்கும் தனித்தனியே பங்கு கொடுக்க வேண்டும் என்றும், இல்லையேல் மதம் மாறப் போவதாகவும் கொக்கரிக்கின்றனர். அவர்களது சாதிய அடக்குமுறையை அங்கீகரிக்கும் இந்து மதத்துக்கு அவர்கள் மாறினாலும், சொத்துரிமை - வாக்குரிமையையோ, இடஒதுக்கீட்டு சலுகைகள் - பதவிகளையோ அவர்கள் இழக்கப் போவதில்லை. இதனாலேயே இன்னமும் சாதியத் திமிரோடு அவர்ளால் மிரட்டி எச்சரிக்கை விடுக்க முடிகிறது.

இந்நிலையில் இச்சாதிவெறியர்களைத் தனிமைப்படுத்தி, அவர்களின் வாக்குரிமை ஜனநாயக உரிமை, இடஒதுக்கீடு உரிமை உள்ளிட்டு அனைத்து உரிமைகளையும் சலுகைகளையும் ரத்து செய்யக்கோரி போராட்டங்களைத் தொடர வேண்டும். எறையூர் மற்றும் கடலூர் - விழுப்புரம் மாவட்டத் தாழ்த்தப்பட்ட கிறித்தவர்கள் தொடங்கியுள்ள தீண்டாமைக்கெதிரான இப்போராட்டத்தை ஆதரித்து, அனைத்து மதங்களிலும் நீடிக்கும் சாதிய - தீண்டாமைக் கொடுமைகளுக்கு முடிவு கட்டும் பெரும் போராட்டமாக முன்னெடுத்துச் செல்லவேண்டும். இது மதச்சார்பற்ற புரட்சிகர-ஜனநாயக சக்திகளின் முன்னுள்ள மாபெரும் கடமை; நமது கடமை.

● தனபால்

www.padippakam.com

# சரப்ஜித் சிங்குக்கு ஒரு நீதி, அப்சல் குருவுக்கு வேறொரு நீதியா?

இந்தியா-பாக். இடையேயான உறவு சாண் ஏறினால் முழம் வழுக்கும் வழுக்குப்பாறை போன்றது. உப்புப் பெறாத விசயத்தைக்கூட ஊதிப் பெருக்கி, முட்டல்-மோதல் நிலைக்குக் கொண்டுவந்து நிறுத்துவதில் இரு நாட்டு ஆளும் கும்பலும் கை தேர்ந்தவர்கள். அப்படிப்பட்டவர்களுக்கு "சென்டிமென்டை"த் தூண்டிவிடக் கூடிய பிரச்சினை கிடைத்தால், சும்மா விட்டு விடுவார்களா?

சரப்ஜித் சிங்- இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த இவர், கடந்த 17 ஆண்டுகளாக பாக்.சிறையில் தூக்குத் தண்டனைக் கைதியாக அடைபட்டுக் கிடக்கிறார். பாக்.-இல் உள்ள லாகூர், ஃபைசலாபாத், கஸுர் ஆகிய மூன்று நகரங்களில் 1990 ஆம் ஆண்டு நடந்த குண்டு வெடிப்புகளில் 14 பேர் கொல்லப்பட்டனர். சரப்ஜித் சிங்கை பாக். எல்லைக்குள் வைத்துக் கைது செய்த போலீசார், அவருக்கும் இந்தக் குண்டு வெடிப்புகளுக்கும் தொடர்பு இருப்பதாகக் குற்றஞ்சுமத்தி, இந்த வழக்கில் அவருக்குத் தூக்குத் தண்டனையும் வாங்கிக் கொடுத்தனர். சரப்ஜித் சிங்கின் மீதான குற்றச்சாட்டு பாக். உச்சநீதி மன்றத்திலும் 'நிரூபிக்கப்பட்டு', தூக்கு தண்டனையும் உறுதி செய்யப்பட்டது. பாக். அதிபரால் அவரது கருணை மனுவும் நிராகரிக்கப்பட்டு, ஏப்ரல் 1 அன்று அவரது தண்டனையை நிறைவேற்றப் போவதாக அறிவிக்கப்பட்டது.

சரப்ஜித் சிங்கைத் தூக்கிலிடும் தேதி திடீரென முடிவு செய்யப்பட்டதற்கு பின்னே, சில வக்கிரமான உண்மைகள் உண்டு. பாக். சிறையில் தூக்கு தண்டனைக் கைதியாக அடைபட்டுக் கிடந்த, இந்தியாவைச் சேர்ந்த காஷ்மீர் சிங்கை மன்னித்து, விடுதலை செய்து, கடந்த மார்ச் 3 அன்று இந்தியாவிற்கு அனுப்பி வைத்தது, பாக்.அரசு. காஷ்மீர் சிங் 35 ஆண்டுகளாக பாகிஸ்தான் சிறையில் அடைபட்டுக் கிடந்ததால், அவரின் விடுதலையை இரண்டு தரப்புமே, நல்லெண்ணத்தின் அடையாளமாகத் தூக்கி வைத்துக் கொண்டாடின. காஷ்மீர் சிங் இந்தியாவிற்குள் காலடி எடுத்து வைத்த மறுநாளே, தான் பாகிஸ்தானுக்குள் சட்ட விரோதமாக நுழைந்து இந்தியாவிற்காக உளவு பார்த்த உண்மையைப் போட்டு உடைத்தார். இது, இந்தியாவிற்கு தர்ம சங்கடத்தையும், பாகிஸ்தானுக்கு எரிச்சலையும் ஏற்படுத்தியது.

இதே சமயத்தில், அரியானா மாநிலம் குர்கான் சிறையில் அடைக்கப்பட்டிருந்த காலித் முகம்மது என்ற பாகிஸ்தானிய இளைஞர் கடந்த பிப்.12 அன்று இறந்து போன செய்தி பாகிஸ்தானில் வெளியானது. கிரிக்கெட் ரசிகரான காலித் முகம்மது, கிரிக்கெட் போட்டிகளைப் பார்ப்பதற்காக இந்தியாவிற்கு வந்திருந்த பொழுது, விசா விதிகளை மீறியதற்காகச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். காலித் முகம்மது, போலீசாரின் சித்திரவதையால் இறந்து போனதாக பாக். குற்றஞ்சுமத்தியது; இந்தியாவோ, அந்த இளைஞர் நோய்வாய்ப்பட்டு, சிகிச்சை பலனின்றி இறந்ததாக விளக்கமளித்தது. எனினும், அவரின் சாவு மர்மமாக இருப்பதாக இந்தியப் பத்திரிக்கைகள் கூட எழுதுகின்றன.

காஷ்மீர் சிங் விடுதலை செய்யப்பட்டதற்குக் கைமாறாக இந்தியா ஏதாவது செய்யும் என எதிர்பார்த்திருந்த பாகிஸ்தானில், காலித் முகம்மதுவின் மர்மச்சாவு இந்தியாவுக்கு எதிரான வெறுப்பைக் கிளறிவிடப் பயன்பட்டது. காஷ்மீர் சிங் விடுதலையின் மூலம், தான் இந்தியாவிற்கு எந்தச் சலுகையும் காட்டவில்லை என நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்த முஷாரப், காலித் முகம்மதுவின் சாவிற்குப் பதிலடியாக, சரப்ஜித் சிங்குக்குத் தூக்கு தண்டனையை நிறைவேற்ற தடாலடியாக உத்திரவிட்டார்.

"இந்தியா-பாக். எல்லையையொட்டிய கிராமத்தைச் சேர்ந்த சரப்ஜித் சிங்குக்கும் குண்டு வைப்புக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது; அவர் ஒருநாள் குடிபோதையில் பாக்.எல்லைக்குள் அறியாத்தனமாக நுழைந்து சுற்றிக் கொண்டிருந்த பொழுது பாக். போலீசாரால் கைது செய்யப்பட்டார்; மஞ்ஜித் சிங் என்ற உளவாளியைப் பிடிக்க முடியாமல் போனதால், சரப்ஜித் சிங்கைப் பிடித்துக் கொண்டு போய் பாக். போலீசார் ஆள்மாறாட்டம் செய்து விட்டார்கள்" என சரப்ஜித் சிங்கின் உறவினர்கள் விளக்கம் அளித்து வருகின்றனர். இந்திய அரசும், ஓட்டுக்கட்சிகளும் இதன் அடிப்படையில் சரப்ஜித் சிங்கைத் தூக்கிலிடக் கூடாது எனக்கோரி வருகின்றன.

பாக்.எல்லையொட்டியுள்ள கிராமங்களைச் சேர்ந்த ஏழைகளைக் காசுக்கு மயக்கி, அதிகாரப்பூர்வமற்ற உளவாளி

சரப்ஜித் சிங்கின் (புகைப்படம்) தூக்கு தண்டனையைத் தடுத்து நிறுத்தக் கோரும் அவரது மகள்கள் சுவாபன் தீப் (வலது), பூனம் மற்றும் அவரது மனைவி சுக்ப்ரீத் கவுர்.





படிப்பகம்

www.padippakam.com

களாக இந்திய அரசு பயன்படுத்தி வருவதால், சரப்ஜித் சிங் குறித்து இந்தியத் தரப்பு கூறுவதை முற்றிலுமாக நம்பிவிட முடியாது; அதே சமயம், சரப்ஜித் சிங் மீதான குற்றச்சாட்டு குறித்த விசாரணை, பாக். நீதிமன்றங்களில் நீதிவழுவாத முறையில் நடந்திருக்கும் என்றும் கூற முடியாது. பாகிஸ்தானோடு தொடர்புடைய தீவிரவாதி என இந்திய போலீசாரால் குற்றஞ்சுமத்தப்பட்டவரின் வழக்கு, இந்திய நீதிமன்றங்களில் ''சட்டப்படி'' நடந்து விடுகிறதா என்ன?


சரப்ஜித் சிங்கின் விவகாரம் ஏதோ அதி முக்கியமான தேசியப் பிரச்சினை போல இந்திய நாடாளுமன்றத்திலும், பத்திரிகைகளிலும் விவாதிக்கப்பட்டது. ''எனது கணவருக்காக தீவிரவாதிகளை விடுதலை செய்ய வேண்டாம்'' என சரப்ஜித் சிங்கின் மனைவி அறிக்கை கொடுத்து, பரபரப்பூட்டினார். கள்ள நோட்டை புழங்கவிட்டார் என்ற குற்றச் சாட்டின் கீழ் இந்தியச் சிறையில் அடைபட்டிருந்த பாகிஸ்தானைச் சேர்ந்த ஜமால் குரேஷி என்பவரை இந்தியா விடுதலை செய்ய, அதற்கு கைமாறாக பாக்., சரப்ஜித் சிங்கின் தூக்கு தண்டனையை ஏப்ரல் 30 வரை நிறைவேற்ற வேண்டாம் என தற்பொழுது உத்தரவிட்டுள்ளது.

இந்திய நாட்டைச் சேர்ந்த 575 பேர் பாக். சிறையிலும்; பாகிஸ்தானைச் சேர்ந்த 200 பேர் இந்தியச் சிறைச்சாலையிலும் அடைபட்டுக் கிடப்பதாக இரு நாட்டு அரசுகளுமே ஒத்துக் கொண்டுள்ளன. எனினும், இந்தியாவும், பாகிஸ்தானும் ''உளவு குட்டு உடைந்து விடும்'' என்ற காரணத்தினால், இவர்களின் விடுதலை பற்றி பெரிதாக அக்கறை காட்டுவது கிடையாது. ''தனது கணவர் 35 ஆண்டுகளாக பாக். சிறையில் அடைபட்டுக் கிடந்த நேரத்தில், தனக்கு ஒரு ஆறுதல் வார்த்தையோ, நிவாரண உதவியோ இந்திய அரசு செய்ததில்லை'' எனக் கூறி, இந்திய அரசின் மனிதாபிமானத்தைப்போட்டு உடைத்துள்ளார், காஷ்மீர் சிங்கின் மனைவி. இரு நாடுகளுமே, தங்களின் தூதரக அதிகாரிகளைக்கூட உளவாளிகளாகப் பயன்படுத்தும் அடிவெட்டு வேலைகளிலும் ஈடுபட்டு வருகின்றன.

பாக். நீதிமன்றத்தால் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்ட சரப்ஜித் சிங்கின் தூக்கு தண்டனையை நிறுத்திவிடக் கோருவது மனிதாபிமானம் என்றால், இதே அடிப்படையில், இந்திய நாடாளுமன்றத் தாக்குதல் வழக்கில் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள அப்சல் குருவின் தூக்கு தண்டனையையும் நிறுத்தக் கோர வேண்டும். ஆனால், போலி கம்யூனிஸ்டுகள் கூட அப்சல் குரு பிரச்சினையில் வாயை இறுக மூடிக் கொள்கின்றனர். சரப்ஜித் சிங்குக்காகக் கிளர்ந்து எழுந்த இந்திய நாடாளுமன்றம், சிங்கள இனவெறி இராணுவத்தால் தமிழக மீனவர்கள் சிறை பிடிக்கப்படும் பொழுதும், சுட்டுக் கொல்லப்படும் பொழுதும் சம்பிரதாய எதிர்ப்புக் கூடத் தெரிவிப்பதில்லை; தேசியக் கட்சிகள் சிங்கள அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம், யாகம், பிரார்த்தனை என அளப்பரி பண்ணியதுமில்லை. அப்சல் குரு மற்றும் தமிழக மீனவர்களின் பிரச்சினையில் காட்டப்படாத அக்கறை, சரப்ஜித் சிங் பிரச்சினையில் மட்டும் பொங்கி வழிவதற்குக் காரணம், பாக். எதிர்ப்பு இந்து மதவெறி அரசியல் தானேயொழிய, மனிதாபிமானமோ, சக குடிமகன் என்ற பாசமோ கிடையாது!

● மணி

# தோழர் கோவண்ணா அவர்களுக்குச் சிவப்பஞ்சலி!



விவசாயிகள் விடுதலை முன்னணியின் பட்டுக்கோட்டை வட்டாரச் செயற்குழு உறுப்பினரான அதிராம் பட்டினத்தைச் சேர்ந்த தோழர் கோவண்ணா என்கிற கோவிந்தராஜ் கடந்த 15.3.08 அன்று நடந்த எதிர்பாராத விபத்தில் மரணமடைந்து விட்டார்.

தோழர் கோவண்ணா அதிகம் படிக்காத கூலித் தொழிலாளி. வர்க்க உணர்வும் புரட்சிகர உணர்வும் கொண்ட அவர், தனது இளமைக் காலத்தில் இடது, வலது கம்யூனிஸ்டு கட்சிகளில் இணைந்து செயல்பட்டு, பின்னர் அக்கட்சிகளின் துரோகத்தையும் பித்தலாட்டத்தையும் கண்டு வெறுப்புற்று, இக்கட்சிகளின் உள்ளூர் தலைவர்களின் நடத்தைகளையும் மக்கள் விரோதச் செயல்பாடுகளையும் அம்பலப்படுத்தி விட்டு, அக்கட்சிகளிலிருந்து வெளியேறி வி.வி.மு.வில் தன்னை இணைத்துக் கொண்டு ஊக்கமுடன் செயல்பட்டு வந்தார். மக்களுடன் எளிதில் ஐக்கியப்பட்டு அவர்களை அமைப்பாக்குவதிலும், போராட்டத்தில் முன் நிற்பதிலும் அவர் எப்போதும் முன்னுதாரணமாகச் செயல்பட்டு வந்தார். படிப்பறிவு குறைவாக இருந்தபோதிலும், தனது வர்க்கப் போராட்ட அனுபவ அறிவைக் கொண்டு போலீசையும் அதிகார வர்க்கத்தையும் கதிகலங்க வைக்கும் போராளியாகச் செயல்பட்டதை இவ்வட்டார மக்கள் நன்கறிவர்.

அதிராம்பட்டினம் நகர் இது வரை கண்டிராத வகையில், சாதி-மதச் சடங்குகள் ஏதுமின்றி பாட்டாளி வர்க்க உணர்வோடு நடந்த இறுதி ஊர்வலத்திலும், அதன்பின்னர் நடைபெற்ற நினைவஞ்சலிக் கூட்டத்திலும் திரளாகத் தோழர்களும் ஊர் பஞ்சாயத்தார்களும் பல்வேறு அரசியல் கட்சியினரும் பங்கேற்று தோழர் கோவண்ணாவின் உயரிய கம்யூனிசப் பண்புகளை நினைவு கூர்ந்து வீரவணக்கம் செலுத்தினர்.

தோழர் கோவண்ணாவின் எளிய வாழ்வு, கடின உழைப்பு, போர்க்குணம், புரட்சியின் மீதான பற்றுறுதி ஆகிய உயரிய கம்யூனிசப் பண்புகளை உறுதியாக நெஞ்சிலேந்தி, புரட்சிப் பாதையில் தொடர்ந்து முன்னேறுவோம்!

— விவசாயிகள் விடுதலை முன்னணி, பட்டுக்கோட்டை.

www.padippakam.com

# கிரிக்கெட் போட்டி ஏலம்:
# சூதாட்டமே விளையாட்டாக...

**ஏகாதிபத்தியத்தின் கீழ் எதுவுமே புனிதமானதல்ல; எல்லாமே பணம் பண்ணும் சரக்குதான் என்பதையே ஏலம் விடப்பட்ட கிரிக்கெட் போட்டி எடுத்துக்காட்டுகிறது.**

ஒருமுறை, மறைந்த கவர்ச்சி நடிகை ''சில்க்'' சுமிதா கடித்த எச்சில் ஆப்பிளை ரசிகர் ஒருவர் 10,000 ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்தார். கிரிக்கெட் விளையாட்டிலும் அண்மையில் இது போன்றதொரு ஏலம் நடந்திருக்கிறது. ஏலம் எடுக்கப்பட்டது இந்திய கிரிக்கெட் வீரர்கள் தின்று போட்ட எச்சில் இலைகளையல்ல. மாறாக, கிரிக்கெட் வீரர்களையே ஏலம் எடுத்திருக்கிறார்கள், இந்தியப் பெருமுதலாளிகள்.

''சில்க்'' சுமிதாவின் எச்சில் ஆப்பிளை ஏலத்துக்கு எடுத்தவரின் செயலை, பைத்தியக்காரத்தனம் என்று எவரும் எளிதில் கூறிவிட முடியும். ஆனால், கிரிக்கெட் வீரர்களை ஏலத்தில் எடுத்திருக்கும் முதலாளிகள் நிச்சயம் பைத்தியக்காரர்கள் அல்ல. ''இது ஒரு இலாபம் தரும் வியாபாரம்'' என்று பேட்டியளிக்கிறார், கொல்கத்தா அணியை ஏலம் எடுத்திருக்கும் இந்தி நடிகர் ஷாருக்கான்.

ஏப்ரல்-ஜூன் மாதங்களில் இருபதுக்கு இருபது (20/20) என்ற பெயரில் இந்தியன் பிரீமியர் லீக் என்ற அமைப்பு கிரிக்கெட் போட்டிகளை நடத்தவிருக்கிறது. இந்தப் போட்டிகளில் சென்னை, ஹைதராபாத், கொல்கத்தா, டெல்லி, மொஹாலி, ஜெய்ப்பூர், மும்பை, பெங்களூரு என இந்தியாவின் எட்டு மாநில நகரங்களின் பெயரில் அணிகள் மோதவிருக்கின்றன. இந்த அணிகளை யார் வேண்டுமானாலும் ஏலத்தில் எடுத்துக் கொள்ளலாம் என 200 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை (டெண்டர்) வெளியிட்டது, இந்திய கிரிக்கெட் வாரியம். இதன்படி, சாராய அதிபர் விஜய் மல்லையா, திரு(ட்டு) பாய் அம்பானி, ஜி.எம்.ஆர். எனும் வீட்டுமனை கொள்ளைக்கார நிறுவனம், டெக்கான் கிரானிக்கல் எனும் ஆங்கில நாளேடு, பெருமுதலாளி நெஸ் வாடியா, இந்தி சினிமா நடிகர் ஷாருக்கான், கவர்ச்சி நடிகை பிரீத்தி ஜிந்தா ஆகியோர் பல நூறு கோடிகளுக்கு ஒவ்வொரு அணியையும் ஏலம் எடுத்துள்ளனர்.

இந்த அணிகள் இந்தியாவின் மாநிலங்களைச் சேர்ந்த நகரங்களின் பெயர்களில் அமைந்திருந்தாலும், அதில் விளையாடுபவர்களெல்லாம் அந்தந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. இன்னும் சொல்லப் போனால், இதில் பலர் இந்தியாவைச் சேர்ந்தவர்களே அல்ல. ஒவ்வொரு அணியிலும் வெளிநாடுகளைச் சேர்ந்த 4 கிரிக்கெட் வீரர்கள் இடம் பெறுவார்கள். எஞ்சியிருப்பவர்களில், எந்த மாநிலத்தைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்களும் இடம் பெறுவார்கள். இப்படி உள்நாட்டு-வெளிநாட்டு வீரர்களைக் கலந்து வீரிய ஒட்டுரகமாக அணிகள் அமைந்திருக்கும்.

அணிகளை ஏலத்துக்கு எடுத்ததைப் போலவே, அதற்கான ஆட்டக்காரர்களையும் ஏலத்தில் எடுத்திருக்கிறார்கள் இந்திய முதலாளிகள். இதன்படி, சென்னை அணியில் விளையாடவுள்ள மகேந்திரசிங் டோனியை 6 கோடி ரூபாய்க்கு ஏலமெடுத்திருக்கிறார், இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் முதலாளி. ஆஸ்திரேலிய கிரிக்கெட் ஆட்டக்காரர் சைமண்ட்சை

## ஏலத்தில் விலைபோன உள்நாட்டு/வெளிநாட்டு கிரிக்கெட் வீரர்கள்

மகேந்திரசிங் டோனி (சென்னை) ரூ.6 கோடி



இசாந்த் சர்மா (கொல்கத்தா) ரூ.3.8 கோடி



இர்ஃபான் பதான் (மொஹாலி) ரூ.3.7 கோடி



ஹர்பஜன் சிங் (மும்பை) ரூ.3.2 கோடி



ஆன்ட்ரூ சைமண்ட்ஸ் (ஹைதராபாத்) ரூ.5.4 கோடி



சனத் ஜெயசூர்யா (மும்பை) ரூ.3.9 கோடி




படிப்பகம்

www.padippakam.com

5.4 கோடி ரூபாய்க்கு ஹைதராபாத் அணிக்காக ஏலம் எடுத்திருக்கிறது, டெக்கான் கிரானிக்கல் நாளேடு. இதேபோல பல் வேறு நாடுகளைச் சேர்ந்த 80 கிரிக்கெட் விளையாட்டு வீரர்களை இந்த ஏலமுறைக்கு ஒப்பந்தம் செய்திருக்கிறது, இந்திய கிரிக்கெட் வாரியம். இவர்களில் தங்களுக்கு விருப்பமானவர்களைத் தெரிவு செய்து, தாங்கள் ஏலம் எடுத்துள்ள அணிகளில் அவர்களை ஆட வைக்க முதலாளிகளால் முடியும்.

கிரிக்கெட் விளையாட்டு வீரர்களை ஏலம் போட்டு முதலாளிகளிடம் விற்றதன் மூலம் 7,000 கோடி ரூபாய்க்கு கல்லா கட்டியிருக்கிறது, இந்திய கிரிக்கெட் வாரியம். செய்தி ஊடகங்களால் இந்த தேசத்தின் நாயகர்களாகச் சித்தரிக்கப்படும் இந்திய கிரிக்கெட் வீரர்கள், தாங்கள் அடிமைகளைப் போல ஏலம் போட்டு விற்கப்பட்டதற்கு அவமானப்படவில்லை. இப்படி தங்களுக்கு ''ரேட்'' பேசப்பட்டிருப்பதைக் கண்டு பூரித்துப் போயுள்ளார்கள். ''இந்த ஏலத்தின் மூலம் கிரிக்கெட் வீரர்கள் குறுகிய காலத்தில் அதிக இலாபமீட்ட முடியும்'' என்று மகிழ்ச்சியுடன் பேட்டியளித்துள்ளார், நட்சத்திர ஆட்டக்காரரான யுவராஜ்சிங். விலை போகாத சில 'வீரர்கள்' மட்டும், ''எனக்கு இது தகுந்த ரேட் இல்லை'' என்று விலைமகளிர் போல பேட்டியளித்துள்ளனர்.

பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர் பால் உல்மரின் கொலைச் சம்பவம், சர்வதேச கிரிக்கெட்டின் இருண்ட-அசிங்கமான பகுதியை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து காட்டியது. இந்தியா, பாகிஸ்தான், தென்னாப்பிரிக்கக் கிரிக்கெட் அணிகளின் வீரர்கள், வர்த்தகச் சூதாடிகளுடன் கூட்டுச் சேர்ந்து ஊழலில் ஈடுபட்ட விவகாரம் ஏற்கெனவே அம்பலமாகியுள்ளது.

கிரிக்கெட் வீரர்கள் ஏலம் விடப்பட்ட கேவலத்தைக் கண்டு வெறுப்பை உமிழாமல், இந்த ஆட்டக்காரருக்கு இவ்வளவு தொகை கொடுத்திருக்கலாம்; இது குறைவானது, கூடுதலானது என்றெல்லாம் செய்தி ஊடகங்கள் பரபரப்பாக பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருக்கின்றன. டோனிக்கு ஆறு கோடி ரூபாய் நிர்ணயிக்கப்பட்டதைக் கண்டு தேசியப் பெருமிதம் கொள்கின்றன. இந்திய கிரிக்கெட் வீரரான ஹர்பஜன் சிங்கைக் காட்டிலும் ஆஸ்திரேலிய வீரர் சைமண்ட்ஸ் அதிக விலைக்கு ஏலம் எடுக்கப்பட்டிருப்பதை சந்தைப் பொருளாதாரத்தின் விளைவு என்று அங்கலாய்த்து, இந்தப் பட்டிமன்றத்தில் 'தேச பக்தி'யோடு தன்னை இணைத்துக் கொண்டிருக்கிறது, 'மார்க்சிஸ்டு'களின் புரட்சிகர ''தீக்கதிர்'' நாளேடு.

ஆங்கிலேய பிரபுக்குலத்தின் மேட்டுக்குடி சீமான்களின் பொழுதுபோக்கு விளையாட்டாகத் தொடங்கிய கிரிக்கெட், இன்று பன்னாட்டுத் தொழிற்கழகங்களின் விளம்பர - வியாபார ஊடகமாகவும், தரகுப் பெருமுதலாளிகள் - கருப்புப் பணச் சூதாடிகளின் விளையாட்டாகவும் வளர்ந்து விட்டது. சினிமாவுக்கு அடுத்த கவர்ச்சிகரமானதாக கிரிக்கெட் மாற்றப்பட்டிருக்கும் அதேசமயம், சினிமாவைவிட அதிகமாகப் பணம் புரளும், பணம் கொழிக்கும் மையமாக கிரிக்கெட் விளையாட்டு மாறியிருக்கிறது. கிரிக்கெட் போட்டிகளை நடத்தும் வெவ்வேறு நாடுகளின் ஊழல்மிக்க வாரியங்கள் ஆண்டுக்குப் பல்லாயிரம் கோடி ரூபாய்களைச் சம்பாதிக்கின்றன. கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் ஒவ்வொரு போட்டியிலும் பல லட்ச ரூபாய் சம்பளமாகப் பெறுவதோடு, கூடுதலாக விளம்பரங்களில் தோன்றி கோடிக்கணக்கில் ஊதியம் பெறுகிறார்கள். இவை மட்டுமின்றி, கிரிக்கெட் சூதாடிகளுடனும் தரகர்களுடனும் கூட்டுச் சேர்ந்து கொள்ளையடித்து உல்லாச வாழ்க்கை நடத்துகிறார்கள்.

பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர் பால் உல்மரின் கொலைச்சம்பவம், சர்வதேச கிரிக்கெட்டின் இருண்ட-அசிங்கமான பகுதியை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து காட்டியது. இந்தியா, பாகிஸ்தான், தென்னாப்பிரிக்கக் கிரிக்கெட் அணிகளின் வீரர்கள், வர்த்தகச் சூதாடிகளுடன் கூட்டுச் சேர்ந்து ஊழலில் ஈடுபட்ட விவகாரம் ஏற்கெனவே அம்பலமாகியுள்ளது. இருப்பினும் உள்நாட்டு-வெளிநாட்டு முதலாளிகளால் பல்லாயிரம் கோடிகள் வாரியிறைக்கப்பட்டு இந்த கிரிக்கெட் சூதாட்டம் வெறியோடு நடத்தப்படுகிறது. ஆங்கிலேய காலனிய நாடுகளாக இருந்த நாடுகளில் மட்டுமே, அவமான அடிமைச் சின்னமாக கிரிக்கெட் விளையாட்டு தொடர்கிறது. விடுதலைப் போராட்ட உணர்வுகள் மழுங்கடிக்கப்பட்டு அமெரிக்க-ஆங்கில மோகம் ஊட்டி வளர்க்கப்படுவதைப் போலவே கிரிக்கெட் மோகம் 'தேசபக்தி'யாக வளர்க்கப்படுகிறது.



கிரிக்கெட்டையே தனித்தொழிலாகக் கொண்ட ஆட்டக்காரர்களும், கிரிக்கெட்டை பந்தயம்-சூதாட்டமாகவும் வியாபாரம்-விளம்பரமாகவும் நடத்தும் கருப்புப் பண கும்பலும் சமுதாயத்தின் மிகப் பெரிய ஒட்டுண்ணிகளாக வளர்ந்து விட்டதை, தற்போதைய ஏல விவகாரம் மீண்டும் நிரூபித்துக் காட்டிவிட்டது. குதிரைப் பந்தயம், லாட்டரி, ஆபாச களிவெறியாட்ட விடுதிகள் போன்றவை எவ்வாறு ஒழிக்கப்பட வேண்டியவையோ, அதைப் போலவே மிகப்பெரிய சமூகக் கேடான கிரிக்கெட் விளையாட்டும் ஒழிக்கப்பட வேண்டும். உழைக்கும் மக்களின் புரட்சிகரப் போராட்டங்களே, இச்சூதாட்ட வெறியாட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரும்.

● பாலன்

www.padippakam.com



# குஜராத்: இந்து பயங்கரவாதத்தின் இன்னொரு முகம்

**மோடி ராஜ்ஜியத்தில் "இந்து"ப் பெண்களுக்கும் பாதுகாப்பு கிடைக்காது என்பதை குஜராத்தில் நடந்துவரும் பாலியல் வன்முறைச் சம்பவங்கள் நிரூபிக்கின்றன.**

இந்துவெறி பாசிச பயங்கரவாதி மோடியின் ராமராஜ்ஜிய பேயாட்சிக்கு பாசிச "துக்ளக்" சோ விழா எடுத்துப் பாராட்டுகிறார் என்றால், அக்ரஹாரப் பத்திரிகையான "கல்கி"யோ, தொடர்ச்சியாக மோடி சிறப்பிதழ் வெளியிட்டுத் துதிபாடுகிறது. மோடி என்றாலே குஜராத்தில் நிலவும் பாசிச பயங்கரவாத ஆட்சியும், முஸ்லீம் இனப்படுகொலையும்தான் நாட்டு மக்களுக்கு நினைவுக்கு வரும். இவற்றை மூடி மறைத்துவிட்டு, அந்நிய முதலீட்டைப் பெறுவதிலும் தொழில் வளர்ச்சியிலும் அம்மாநிலம் முன்னோடியாகத் திகழ்ந்து, மோடியின் ஆட்சியில் "ஊக்கமிகு குஜராத்"தாக மாறிவிட்டதென்று அப்பத்திரிகைகள் ஏற்றிப் போற்றுகின்றன. ஆனால், பார்ப்பனப் பத்திரிகைகளால் ஏற்றிப் போற்றப்படும் குஜராத்தில் அண்மையில் தாழ்த்தப்பட்ட மாணவி மீது நடத்தப்பட்ட வன்புணர்ச்சிக் கொடூரத்துக்கு எதிராக அம்மாநில மக்கள் தொடர்ச்சியாகப் போராட்டங்களைத் தொடுத்து, மோடி ராஜ்ஜியத்தின் யோக்கியதையை நாடெங்கும் திரைகிழித்துக் காட்டியுள்ளனர்.

வட குஜராத்தில் உள்ள பதான் நகரின் அரசு ஆசிரியைப் பயிற்சிக் கல்லூரியில் படித்து வந்த தாழ்த்தப்பட்ட மாணவி ஒருவரை (எதிர்கால நலன் கருதி அவரது பெயர் குறிப்பிடப்படவில்லை), அக்கல்லூரியின் பேராசிரியர்கள் 6 பேர் அவரை மிரட்டிக் கூட்டாகப் பாலியல் வன்புணர்ச்சி செய்து வந்திருக்கின்றனர். "தேர்வுகளில் அகமதிப்பீட்டு மதிப்பெண்களைக் குறைத்து விடுவோம்" என்று மிரட்டியே கடந்த 6 மாதங்களில் 14 முறை அக்கல்லூரியின் கணினிக் கூடத்திலும், ஆய்வுக் கூடத்திலும் வைத்து வன்புணர்ச்சியை ஏவியுள்ளனர்.

அக்கல்லூரியோ பெண்கள் மட்டும் பயிலும் கல்லூரி இருப்பினும் இரண்டு மாதங்களுக்கு முன்பு வரை அக்கல்லூரிக்குப் பெண் பேராசிரியர்களே நியமிக்கப்படவில்லை. நியமிக்கப்பட்ட பாரதிபென் பட்டேல் என்ற அப்பெண் பேராசிரியர், மாணவிகளிடம் ஆண் பேராசிரியர்கள் தவறாக நடந்து கொள்வதைப் பற்றி மேலதிகாரிகளிடம் புகார் செய்ததால், அவரும் இடமாற்றம் செய்யப்பட்டு விட்டார். இதனைச் சாதகமாக்கிக் கொண்டு காமவெறிப் பிடித்த இப்பேராசிரியர்கள் கொட்டமடித்து வந்தனர். கடந்த ஜனவரி 31-ஆம் தேதியன்று அக்கல்லூரியின் காலை வழிபாட்டுக் கூட்டத்தில் அம்மாணவி மயக்கமடைந்து விழுந்து, அவர் கருவுற்றிருப்பது தெரிய வந்தது. அதன்பிறகு அம்மாணவியை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று இப்பேராசிரியர்கள் கருவைக் கலைக்க முயற்சித்துள்ளனர். அம்மாணவியின் பெற்றோர் அதிர்ச்சியடைந்து அவரிடம் விசாரித்தபோதுதான் பேராசிரியர்களின் காமவெறியாட்டம் வெளியுலகுக்குத் தெரிய வந்தது.

பாதிக்கப்பட்டிருப்பது இந்த ஒரு மாணவி மட்டுமல்ல; இன்னும் பல மாணவிகள் வன்புணர்ச்சிக்கு ஆளாகியுள்ள விசயம், அம்மாணவிகள் மூலம் அவர்களது பெற்றோருக்குத் தெரிய வந்து, கொதித்தெழுந்த அவர்கள் பதான் நகர மக்களையும் திரட்டிக் கொண்டு கடந்த பிப்ரவரி 4-ஆம் தேதியன்று அப்பேராசிரியர்களைத் தெருவில் போட்டு அடித்து உதைத்தனர். பின்னர் போலீசு தலையிட்டுக் காமவெறி பேராசிரியர்கள் 8 பேரைக் கைது செய்து சிறையிலடைத்துள்ளது.

ஆனாலும், பதான் நகர மக்களின் கோபம் தணியவில்லை. குற்றவாளிகளைத் தூக்கிலிடக் கோரி பதான் நகரில் தொடர்ச்சியாக இரு நாட்களுக்குக் கடையடைப்புப் போராட்டத்தை நடத்தினர். அதன் தொடர்ச்சியாக ஏறத்தாழ 25,000-க்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு பிரம்மாண்டமான ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்திக் குற்றவாளிகளை உடனடியாகத் தண்டிக்கக் கோரினர். பதான் நகர் மட்டுமின்றி, குஜராத்தின் இதர பெருநகரங்களிலும் இதுபோன்ற ஆர்ப்பாட்டப் பேரணிகள் தொடர்ந்து நடந்தன. மோடியின் ராமராஜ்ஜியத்தில் இதுவரை இப்படியொரு வீச்சான தொடர்போராட்டம் நடந்ததேயில்லை எனுமளவுக்கு உழைக்கும் மக்களின் கோபாவேசம் அம்மாநிலமெங்கும் சுழன்று வீசியது.

காமவெறி பேராசிரியர்களால் சீரழிக்கப்பட்ட அந்த தலித் மாணவி, மெக்சனா மாவட்டம் ஜேட்டல் வசனா கிராமத்தைச் சேர்ந்தவர். அவரது தந்தையான பாபுபாய் கூலித் தொழிலாளி. பத்தாம் வகுப்பிலும் +2 வகுப்பிலும் இம்மாணவி பள்ளியிலேயே முதன்மையாக வந்து படிப்பில் தேர்ச்சி பெற்றவர். ஆசிரியைப் பயிற்சிக் கல்லூரியிலும் அவர் எளிதில் தேர்ச்சி பெற்றுவிட முடியும். எனினும், அவர் தாழ்த்தப்பட்ட மாணவி என்பதாலேயே அகமதிப்பீட்டு மதிப்பெண்களைக் குறைத்து விடுவோம் என்று மிரட்டி இக்காமவெறியர்கள் பாலியல் வன்முறையை ஏவியுள்ளனர். ஆனால், மோடி

www.padippakam.com

அரசோ குற்றவாளிகள் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கைப் பதிவு செய்யாமல், சாதாரண வன்புணர்ச்சிக் குற்றத்தின் கீழ் வழக்கைப் பதிவு செய்து தனது சாதியப் பாசத்தை நிரூபித்துக் காட்டியுள்ளது.

மேலும், குற்றவாளிகளில் 6 பேர் பதான் தொகுதி எம்.எல்.ஏ.வும் வருவாய்த்துறை அமைச்சருமான திருமதி ஆனந்திபென் பட்டேலுக்கு மிகவும் நெருக்கமானவர்கள். அவருக்குத் தேர்தல் ஏஜெண்டுகளாக வேலை செய்தவர்கள். பதான் நகரிலுள்ள ஆசிரியை பயிற்சிக் கல்லூரி முதல்வரோ, இதற்கு முன்பு பணியாற்றிய கல்லூரியில் பாலியல் குற்றம் சாட்டப்பட்டவர். ஆனந்தி பென்னின் அதிகாரத்தால் நடவடிக்கை ஏதுமின்றி இக்கல்லூரிக்கு மாற்றப்பட்டவர். இதுவொருபுறமிருக்க, அமைச்சர் ஆனந்திபென்னிடம் இக்கல்லூரியில் தொடரும் பாலியல் கொடுமைகளைப் பற்றி மாணவிகள் ஏற்கெனவே முறையிட்டிருக்கின்றனர். ஆனாலும், தனது விசுவாசிகளான காமவெறியர்கள் மீது அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.



குஜராத்தில் ஆறு வயதுக்குட்பட்ட ஆண்-பெண் குழந்தைகளின் விகிதாச்சாரம் 1000-க்கு 883 என்ற அளவில் குறைந்துள்ளதால், ''பெண் குழந்தைகளைக் காப்போம்'' எனும் இயக்கத்தை மோடி அரசு கோடிக்கணக்கில் பணத்தை வாரியிறைத்து கோலாகலமாக நடத்தி வருகிறது. ஆனால், தாழ்த்தப்பட்ட மாணவி பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளான கொடூரம் குஜராத்தையே உலுக்கிய போதிலும், முதல்வர் மோடி அப்பெண்ணை நேரில் சந்திக்கவோ, குற்றவாளியைத் தண்டிக்க உறுதியளிக்கவோ இதுவரை முன்வரவில்லை.

முதல்வர் மோடியே இந்த விவகாரத்தில் அக்கறை காட்டாதபோது, இக்கொடூரத்துக்கு எதிரான வழக்கும் விசாரணையும் ராமராஜ்ஜியத்தில் எப்படி இருக்கும்? ''போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். கல்வித்துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பார்கள்'' என்கிறார், உள்துறை அமைச்சர் அமித்ஷா. நீதித்துறை விசாரணை நடத்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், இந்த வழக்கு தொடர்பான எந்த வரையறையும் விதியும் இதுவரை வகுக்கப்படவில்லை. மாநில அரசின் விதிப்படி மாவட்ட ஆட்சியர் மட்டுமே தற்போதைக்கு விசாரணை நடத்த முடியும். இந்நிலையில் ராமராஜ்ஜிய விசாரணை எப்படியிருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை.

மதவெறி மூடத்தனத்திலும் ஆணாதிக்க வெறியிலும் திளைத்திருக்கும் குஜராத்தில் பெண் குழந்தைகளைப் பிறந்தவுடனேயே கொன்றுவிடும் கொடூர பழக்கம் பரவலாக உள்ளது. குறிப்பாக, பட்டேல் ஆதிக்க சாதியினரிடம் இது அதிகமாக உள்ளது. இதனால் திருமணம் செய்து கொள்ள பெண்கள் கிடைக்காமல், பட்டேல்கள் பணம் கொடுத்து பழங்குடியினப் பெண்களை விலைக்கு வாங்கி மணமுடிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு விலைக்கு வாங்கப்படும் பெண்கள் பாலியல் அடிமைகளாக நடத்தப்படுகின்றனர். பட்டேல் எஜமானர்களின் கொடுமையிலிருந்து மீள அப்பழங்குடியினப் பெண்கள் தற்கொலைப் பாதையையே தேர்ந்தெடுக்கின்றனர். வாரத்துக்கு 2,3 பெண்கள் என்ற விகிதத்தில் மோடி ராஜ்ஜியத்தில் பழங்குடியினப் பெண்கள் தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டு வருகின்றனர். இதே குஜராத்தின் ஆனந்த் மாவட்டத்தில் வறுமையின் காரணமாக, உள்நாட்டு - வெளிநாட்டு பணக்கார வர்க்கத்தினருக்காகக் கருவைச் சுமக்கும் வாடகைத் தாய்கள் அதிகரித்து வருகின்றனர்.

ஆசிரியைப் பயிற்சிக் கல்லூரி மாணவி பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்ட கொடூரம் குஜராத்தை உலுக்கிக் கொண்டிருந்த அதேநேரத்தில், கடந்த பிப்ரவரியில் அகமதாபாத்தில் ஒரு இளஞ்சிறுமி பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டுக் குற்றுயிராய் மருத்துவமனையில் கிடக்கிறாள். விதவைப் பெண்ணிடம் ஆபாசமாகக் கேலி செய்த காமவெறிக் கும்பலைத் தட்டிக் கேட்ட நபர், அக்கும்பலால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார். குஜராத்தின் சௌராஷ்டிரா பகுதியில் இளம்பெண் ஒருவர் தனது உறவினராலேயே பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதால், தற்கொலை செய்து கொண்டுள்ளார். இவையெல்லாம் ஒரே வாரத்தில் நடந்துள்ள கொடுமைகள்.

> மதவெறி மூடத்தனத்திலும் ஆணாதிக்க வெறியிலும் திளைத்திருக்கும் குஜராத்தில் பெண் குழந்தைகளைப் பிறந்தவுடனேயே கொன்றுவிடும் கொடூர பழக்கம் பரவலாக உள்ளது. குறிப்பாக, பட்டேல் ஆதிக்க சாதியினரிடம் இது அதிகமாக உள்ளது.

பேய் ஆட்சி செய்தால் பிணம் தின்னும் சாத்திரம் என்பார்கள். பயங்கரவாத மோடி ஆட்சி செய்தால் முஸ்லீம்களுக்கு மட்டுமல்ல; குஜராத்தின் ஒட்டுமொத்த பெண்களுக்குமே பாதுகாப்பில்லை என்பது நிரூபணமாகி விட்டது.

● செங்கதிர்

www.padippakam.com

# மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்கள்:

# நஞ்சாக்கப்படும் உணவு

## இந்திய நாடு, மரபணுமாற்ற தொழில்நுட்பத்தைச் செயல்படுத்திப் பார்க்கும் சோதனைச்சாலை எலியாக மாற்றப்பட்டு விட்டது.

கத்தரிக்காய்; தமிழக மக்களின் உணவில் முக்கிய இடம் பெறும் காய். குண்டு கத்தரி, நீள கத்தரி, நாம கத்தரி, வெள்ளை கத்தரி என்று அதில் பல ரகமுண்டு. இப்போது புதிய ரகமாக பி.டி.கத்தரிக்காய் வரப்போகிறது. அதென்ன பி.டி.கத்தரிக்காய்?

இது மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காய். காய்ப்புழுத் தாக்குதலை எதிர்க்கும் வகையில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிச் செடியிலிருந்து காய்க்கும் புதிய வகை கத்தரிக்காய். பூச்சிக்கொல்லி மருந்துகளே இல்லாமல், செடியின் உள்ளே பொதிந்துள்ள மரபணுவை மாற்றி விடுவதன் மூலம் - பூச்சிகள் செடிகளைத் தாக்குவதைத் தடுக்கும் மரபணு மாற்றத் தொழில்நுட்பத்தின் மூலம் உருவாக்கப்பட்ட புதிய கத்தரிச் செடியில் விளைவதுதான் பி.டி.கத்தரிக்காய்.

கோவை வேளாண் பல்கலைக் கழகத்தில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட இப்புதியவகை கத்தரி விதைக்கப்பட்டு, செடிகள் வளர்ந்து காயும் பிஞ்சுமாக செழித்து நின்றன. அமெரிக்க விதைக் கம்பெனியான மான்சாண்டோவின் இந்தியப் பங்குதாரரான மஹிகோ நிறுவனமும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகமும் கூட்டுச் சேர்ந்து இரகசியமாக இப்புதிய ரக கத்தரியைப் பயிரிட்டு கள ஆய்வு செய்து வந்தன. இதையறிந்த தமிழக வேளாண் காப்புக் குழு, ஈரோடு இயற்கை விவசாயிகள் குழு ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த முன்னணியாளர்கள் சிலர் பல்கலைக் கழக வளாகத்தில் கத்தரி தோட்டத்தின் அருகே திரண்டு விவசாயத்துக்கும் சுற்றுச்சூழலுக்கும் பெருங்கேடு விளைவிக்கும் இந்த ஆராய்ச்சியை நிறுத்தக் கோரி கடந்த பிப்ரவரி 22-ஆம் நாளன்று ஆர்ப்பாட்டம் செய்தனர். பின்னர், பல்கலைக் கழக நுழைவு வாயிலில் உள்ள பெயர்ப் பலகையில்,'' தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம்- தற்போதைய உரிமையாளர் மான்சாண்டோ'' என்று எழுதி ஒட்டிவிட்டுக் கலைந்து சென்றனர்.

உடனே இப்பல்கலைக் கழக துணைவேந்தரும் பதிவாளரும், ''பட்டினிச் சாவுகளைத் தடுத்து பல லட்சக்கணக்கான மக்களின் உணவுத் தேவையை நிறைவு செய்யும் நோக்கத்தோடு விவசாயமும் சமுதாயமும் பயனடைய வேண்டும் என்பதற்காக இப்பல்கலைக் கழகம் செயல்படுகிறது; அதனடிப்படையிலேயே மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்கள் கள ஆய்வு செய்யப்படுகின்றன'' என்று நியாயவாதங்களை அடுக்கியதோடு, போராடியவர்கள் அறிவியலுக்கும் சமுதாயத்திற்கும் எதிரானவர்கள் என்று சாடி, போராடிய அமைப்புகள் மீது கிரிமினல் வழக்குகளைப் பதிவு செய்துள்ளனர்.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்களும் உயிரி தொழில் நுட்பப் புரட்சியும் விவசாய உற்பத்தியைப் பெருக்குமா? மரபணு மாற்றம் செய்யப்பட்ட விவசாய விளைபொருட்களால் மனித இனத்துக்குப் பாதிப்பு ஏதேனும் ஏற்படுமா? இவை குறித்து ஆராய்ச்சி முடிவுகள் என்ன?

மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்களாலும் அவற்றின் பூக்கள், காய்கள், கிழங்குகள், விதைகளாலும் மனித இனத்துக்கு ஒவ்வாமையும் இனம் புரியாத பல்வேறு நோய்களும் ஏற்படும் என்று பல்வேறு ஆய்வாளர்களும் எச்சரிக்கின்றனர். நோபல் பரிசு பெற்ற மரபியல் விஞ்ஞானியான ப்ரென்னர் என்பவர், ''மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்கள் முழுமையாகப் பாதுகாப்பானவை என்று கூற பெரும்பாலான விஞ்ஞானிகள் தயங்குகிறார்கள். ஏனென்றால், அவர்களின் ஆயுட்காலத்திலேயே மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்கள் ஆபத்தானவை'' என்று நிரூபிக்கப்பட்டுவிடும் என்கிறார்.

மனித இனம் மட்டுமின்றி, இப்பயிர்கள் சுற்றுச்சூழல் சார்ந்த பல்வேறு பிரச்சினைகளை உருவாக்குகின்றன. தாவரங்களுடன் ஒட்டுறவு கொண்டுள்ள பல்வேறு பூச்சிகள், நுண்ணுயிர்கள் மட்டுமின்றி நன்மை செய்யும் மண்புழுக்களும் இப்புதிய வகைப் பயிர்களால் அழிக்கப்படுகின்றன. மறுபுறம், மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்களின் மகரந்தங்கள் களைகளின் மகரந்தங்களுடன் சேர்ந்து, களைக்கொல்லி எதிர்ப்புத்திறன் கொண்ட புதியவகை 'சூப்பர்' களைகளை உருவாக்கி விடுகின்றன. இவற்றை எந்த களைக் கொல்லி மருந்தாலும் கட்டுப்படுத்தவே முடியாது.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட தாவரம், அது பயிரிடப்படும் பகுதிகளில் காலனியாதிக்கம் செய்யக்கூடியது. அதாவது, பிற தாவரங்களின் வளர்ச்சியை அழித்து, தான் மட்டும் செழித்து வளரும் தன்மை கொண்டது. மகரந்த சேர்க்கை மூலம் பாரம்பரிய விவசாயப் பயிர்களை அழித்து விடும் ஆற்றல் கொண்டது. மரபணு மாற்றம் செய்யப்பட்ட தாவரங்களின் பூக்களில் தேன் சுரக்குமா, அவற்றைத் தேனீக்கள் உறிஞ்சினால் என்ன பாதிப்பு ஏற்படும், அத்தேனை மனிதர்கள் மருந்தாகவும் உணவாகவும் பயன்படுத்தினால்

**கோவை-வேளாண் பல்கலைக்கழக வயல்களில் பயிரிடப்பட்டுள்ள பி.டி.கத்தரிக்காயின் தீய விளைவுகளைக் கண்டித்து தமிழக வேளாண் காப்புக் குழுவினர் நடத்தும் போராட்டம்.**



www.padippakam.com



மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரி களச்சோதனைக்கு எதிராக ஒரிசாவில் விவசாயிகள் நடத்தும் ஆர்ப்பாட்டம்.

என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்பதெல்லாம் இன்னமும் புரியாத புதிராகவே உள்ளது.

இவை ஒருபுறமிருக்க , மரபணு மாற்றம் செய்யப்பட்ட பருத்திப் பயிர்களில் காய்ப்புழுக்கள் முற்றாக அழிந்து விடுவதில்லை; மாறாக, அப்புழுக்கள் எதிர்ப்புத்திறன் பெற்று புதிய வீரியத்துடன் தாக்குகின்றன. 2003 முதல் 2006 வரை அமெரிக்காவின் அரிசோனா பல்கலைக் கழகம், மிசிசிபி மற்றும் அர்கன்சாஸ் மாநிலங்களில் நடத்திய ஆய்வுகள் இதை நிரூபித்துள்ளன. எனவேதான் அனைத்துலக பல்லுயிர் பாதுகாப்புக்குழு, மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்களைக் களச்சோதனை முறையில் பயிரிடுவதற்குக் கூட தடை விதித்துள்ளது. ஐரோப்பிய நாடுகளில், இத்தொழில் நுட்பத்திற்கும், இதனைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருட்களின் இறக்குமதிக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆனால், ஏழை நாடான இந்தியாவில் 2002-இல் மரபணு மாற்றப்பட்ட கடுகும், 2003-இல் 8 விதமான பருத்தியும் அனுமதிக்கப்பட்டு நாடெங்கும் 30 இலட்சம் ஏக்கரில் களப்பரிசோதனைகள் நடத்தப்பட்டன. தமிழ்நாடு, கர்நாடகம், குஜராத், ம.பி;மராட்டியம் ஆகிய மாநிலங்களில் நடத்தப்பட்ட பருத்தியானது பாரம்பரிய பருத்தியைவிட 5 மடங்கு குறைவான விளைச்சலையே தந்து, பல்லாயிரக்கணக்கான விவசாயிகளுக்கு நட்டமேற்படுத்தியுள்ளது. விரக்தியடைந்த விவசாயிகள் பூச்சிமருந்து குடித்துத் தற்கொலை செய்து கொண்டனர். இந்த உண்மைகளை நாடாளுமன்ற மேலவையில் கேள்வி நேரத்தின் போதே அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

இருப்பினும், எவ்விதக் கட்டுப்பாடோ வரைமுறையோ இன்றி எல்லா வகையான உணவு தானியப் பயிர்களுக்கும் மரபணு மாற்ற ஆராய்ச்சிகளையும் களப்பரிசோதனைகளையும் இந்திய அரசு தாராளமாக அனுமதித்து வருகிறது. ஏழை நாடான இந்தியா இத்தொழில் நுட்பத்தைச் செயல்படுத்திப் பார்க்கும் சோதனைச்சாலை எலியாக மாற்றப்பட்டு விட்டது. பி.டி. பருத்தியிலிருந்து தொடங்கி கடுகு, கத்தரிக்காய், சோளம் என அனைத்து உணவுதானியங்களும் மட்டுமின்றி, இந்திய விவசாயத்தின் உயிர்நாடியான நெல் சாகுபடிக்கும் பேராபத்தாக பி.டி. நெல்லும் வந்துவிட்டது.

அமெரிக்காவின் ராக்பெல்லர் நிறுவனமும் ஐதராபாத் பல்கலைக் கழகமும் கூட்டுச் சேர்ந்து வறட்சியைத் தாங்கும் நெல் ரகத்தை மரபணு மாற்றம் மூலம் உருவாக்க ஆராய்ச்சி செய்கின்றன. வைட்டமின்''ஏ'' சத்து நிறைந்த நெல் ரகத்தை உருவாக்க புதுதில்லி, ஐதராபாத், கோவை ஆகிய இடங்களிலுள்ள அரசின் வேளாண் ஆய்வு மையங்கள் சுவிட்சர்லாந்து ஏகபோகக் கம்பெனியுடன் கூட்டுச் சேர்ந்துள்ளன. ''தங்க அரிசி'' எனும் வைட்டமின் சத்துக்கள் நிறைந்த அரிசியை உருவாக்க பிலிப்பைன்சின் சர்வதேச நெல் ஆராய்ச்சி மையமும் இந்திய வேளாண் ஆராய்ச்சி மையமும் கூட்டுச் சேர்ந்து ஆய்வுகள் நடத்துகின்றன.

கட்டுப்பாடற்ற இத்தகைய களப்பரிசோதனைகள் பயிர்களோடு மட்டும் நின்றுவிடவில்லை. இந்திய மக்களையும் சோதனைக்கூட எலிகளாக்கி பரிசோதிக்கும் கொடுமையும் இந்திய அரசின் துணையோடு நடந்து வருகிறது. ஏறத்தாழ 72 லட்சம் பேர் பயனடைவதாகக் கூறப்படும் ஒருங்கிணைந்த குழந்தைகள் ஊட்டச்சத்து திட்டத்தை இந்திய அரசு உலக வங்கி கடனைக் கொண்டு நடத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிப்பெண்கள், குழந்தைக்குப் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கு சத்து மாவு உருண்டைகள் வழங்கப்பட்டு வருகிறது. இதில் ''கேர்'' எனும் மிகப்பெரிய தன்னார்வ நிறுவனம் மூலம் மரபணு மாற்றப்பட்ட சோயாமாவையும் சோயா எண்ணெய்யையும் வழங்கி அத்தாய்மார்கள்-குழந்தைகளிடம் அதன் விளைவுகளை 2002-ஆம் ஆண்டில் சோதித்துப் பார்த்துள்ளனர். இந்த உணவின் தன்மை, விளைவுகள் பற்றிக் கண்டறிய எவ்வித பகுப்பாய்வு முறையும் இதுவரை இல்லை என்பதுதான் மிகப்பெரிய கொடுமை.

பி.டி.பருத்தி விதைகள் ஆந்திர, மகாராஷ்டிர பருத்தி விவசாயிகளைத் திவாலாக்கி, தற்கொலைக்குத் தள்ளிவிட்ட பின்னரும் இந்தக் கொலைகார தொழில்நுட்பத்தையும் சோதனைகளையும் முற்றாகத் தடைசெய்ய மறுத்து வருகிறது இந்திய அரசு. ஏனென்றால், இது உலக வர்த்தகக் கழகத்தின் உத்தரவு!

இந்த அடிமைத் தனத்தையே இரண்டாவது பசுமைப் புரட்சி என்று ஆளும் காங்கிரசு கும்பல் கொண்டாடுகிறது. ஏற்கெனவே உரம், பூச்சி மருந்துகளுக்காக ஏகாதிபத்தியக் கம்பெனிகளிடம் அண்டி நிற்கும் இந்திய விவசாயிகளை, விதைக்காகவும் கையேந்த வைத்து, இந்திய விவசாயத்தின் சுய சார்புத் தன்மையை முற்றாக அழித்துவிட வேண்டும் என்பதுதான் இரண்டாவது பசுமைப் புரட்சியின் பின்னுள்ள சதித்திட்டம்.

தலைப்பாகைக்கு மட்டுமல்ல; தலைக்கே பேராபத்து வந்துவிட்ட நிலையில், இம்மறுகாலனியத் தாக்குதலுக்கு எதிராக விவசாயிகளும் உழைக்கும் மக்களும் புரட்சிகர அமைப்புகளில் அணிதிரண்டு விடுதலைப் போரைத் தொடுக்காமல் பேரழிவிலிருந்து மீளவும் முடியாது.

● சுடர்

www.padippakam.com

# மும்பயிக் கலவர வழக்குகள்:
# காங்கிரசு கட்டிய கல்லறை

**மகாராஷ்டிர அரசு உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ள பிரமாணப் பத்திரம், பாதிக்கப்பட்ட முசுலீம்களுக்கு நீதி வழங்குவதை மறுக்கிறது.**

மும்பய்க் கலவரம் நடந்து முடிந்து 15 ஆண்டுகள் கடந்துவிட்டன. இக்கலவரத்தை விசாரித்த சிறீகிருஷ்ணா கமிசன், சிவசேனா தலைவர் பால் தாக்கரே, உயர் போலீசு அதிகாரிகள் உள்ளிட்டுப் பலரைக் குற்றவாளிகளாக அடையாளம் காட்டியிருக்கிறது. எனினும், அரசியல் செல்வாக்குமிக்க குற்றவாளிகளுள் ஒருவர்கூட இன்றுவரை தண்டிக்கப்படவில்லை. குறைந்தபட்சம், குற்றவாளிகள் விசாரணைக் கைதிகளாகக் கூடச் சிறையில் அடைக்கப்படவில்லை.

''நாங்கள் ஆட்சிக்கு வந்தால் சிறீகிருஷ்ணா கமிசன் அறிக்கையை அமல்படுத்துவோம்'' என்ற வாக்குறுதியை அள்ளி வீசி அதிகாரத்தைப் பிடித்த காங்கிரசு கூட்டணி ஆட்சியில்தான் மும்பய்க் கலவரம் தொடர்பான 1,371 வழக்குகள் போலீசு விசாரணையின் பொழுதே குழிதோண்டி புதைக்கப்பட்டன. 539 வழக்குகள் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு, குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டனர்; 253 வழக்குகள் நீதிமன்ற விசாரணை நாடகத்தில் சிக்கிக் கொண்டுள்ளன; 93 வழக்குகள் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படாமல், அரசால் முடக்கி வைக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட முசுலீம் மக்களுக்கு நீதி மறுக்கப்பட்டுவரும் இப்படிப்பட்ட நிலையில், சிறீகிருஷ்ணா கமிசன் அறிக்கை மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் கடந்த வருடம் ஆகஸ்டு மாதம் உச்சநீதி மன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது. மகாராஷ்டிர மாநில காங்கிரசு கூட்டணி அரசு, இவ்வழக்கு தொடர்பாக கடந்த சனவரி 16 அன்று தாக்கல் செய்துள்ள பிரமாணப் பத்திரம், இந்து மத வெறிக்குக் காங்கிரசு பாதுகாவலனாக இருந்து வருவதை மீண்டும் அம்பலப்படுத்திக் காட்டிவிட்டது.

மும்பய்க் கலவரம் தொடர்பாக, சிவசேனாவின் தலைவர் பால்தாக்கரே மற்றும் அக்கட்சியின் நாளேடு ''சாம்னா'' மீதும் ஒன்பது வழக்குகள் தொடுக்கப்பட்டன. இதில் மூன்று வழக்குகள் அரசாலேயே தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டன; நான்கு வழக்குகளில் குற்றப் பத்திரிகை வினையப்படாததால் (Framing of charges) பால் தாக்கரேயும், பிற குற்றவாளிகளும் அவ்வழக்குகளில் இருந்து 1996-ஆம் ஆண்டே விடுவிக்கப்பட்டு விட்டனர்; மீதமுள்ள இரண்டு வழக்குகளிலும், பால் தாக்கரே நிரபராதி எனத் தீர்ப்பளிக்கப்பட்டு, விடுதலை செய்யப்பட்டார்.

இவ்விடுதலையை எதிர்த்து மேல் முறையீடு செய்யப்பட்ட வழக்கு, மகாராஷ்டிரா உயர்நீதி மன்றத்தால் கடந்த ஆண்டு தள்ளுபடி செய்யப்பட்டது. ''பழைய வழக்குகளை மீண்டும் தோண்டுவதால், நீதி வழங்கிவிட முடியாது; மாறாக, அது மத ரீதியான இறுக்கத்தைத்தான் உருவாக்கும். ஏற்கெனவே காலம் கடந்து விட்டது. இத்தகைய சூழ்நிலையில், பால் தாக்கரேயை விடுதலை செய்து விசாரணை நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் தவறு காண முடியாது'' என உயர்நீதி மன்றம் தத்துவார்த்த விளக்கம் வேறு அளித்தது.

மகாராஷ்டிர மாநில அரசு உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ள பிரமாணப் பத்திரத்தில், ''பால் தாக்கரே மீதான மேல் முறையீட்டு வழக்கை உயர்நீதி மன்றம் தள்ளுபடி செய்ததில் தவறு காண முடியாது'' எனக் குறிப்பிட்டுள்ளது. மேலும், ''பால் தாக்கரே தொடர்பான மூன்று வழக்குகளில், குற்றச்சாட்டு குறித்த உண்மைத் தன்மையை நிரூபிக்க முடியாது; எனவே, இவ்வழக்குகளில் மேல் நடவடிக்கை எடுப்பது சாத்தியமற்றது'' எனக் கூறி, அவ்வழக்குகளை ஒரேயடியாகப் புதைத்து விட்டது.

மும்பய்க் கலவரத்தின்பொழுது, பால் தாக்கரேயின் தளபதியாகச் செயல்பட்டவர் மதுக்கர் சர்போத்தர். அவர், கலவர சமயத்தில் இராணுவத்திடம்

**இந்து மதவெறி பாசிஸ்டுகள் நடத்திய மும்பய்க் கலவரத்தின் கோரக் காட்சி.**
(கோப்புப் படம்)



www.padippakam.com

பிடிபட்ட பொழுது, அவர் பயணம் செய்த ஜீப்பில் இருந்து உரிமம் பெறப் பட்ட துப்பாக்கி ஒன்று; உரிமம் பெறாத இரண்டு துப்பாக்கிகள், கொலைவாட் கள், ஹாக்கி மட்டைகள் உள்ளிட்டுப் பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. இது தொடர்பாகப் பதியப்பட்ட இரண்டு வழக்குகளில் இருந்தும் மதுக் கர் சர்போத்தர் 1998-99-ஆம் ஆண்டு களிலேயே நிரபராதியாக விடுதலை செய்யப்பட்டு விட்டார். ''மேல் முறை யீடு செய்வதற்குத் தகுதியற்ற வழக்கு கள் இவை'' என உச்சநீதி மன்றத்திடம் கூறி, மதுக்கர் சர்போத்தருக்கு நிரந்தர பாதுகாப்பு அளித்துவிட்டது, காங்கிரசு கூட்டணி ஆட்சி.

> • மகாராஷ்டிர மாநில அரசால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்ட வழக்குகளின் எண்ணிக்கை 1,317.
>
> • நீதிமன்றங்களால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்ட வழக்குகளின் எண்ணிக்கை 539.
>
> • மேல்முறையீடு செய்வதற்குத் தகுதியற்றவை எனக் கைகழுவப்பட்டுவிட்ட வழக்குகளின் எண்ணிக்கை 379.

ஷாநவாஸ் வாக்லே என்ற பதின்வ யதுச் சிறுவன், கலவரத்தின்பொழுது போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட் டான். ''இது பச்சைப் படுகொலை'' எனக் குறிப்பிட்டுள்ள சிறீகிருஷ்ணா கமிசன், இச்சம்பவம் பற்றித் தனியாக விசாரணை நடத்த வேண்டும் எனத் தீர்ப்பளித்தது. ஆனால், மும்பய் போலீசோ, இப்படுகொலை தொடர் பாக வழக்கு கூடப் பதிவு செய்யாமல், விசாரணை நிலையிலேயே இவ்வ ழக்கை ஊத்தி மூடி விட்டது. அதேசம யம், கொல்லப்பட்ட ஷா நவாஸ் மீது போலீசாரால் பதிவு செய்யப்பட்ட வழக்கு, நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

கலவரம் நடந்த சமயத்தில் பைகுல்லா போலீசு நிலைய ஆய்வாள ராக இருந்த வாஹுலே என்ற மிருகம் தான் ஷாநவாஸைச் சுட்டுக் கொன் றான் என்பது ஊருக்கே தெரிந்த உண்மை. ஆனால், ''வாஹுலே, ஷாநவாஸைச் சுடவில்லை; அவருக் கும் இக்கொலைக்கும் எவ்விதத் தொடர் புமில்லை'' என மகாராஷ்டிரா அரசு சான்றளித்து, வாஹுலே மீது வழக்குப் பதிவு செய்ய மறுத்து வருகிறது.

''ஷாநவாஸ் சுட்டுக் கொல்லப்பட் டதை அச்சிறுவனின் தங்கை யாஸ்மின் நேரடியாகப் பார்த்திருக்கிறார்; மேலும் இச்சம்பவம் முழுவதற்கும் யாஸ்மின் தான் நேரடி சாட்சி'' என சிறீகிருஷ்ணா கமிசன் தனது அறிக்கையில் குறிப்பிட் டுள்ளது. ஆனால், மகாராஷ்டிர மாநில அரசு தாக்கல் செய்துள்ள பிரமாணப் பத்திரத்தில், ''ஷாநவாஸ் போலீசாரால் தான் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ப தற்கு எந்த சாட்சியமும் இல்லாததால், போலீசார் மீது வழக்குப் பதிவு செய்ய முடியாது'' எனக் குறிப்பிட்டுள்ளது.

''ஸ்டார் மெட்டல்'' என்ற ஆலை வளாகத்தினுள், கலவரத்தின் பொழுது 11 பேர் உயிரோடு எரித்துக் கொல்லப் பட்டனர். இப்படுகொலை தொடர் பாகக் கைது செய்யப்பட்ட ஒன்பது பேரும் 1996-ஆம் ஆண்டே தடா நீதிமன்றத்தால் விடுதலை செய்யப் பட்டு விட்டனர். இவ்வழக்கிலும் மேல் முறையீடு செய்ய முடியாதென பிரமாணப் பத்திரத்தின் மூலம் மறுத் துவிட்டது, காங். அரசு.

மும்பய்க் கலவரத்தின்பொழுது இணை போலீசு கமிசனராக இருந்த ஆர்.டி.தியாகி, ஆய்வாளர் பி.டி. லஹானே ஆகிய இருவர் தலைமை யில் சுலைமான் பேக்கரிக்குள் நுழைந்த போலீசு பட்டாளம், அப் பேக்கரியைச் சேர்ந்த ஒன்பது தொழி லாளர்களைச் சுட்டுக் கொன்றது. இப் படுகொலையை நடத்திய ஆர்.டி. தியாகியும், லஹானேயும், மற்ற ஏழு போலீசுக்காரர்களும் விசாரணை நீதி மன்றத்தால் நிரபராதிகளாகத் தீர்ப்ப ளிக்கப்பட்டு விடுதலை செய்யப் பட்டு விட்டனர். இத்தீர்ப்பு வந்து ஐந்து ஆண்டுகள் ஓடிய பிறகு, ''மேல் முறையீடு செய்வதற்கு இவ்வழக்கு தகு தியுள்ளதுதானா?'' என ஆராயப் போவதாக பிரமாணப் பத்திரத்தில் ஒரு வெற்று வாக்குறுதியை அளித்திருக்கி றது, காங். கூட்டணி ஆட்சி.


ஹரி மசூதிக்குள் போலீசு படை யோடு நுழைந்து அங்கு தொழுகை செய்து கொண்டிருந்த ஏழு முசுலீம்க ளைச் சுட்டுக் கொன்ற நிகில் காப்ஸே என்ற போலீசு ஆய்வாளர் மீது துறை ரீதியாகக் கூட நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. எனினும், பிரமாணப் பத்திரத் தில், ''இவ்வழக்கை விசாரிக்க மையப் புலனாய்வுத் துறையை ஏற்கெனவே அணுகியதாகவும், சி.பி.ஐ. விசாரிக்க மறுத்துவிட்டதாகவும், தற்பொழுது இவ்வழக்கை சி.பி.ஐ. வசமே ஒப்ப டைக்க ஆணை பிறப்பிக்க ஆலோசித்து வருவதாகவும்'' கூறி, தனது மெத்த னத்தை நியாயப்படுத்தியிருக்கிறது, காங். கூட்டணி.

மகாராஷ்டிர அரசால் கைகழுவப் பட்ட 1,317 வழக்குகளை மீண்டும் நடத்துவது பற்றி பிரமாணப் பத்திரத் தில் எந்த உறுதிமொழியும் அளிக்கப்ப டவில்லை; நீதிமன்றங்களால் தள்ளு படி செய்யப்பட்ட 539 வழக்குகளில், 379 வழக்குகள் மேல் முறையீடு செய் வதற்குத் தகுதியற்றவை என்றும், 50 வழக்குகள் தொடர்பாக மேல்முறை யீடு செய்வது பற்றி மாநில அரசின் சட் டத்துறை ஆராய்ந்து வருவதாகவும் கூறி, குற்றவாளிகளுக்குச் சாதகமாக நடந்து கொண்டுள்ளது, காங். கூட்டணி ஆட்சி. சுருக்கமாகச் சொன்னால், மும் பய்க் கலவரம் தொடர்பான வழக்குக ளில் தாமதமாகவாவது நீதி கிடைக்கும் என்று யாராவது நம்பிக் கொண்டிருந் தால், பிரமாணப் பத்திரத்தின் மூலம் அந்த நம்பிக்கையில் நெருப்பை அள் ளிப் போட்டுவிட்டது, 'மதச்சார்பற்ற' காங்கிரசுக் கட்சி!

• அன்பு

**மும்பய்க் கலவரத்தில் போலீசும், இந்து மத வெறியர்களும் கூட்டாகச் செயல்பட்டதை அம்பலப்படுத்திய நீதிபதி சிறீகிருஷ்ணா.**

(கோப்புப்படம்)



www.padippakam.com

# பெட்ரோலியத் துறை:
# பொன் முட்டையிடும் வாத்து

**இந்தியாவில் பெட்ரோல் – டீசல் மீது விதிக்கப்படும் அபரிதமான வரிகள்தான், அவற்றின் விலை உயர்வுக்கு முக்கிய காரணம்.**

பல மாதங்களாக எதிர்பார்க்கப்பட்ட பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வு, பொது பட்ஜெட் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னதாக மக்களின் தலையில் இடியாக இறங்கியிருக்கிறது. எனினும், மண்ணெண்ணெய் மற்றும் சமையல் எரிவாயுவின் விலைகளை உயர்த்தாமல், பெட்ரோல் விலையில் இரண்டு ரூபாயும்; டீசலின் விலையில் ஒரு ரூபாயும் மட்டும் உயர்த்தப்பட்டிருப்பதைக் காட்டி, தன்னை மக்களின் வேதனையை அறிந்தவனாகக் காட்டிக் கொள்கிறது, காங்.கூட்டணி ஆட்சி.

இவ்விலை உயர்வின் மூலம் கிடைக்கும் இலாபம் ஒருபுறமிருக்க, பெட்ரோல்-டீசல் விற்பனையின் மூலம் மைய/ மாநில அரசுகளுக்குக் கிடைத்துவரும் வரி வருமானம், 6,500 கோடி ரூபாய் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இக்கட்டண உயர்வின் மூலம், பட்ஜெட்டிற்கு முன்பாகவே மக்களிடம் ஒரு வரிக் கொள்ளையை நடத்திவிட்டது, மன்மோகன் சிங் கும்பல்.

எப்பொழுதெல்லாம் பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்த்தப்படுகிறதோ, அப்பொழுதெல்லாம் அதனை நியாயப்படுத்த, ஒரு ''ரெடிமேட்'' காரணத்தைக் கூறி வருகிறது, மைய அரசு. ''சர்வதேச சந்தை விலையை ஒப்பிடும் பொழுது, இந்தியாவில் பெட்ரோலியப் பொருட்கள் விலை மலிவாக விற்கப்படுவதாகவும்; அதனால் அரசு நிறுவனங்களுக்கு ஏகப்பட்ட நட்டம் ஏற்படுவதாகவும் (தற்போதைய நட்டக் கணக்கு ரூ. 70,000 கோடி); அந்த நட்டத்தை இனியும் தாங்க முடியாது என்ற நிலையில்தான் பெட்ரோலியப் பொருட்களின் விலைகள் மிதமாக ஏற்றப்படுவதாகவும்'' மைய அரசும், அதன் எடுபிடிகளும் நியாயப்படுத்தி வருகின்றனர். ஆனால், பெட்ரோலியப் பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்வது குறித்து, நாடாளுமன்ற நிலைக் குழு அரசுக்கு அளித்துள்ள அறிக்கையைப் படித்தால், அரசு கூறிவரும் நட்டக் கணக்கு, நியாயவாதங்கள் அனைத்தும் மிகப் பெரிய பித்தலாட்டம் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

பெட்ரோல், டீசல் போன்ற பெட்ரோலியப் பொருட்களை உற்பத்தி செய்யப் பயன்படும் மூலப் பொருளான கச்சா எண்ணெய் (crude oil) நமது நாட்டில் தேவையான அளவிற்குக் கிடைப்பதில்லை என்றாலும் கூட, இந்தியாவின் (பெட்ரோலிய) தேவையில் ஏறத்தாழ 30 சதவீதத்தை உள்நாட்டில் கிடைக்கும் கச்சா எண்ணெய்தான் பூர்த்தி செய்கிறது. வியாபாரம் என்று பார்த்தால்கூட, உள்நாட்டில் எடுக்கப்படும் கச்சா எண்ணெயை, இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய்க்கு ஈடாக விற்பனை செய்வதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. ஆனால், மைய அரசோ, இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய் மீது என்னென்ன உற்பத்திச் செலவீனங்கள் ஏற்றப்படுமோ, அவை அனைத்தையும் உள்நாட்டில் உற்பத்தியாகும் கச்சா எண்ணெய் மீதும் ஏற்றி வைத்து விற்பனை செய்து வருகிறது. உள்நாட்டுத் தயாரிப்புகளை, ஃபாரின் சரக்குகளைப் போல விற்கும் மோசடி வியாபாரத்தை, மைய அரசு சட்டபூர்வமாகவே நடத்தி வருகிறது.

இயற்கை எரிவாயு மற்றும் பெட்ரோலியப் பொருட்கள் தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற நிலைக் குழு, பெட்ரோலியப் பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்வது குறித்து அரசுக்கு ஆக. 2005-இல் அளித்துள்ள அறிக்கையில், ''இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய் மீது விதிக்கப்படும் கடற்பயணச் சரக்குக் கட்டணம், துறைமுகக் கட்டணம், சுங்கவரி போன்ற செலவீனங்களை உள்நாட்டு கச்சா எண்ணெய் மீது விதித்து விலை நிர்ணயம் செய்யக் கூடாது'' என அரசுக்குப் பரிந்துரை செய்தது.

இப்பரிந்துரையை ஒதுக்கித் தள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு, ''உள்நாட்டு கச்சா எண்ணெய் மீது விதிக்கப்படும் வரிகள் மற்றும் அதன் விலையை நிர்ணயம் செய்வது தொடர்பாக அரசுக்கு ஆலோசனை சொல்ல ரங்கராஜன் கமிட்டியை அமைத்திருப்பதாக''க் கூறி, நாடாளுமன்ற நிலைக்குழுவின் பரிந்துரை அறிக்கையைக் கரையானுக்கு இரையாக்கியது, மைய அரசு.

ரங்கராஜன் கமிட்டியால் அரசுக்கு அளிக்கப்பட்ட பரிந்துரையில், உள்நாட்டு கச்சா எண்ணெய்க்கு விலை நிர்ணயிப்பது தொடர்பாக எவ்வித ஆலோசனையும் வழங்கப்படவில்லை என்பதைக் ''கண்டுபிடித்த'' நாடாளுமன்ற நிலைக் குழு, ''மைய அரசு, நிலைக்குழுவிடம் பொய் சொல்லியதாக''க் குற்றஞ்சுமத்தியது. மேலும், ஜூன் 2006-இல் அன்று அரசுக்கு அளித்த மற்றொரு அறிக்கையில், ''உள்நாட்டு கச்சா எண்ணெய்க்கு விலை நிர்ணயிப்பது தொடர்பாக ஏற்கெனவே அளிக்கப்பட்ட பரிந்துரைகளை அமல்படுத்துமாறு'' மீண்டும் வலியுறுத்தியது, நாடாளுமன்ற நிலைக்குழு. நாடாளுமன்ற நிலைக்குழுவை நாடாளுமன்றத்திற்கு இணையாக மதிக்க வேண்டும் எனக் கூறப்பட்டாலும், அது அளித்த பரிந்துரைகளோ, பைசா காசுக்கும் பயன் இல்லாமல், செவிடன் காதில் ஊதிய சங்காக முடிந்து போனது.

கச்சா எண்ணெயின் அடக்க விலையை நிர்ணயிப்பதில் நடந்து வரும் இப்பகற் கொள்ளை ஒருபுறமிருக்க, கச்சா எண்

www.padippakam.com

ணெயில் இருந்து தயாரிக்கப்படும் பெட்ரோலியப் பொருட்கள் மீது விதிக்கப்படும் வரி என்பது, மைய/மாநில அரசுகளின் கஜானாவை நிரப்பும் அமுதசுரபியாக இருந்து வருகிறது.



சென்னையில் ஒரு லிட்டர் பெட்ரோலின் சில்லறை விற்பனை விலை ரூ. 41.25. இதில் ரூ. 23.97-ஐ, வரியாக, மைய/மாநில அரசுகள் பறித்துக் கொள்கின்றன. இதனைக் கழித்து விட்டுப் பார்த்தால், 1 லிட்டர் பெட்ரோலின் சில்லறை விற்பனை விலை ரூ. 17.28 தான்.

பெட்ரோலியப் பொருட்களின் மீது விதிக்கப்படும் வரிகள் சிறீலங்காவில் 37%, தாய்லாந்தில் 24%, பாகிஸ்தானில் 30%, மற்ற பல நாடுகளில் 20 சதவீதமாகவும் இருக்கும்பொழுது இந்தியாவில், பெட்ரோலியப் பொருட்கள் மீது மாநில அரசுகள் விதிக்கும் விற்பனை வரி மட்டும் 18.9 சதவீதத்தில் இருந்து 34 சதவீதம் வரை எகிறிப் பாய்கிறது. இவ்விற்பனை வரி தவிர்த்து, சுங்கவரி, கலால் வரி, நுழைவுவரி, கல்விவரி, எண்ணெய் நிறுவனங்களின் வளர்ச்சி வரி என அடுக்கடுக்காக பெட்ரோலியப் பொருட்கள் மீது பல்வேறு வரிகள் விதிக்கப்படுகின்றன. ஒட்டு மொத்தமாக, ஒரு லிட்டர் பெட்ரோலின் சில்லறை விற்பனை விலையில் 57 சதவீதமும்; ஒரு லிட்டர் டீசலின் சில்லறை விற்பனை விலையில் 35 சதவீதமும் பல்வேறு வரிகளாக மக்களிடமிருந்து பிடுங்கப்படுகின்றன.

> சென்னையில் ஒரு லிட்டர் பெட்ரோலின் சில்லறை விற்பனை விலை ரூ. 41.25. இதில் ரூ. 23.97-ஐ, வரியாக, மைய / மாநில அரசுகள் பறித்துக் கோள்கின்றன. இதனைக் கழித்துவிட்டுப் பார்த்தால், 1 லிட்டர் பெட்ரோலின் சில்லறை விற்பனை விலை ரூ. 17.28 தான்.

பெட்ரோலியத்துறை அமைச்சகம் நாடாளுமன்ற நிலைக் குழுவுக்குக் கொடுத்துள்ள அறிக்கையின்படி, 2004-05-ஆம் ஆண்டில் பெட்ரோலியப் பொருட்களின் விற்பனை மூலம் மைய அரசுக்குக் கிடைத்த வரி வருமானம் 77,692 கோடி ரூபாய்; மாநில அரசுகளுக்குக் கிடைத்த வரி வருமானம் 43,254 கோடி ரூபாய். அந்த ஆண்டு, மைய அரசிற்கு சுங்க வரி மூலம் கிடைத்த வருமானத்தில் (54,738 கோடி ரூபாய்), 35 சதவீதப் பங்கு பெட்ரோலியப் பொருட்களின் விற்பனை மூலம் மட்டுமே கிடைத்திருக்கிறது.

பெட்ரோலியப் பொருட்களின் விலைகள் உயர்த்தப்படும் ஒவ்வொரு முறையும், அவ்விலை உயர்வுக்கு நேர் விகிதத்தில் அரசின் வரி வருமானமும் அதிகரித்து வந்திருக்கிறது. 2005-06 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில், 53,182 கோடி ரூபாய் சுங்க வரியாக வசூலிக்க வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்த இலக்கு பின்னர் 64,215 கோடி ரூபாயாகத் திருத்தப்பட்டது. அந்த பட்ஜெட் ஆண்டின் இறுதியில் சுங்க வரி வருமானம் 65,050 கோடி ரூபாயாக அதிகரித்தது. பட்ஜெட்டில் போட்டதைவிட 22.32 சதவீதம் அதிகமாக சுங்கவரி வசூலானதற்கு, பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வும் காரணமாக அமைந்தது என மைய அரசின் தணிக்கை அறிக்கை குறிப்பிடுகிறது.


பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வால் பணவீக்கம் ஏற்பட்டு, ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சிக்கும் வேட்டு வைத்துவிடும் என்பதால், முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்கள்கூட, பெட்ரோலியப் பொருட்களின் மீது விதிக்கப்படும் வரிகளைக் குறைக்குமாறு அரசிடம் கூறி வருகிறார்கள். ஆனால் மைய அரசோ, இந்த வரிக் கொள்ளையை விரிவாக்குவதில்தான் குறியாக இருந்து வருகிறது.

எங்கும் இல்லாத அதிசயமாக, எண்ணெய் நிறுவனங்களின் வளர்ச்சி வரி என்ற பெயரில் புதுவிதமான வரியொன்றை உள்நாட்டு கச்சா எண்ணெய் மீது விதித்து, அதன் மூலம் ஆண்டுக்கு 5,000 கோடி ரூபாய் வசூலித்து வருகிறது, மைய அரசு. 1974-ஆம் ஆண்டு தொடங்கி விதிக்கப்பட்டு வரும் இவ்வரியின் மூலம், இதுநாள்வரை ஏறத்தாழ 64,000 கோடி ரூபாய் மைய அரசிற்கு வருமானம் கிடைத்திருந்தாலும், எண்ணெய் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக இவ்வரி வருமானத்தில் இருந்து செலவழிக்கப்பட்டுள்ள தொகை 902 கோடி ரூபாய் தான். மீதிப் பணம் முழுவதையும் மைய அரசு ஊதாரித்தனமாகச் செலவழித்திருப்பதாக நாடாளுமன்ற நிலைக்குழு குற்றஞ்சுமத்தியுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக பெட்ரோலியப் பொருட்களின் மீது கல்வி வரியைக் விதித்து வருகிறது மைய அரசு; வளர்ச்சி வரியைச் சுருட்டிக் கொண்டு, எண்ணெய் நிறுவனங்களையே அம்போ எனக் கைவிட்டுவிட்ட மைய அரசு, கல்வி வரியில் மட்டும் கை வைக்காமல் விட்டிருக்குமா?

சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெயின் விலை தாறுமாறாக உயரும் பொழுது, அதனின் பாதிப்பில் இருந்து உள்நாட்டு நுகர்வோரைக் காப்பாற்ற 15,000 கோடி ரூபாய் பெறு

www.padippakam.com




“ பெட்ரோலியப் பொருட்களின் விற்பனை மூலம் 2004-05-ஆம் ஆண்டில் அரசுக்குக் கிடைத்த வரி வருமானம் 1,20,946 கோடி ரூபாய். அதேசமயம், 2005-06-ஆம் ஆண்டில் மண்ணெண்ணெய்க்கும் சமையல் எரிவாயுக்கும் கொடுத்த மானியமோ 2,535 கோடி ரூபாய்தான். ”

மான அவசர கால நிதியொன்றை மைய அரசு தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. அரசுக்குப் பதிலாக, பெட்ரோலியப் பொருட்களின் விலையை சந்தை தீர்மானிக்கும்படியான சீர்திருத்தம் இத்துறையில் புகுத்தப்பட்டபொழுது, அந்த 15,000 கோடி ரூபாயையும் மைய அரசே சுருட்டிக் கொண்டது.

இந்தியாவில் உள்ள 18 கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளில் 17 அரசு வசமும், ஒரு ஆலை தரகு முதலாளி அம்பானி வசமும் உள்ளன. இந்தியாவின் ஒட்டு மொத்த எண்ணெய் சுத்திகரிப்புத் திறனில் 74 சதவீதம் அரசு நிறுவனங்களிடமும், 26 சதவீதம் அம்பானியிடம் இருக்கிறது. எனினும், இந்தியாவில் இருந்து பெட்ரோலியப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் வர்த்தகத்தில் அம்பானி நிறுவனம்தான் (59 சதவீத ஏற்றுமதி) முன்னணியில் இருக்கிறது. அரசாங்கம் அம்பானியிடம் கொண்டுள்ள வர்க்கப் பாசம்தான் இதற்குக் காரணம். பெட்ரோலியப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு, அரசு சுங்க வரிச் சலுகைகளை அளித்திருக்கிறது. இந்தச் சலுகைகளை அம்பானியே ஏகபோகமாக அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவே, ஏற்றுமதி வர்த்தகத்தில் அரசு எண்ணெய் நிறுவனங்கள் அடக்கி வாசிக்கின்றன.

இதனை ஆராய்ந்த நாடாளுமன்ற நிலைக்குழு, ''சர்வதேசச் சந்தையில் பெட்ரோலியப் பொருட்களுக்கு நல்ல விலை கிடைப்பதால், விற்பனையின் மூலம் கிடைக்கும் இலாபமே போதுமானது; ஏற்றுமதியை ஊக்குவிக்கத் தனியாக வரிச் சலுகைகளை அளிக்க வேண்டியதில்லை. இந்த வரிச் சலுகைகளை நீக்குவதால் கிடைக்கும் வருமானத்தை, உள்நாட்டு மக்கள் பலன் அடையும்படி, பெட்ரோலியப் பொருட்களின் விலையைக் குறைக்கப் பயன்படுத்தலாம்'' எனப் பரிந்துரைத்தது.

இந்த ஆலோசனையைக் கேட்டு, அம்பானி அலறுவதற்கு முன்பாகவே, அரசாங்கம் அலறியது. ''இந்தியாவில் தயாரிக்கப்படும் பெட்ரோலியப் பொருட்கள் சர்வதேசச் சந்தையில் நிலவும் போட்டியைச் சமாளிக்கும் வண்ணம் விலை மலிவாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே சுங்கவரிச் சலுகைகளை அளித்து வருகிறோம். எனவே, இச்சலுகைகளைத் திரும்பப் பெற முடியாது'' எனக் கூறி, அம்பானியின் வயிற்றில் பாலை வார்த்தது.

அரசாங்கத்தின் கொள்கை எப்படி ஏறுக்கு மாறாக இருக்கிறதென்று பாருங்கள். பெட்ரோலும், டீசலும், மண்ணெண்ணெயும், சமையல் எரிவாயுவும் உள்நாட்டு மக்களுக்கு விலை மலிவாகக் கிடைக்க வேண்டும் என்பது பற்றி அக்கறை கொள்ளாத அரசாங்கம், இந்தியப் பெட்ரோலியப் பொருட்கள் சர்வதேசச் சந்தையில் விலை மலிவாகக் கிடைக்க வேண்டும் எனக் கவலைப்படுகிறது. மண்ணெண்ணெய்க்கும், சமையல் எரிவாயுவுக்கும் தரப்படும் 'மானியத்தை' நிறுத்த வேண்டும் எனத் திருவாய் மலரும் மன்மோகன் சிங், அம்பானி அனுபவித்து வரும் ஏற்றுமதி வரிச் சலுகைகளை நிறுத்த மறுக்கிறார்.

2004-05 ஆம் ஆண்டில் பெட்ரோலியப் பொருட்களின் விற்பனை மூலம் அரசுக்குக் கிடைத்த மொத்த வரி வருமானம் 1,20,946 கோடி ரூபாய் என்று ஏற்கெனவே பார்த்தோம். இவ்வரி வருமானம் போக, அரசு எண்ணெய் நிறுவனங்கள் ஒவ்வொரு ஆண்டும் பல்லாயிரம் கோடி ரூபாயை இலாப ஈவாக மைய அரசிற்கு அளித்து வருகின்றன. சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெயின் விலை குறைந்த பொழுது, அதற்கேற்ப உள்நாட்டில் விலை குறைப்பு செய்யாமல் அடித்த கொள்ளை தனிக்கதை. இப்படியாக பெட்ரோலியத் துறை பொன் முட்டையிடும் வாத்தாக இருக்கும் அதே சமயம், சமையல் எரிவாயுவுக்கும், மண்ணெண்ணெய்க்கும் 2005-06-ஆம் ஆண்டில் அரசு கொடுத்த 'மானியமோ' வெறும் 2,535 கோடி ரூபாய்தான். ***(ஆதாரம்: தினமணி, 13.1.08, பக்.8)***

பொது மக்களிடமிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஒரு இலட்சம் கோடி ரூபாய்க்கு மேல் வரியாகப் பறித்துக் கொண்டு விட்டு, 2,500 கோடி ரூபாயைத் திருப்பித் தருவதை மானியம் என்று எப்படிச் சொல்ல முடியும்? இந்த 2,500 கோடி ரூபாய் திருப்பித் தரப்படுவதைக் கூட நிறுத்திவிட வேண்டும் எனக் கூறிவரும் மன்மோகன் சிங்கின் மேதமைக்கும், ஒரு வழிப்பறித் திருடனின் இரக்கமின்மைக்கும் இடையே என்ன வேறுபாடு இருந்து விட முடியும்?

சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெயின் விலை உயர்ந்து கொண்டே போவதற்கு அமெரிக்கா, ஈராக்கில் நடத்திவரும் ஆக்கிரமிப்புப் போர், அமெரிக்கப் பொருளாதாரமும், அமெரிக்க டாலரும் நசிவடைந்திருப்பது உள்ளிட்டுப் பல்வேறு திரைமறைவுக் காரணங்கள் உள்ளன. இவற்றைக் கண்டித்து அம்பலப்படுத்த முன்வராத மன்மோகன்சிங், பெட்ரோல் - டீசலின் விலையை உயர்த்தி, மக்களின் இரத்தத்தைக் குடிக்கிறார். இப்படிப்பட்டவரை பொருளாதாரப் புலி என அழைப்பதைவிட, ஆட்கொல்லிப் புலி என அழைப்பதுதான் பொருத்தமாக இருக்கும்.

● செல்வம்

www.padippakam.com

# பட்டினிக் கொடுஞ்சிறைக்குள் பதறும் உலகம்

பட்டினிக் கொடுமையால் தன்னையும் கடவுளையும் நொந்து கொண்டு, இறைவன் தமக்குக் "கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா?" என்று பல நூறு ஆண்டுகளுக்கு முந்தைய பழம்பாடல் ஒன்றில் தமிழ்ப் புலவர் ஒருவர் கேட்டிருந்தார். அப்புலவரின் வேதனைமிக்க இந்த வரிகள் இன்று ஹெய்தி நாட்டில் யதார்த்த உண்மையாகியுள்ளது. அந்நாட்டு ஏழை மக்கள் இப்போது மண்ணைத் தின்றால்தான் உயிர் வாழ முடியும் என்று கற்பிக்கப்பட்டுள்ளனர். ஆனால், இவ்வாறு கற்றுத் தந்திருப்பது எல்லாம்வல்ல இறைவனல்ல, ஏகாதிபத்தியம்!

வெளிறிய மஞ்சள் நிறக் களிமண்; அதைக் குழைத்து அச்சில் வார்த்து காயவைத்து, சிறிது உப்பு சேர்த்து உண்கின்றனர் ஹெய்தி நாட்டின் ஏழை மக்கள். கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏற்படும் குமட்டலைத் தணிக்க இக் களிமண்ணைச் சிறிதளவு மருந்து போல உட்கொள்வதென்பது அந்நாட்டு வழக்கம். இப்போது இக் களிமண்ணே ஏழைகளின் முழுமையான உணவாகி விட்டது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தெற்கு வாசலில் - கரீபியன் தீவுக் கூட்டத்தில் கியூபாவுக்கு அருகிலுள்ள சின்னஞ்சிறு நாடு தான் ஹெய்தி. ஏறத்தாழ ஒரு கோடி கருப்பின மக்களைக் கொண்டுள்ள இந் நாடு, பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தாலும் பின்னர் அமெரிக்க மேலாதிக்க வல்லரசாலும் சூறையாடப்பட்டு, இன்று உலகின் ஏழ்மை சூழ்ந்த நாடுகளில் ஒன்றாகிப் பரிதவித்து நிற்கிறது. ஏகாதிபத்தியவாதிகளால் திணிக்கப்பட்டு ஹெய்தியின் கைக்கூலி ஆட்சியாளர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மறுகாலனியாதிக்கக் கொள்ளையால், அந்நாட்டின் ஆகப் பெரும்பான்மையான மக்கள் வேலையிழந்து வாழ்விழந்து பட்டினியில் பரிதவிக்கிறார்கள். அத்தியாவசிய உணவுப் பொருட்களை ஏழைகளால் வாங்க முடியாத அளவுக்கு விலையேற்றம் பலமடங்கு அதிகரித்து விட்டது.

இந்நிலையில் "ரஸ்க்" ரொட்டியைப் போல, அச்சில் வார்த்து காய வைக்கப்பட்ட களிமண்ணைத் தின்று பசியைப் போக்கிக் கொள்கின்றனர், அந்நாட்டு ஏழைகள். இக்களிமண் ரொட்டி வாயில் உள்ள ஈரப்பதத்தை உறிஞ்சி விடுவதால், வாய்ப்புண், வயிற்றுப்புண் ஏற்பட்டு தீராத நோய்களுக்கு இம்மக்கள் பலியாகி வருகிறார்கள். ஹெய்தியின் அவலம் மெதுவாகக் கசிந்து உலகையே அதிர்ச்சியுறச் செய்ததும், ஐ.நா. மன்றத்தின் உணவு மற்றும் விவசாயக் கழகம் அவசர நிலைப் பிரகடனம் செய்து, அந்நாட்டுக்கு உடனடியாக உணவுப் பொருட்களை அனுப்புமாறு உலக நாடுகளைக் கோரியுள்ளது.

இது ஏதோ ஹெய்தி நாட்டில் மட்டும் ஏற்பட்ட பிரச்சினை அல்ல. ஏகாதிபத்தியவாதிகளால் உலகின் சிவப்பு விளக்குப் பகுதியாகச் சீரழிக்கப்பட்டு விட்ட தாய்லாந்து நாட்டில், ஏழை விவசாயிகள் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையேற்றத்தால் பட்டினியில் பரிதவிக்கின்றனர். பசிக் கொடுமையிலிருந்து மீள, அவர்கள் மூங்கில் புழுக்கள், ஈசல்-விட்டில் பூச்சிகள், காட்டெறும்புகள் முதலானவற்றைப் பிடித்து வறுத்துத் தின்னும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். வல்லரசு கனவு காணும் இந்தியாவின் உ.பி.மாநிலத்தில் முஷாகர் எனப்படும் தாழ்த்தப்பட்ட சாதியினர், பட்டினியிலிருந்து மீள எலிகளையும் நத்தைகளையுமே உணவாக உட்கொள்கின்றனர். ஆப்பிரிக்க நாடுகளில் உணவுப் பஞ்சத்தால் பல லட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் வாடுகின்றனர்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையேற்றத்தால் உலகின் பல ஏழை நாடுகளில் இத்தகைய அவலங்கள் தொடரும் அதேநேரத்தில், மாரிடானியா, செனகல், கினியா, பர்கினா

**ரொட்டி போல அச்சில் வார்த்து காய வைக்கப்படும் களிமண்: பட்டினியிலிருந்து மீள ஹெய்தி நாட்டு ஏழைகள் தின்னும் 'உணவு'.**



www.padippakam.com

பாசோ, மொராக்கோ முதலான ஆப்பிரிக்க நாடுகளிலும், உஸ்பெகிஸ்தான், யேமன் முதலான ஆசிய நாடுகளிலும், வட அமெரிக்காவிலுள்ள மெக்சிகோ நாட்டிலும் உணவுக் கலகங்கள் வெடித்துப் பரவுகின்றன.

இந்தியா உள்ளிட்டு இந்த ஏழை நாடுகளை மட்டுமின்றி, உலகையே அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையேற்றம் என்னும் கொள்ளை நோய் கவ்வியுள்ளது. கடந்த ஓராண்டுக்குள் மக்காசோளத்தின் விலை 50 சதவீதமும், அரிசியின் விலை 25 சதவீதமும், கோதுமையின் விலை இருமடங்காகவும் அதிகரித்துள்ளதாகக் குறிப்பிடும் ஐ.நா. மன்றம், உலக அளவில் தானியக் கையிருப்பு 57 நாட்களுக்கு மட்டுமே உள்ளதாகவும், கடந்த 25 ஆண்டுகளில் இதுபோன்றதொரு படுமோசமான நிலைமை ஏற்பட்டதில்லை என்றும் சுட்டிக் காட்டியுள்ளது.

கடந்த ஈராண்டுகளாக அத்தியாவசிய உணவுப் பொருட்களின் கிடுகிடு விலையேற்றத்துக்கு ''உயிரி எரிபொருள்'' (Bio Fuel) எனும் ஏகாதிபத்திய திட்டமே முதன்மையான காரணமாகும். உயிரி எரிபொருள் தயாரிப்புக்காக மக்காச்சோளம், சோயா, கரும்பு, சிலவகையான கிழங்குகள், எண்ணெய் வித்துக்கள் முதலான விவசாய விளைபொருட்கள் திருப்பி விடப்பட்டுள்ளதாலேயே இந்த விலையேற்றமும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளன.



> உலகின் எரிபொருள் தேவையை ஈடுகட்டவும், புவி வெப்பம் உயர்ந்து வருவதைத் தடுக்கவும்தான் உயிரி எரிபொருள் திட்டம் என்று ஏகாதிபத்தியங்கள் வாதிட்டாலும், இது ஏழை மக்களைப் பட்டினி போட்டுக் கொல்லும் வக்கிரத் திட்டமாகவே உள்ளது.

உலகின் எரிபொருள் தேவையை ஈடுகட்டவும், சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்கவும், புவி வெப்பம் உயர்ந்து வருவதைத் தடுக்கவும்தான் உயிரி எரிபொருள் திட்டம் என்று ஏகாதிபத்தியங்கள் வாதிட்டாலும், இது ஏழை மக்களைப் பட்டினி போட்டுக் கொல்லும் வக்கிரத் திட்டமாகவே உள்ளது. மேலும், பெட்ரோல், நிலக்கரி போன்ற மரபு சார்ந்த எரிபொருளுக்கு மாற்றீடாக உயிரி எரிபொருள் அமைந்து விடாது என்றும் இதனால் விபரீத விளைவுகளே ஏற்படும் என்றும் பல்வேறு ஆய்வுகள் நிரூபித்துக் காட்டியுள்ளன.

## அவலத்திலும் இலாபவெறி! ஏகாதிபத்தியவாதிகளின் வக்கிரம்!

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையேற்றத்தால் பட்டினியால் சிக்கித் தவிக்கும் தாய்லாந்து நாட்டின் ஏழைகள் மூங்கில் புழுக்களைப் பிடித்து வறுத்து உண்கிறார்கள். இப்போது அதையும் பறித்துக் கொண்டு அம்மக்களைப் பட்டினிச் சாவுக்குத் தள்ளிவிட ஏகாதிபத்திய நிறுவனங்கள் கிளம்பியுள்ளன.

தாய்லாந்து உள்ளிட்ட தென்கிழக்காசிய நாடுகளில், ஏழைகள் உண்ணும் புழு, பூச்சிகளைத் தரம் உயர்த்தி அவற்றை டப்பாக்களில் அடைத்து விற்கும் வழிமுறைகளை ஆராய்வதற்காக, தாய்லாந்தில் உள்ள சியாங்மை நகரில் கடந்த பிப்ரவரி 18-ஆம் நாளன்று, ஐ.நா. மன்றத்தின் உணவு மற்றும் வேளாண் கழகம் ஒரு ஆய்வரங்கத்தை நடத்தியுள்ளது. உலகெங்கும் 1400 வகை புழு-பூச்சிகளை மனிதர்கள் மருந்தாக உண்பதாகவும், அவற்றில் புரதச் சத்து மிகுந்துள்ளதாகவும், இவற்றை சுகாதாரமான முறையில் தயாரிப்பதன் மூலம் புதிய வியாபாரச் சந்தையை உருவாக்க முடியும் என்றும் அந்த ஆய்வரங்கில் விவாதிக்கப்பட்டுள்ளது.

மூங்கில் புழு வறுவல்: அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையேற்றத்தால் பட்டினியில் பரிதவிக்கும் தாய்லாந்து ஏழைகளின் அரைகுறை உணவு.



உடனே பல்வேறு ஏகாதிபத்திய நிறுவனங்கள், புழு-பூச்சிகளைப் பிடித்து வறுத்து டப்பாக்களில் அடைத்து வியாபாரம் செய்ய களத்தில் இறங்கிவிட்டன. முதலாளித்துவ செய்தி ஊடகங்களோ ''இயற்கையான புரதச் சத்து நிறைந்த புழு-பூச்சிகளின்'' அருமை பெருமைகளை அடுக்கத் தொடங்கிவிட்டன. ஈசல் வறுவலும், எலிக்கறியும் இனி டப்பாக்களில் விற்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.


படிப்பகம்

www.padippakam.com

இதுதவிர, ஏகாதிபத்திய உலகின் மேட்டுக்குடி கும்பல்களது உணவில் இறைச்சியானது முக்கிய இடம் பெறுகிறது. வகைவகையான இறைச்சி உணவின் தேவையை நிறைவு செய்யக் கூடுதலாக இறைச்சி உற்பத்தி செய்யப்படுகிறது. இதற்காக கணிசமான அளவுக்கு உணவு தானியங்கள் கால்நடைகளுக்குத் தீனியாகத் திருப்பிவிடப்பட்டுக் கொழுக்க வைக்கப்படுகின்றன. சராசரியாக ஒரு கிலோ இறைச்சிக்காக 8 கிலோ உணவு தானியம் கால்நடைகளுக்குக் கொட்டப்படுகிறது. இதனாலும் உணவு தானியப் பற்றாக்குறையும் விலையேற்றமும் ஏற்படுகிறது.

மேலும், ஏகாதிபத்திய அராஜக உற்பத்தியால் புவி வெப்பம் அதிகரித்து, இயற்கைச் சீற்றங்களால் உணவு உற்பத்தி பாதிக்கப்படுவதாலும், மக்கட் தொகை பெருக்கத்திற்கு ஏற்ப விவசாய உற்பத்தி நவீனப்படுத்தப்படாமல் ஏகாதிபத்தியங்களால் நாசமாக்கப்பட்டு வருவதாலும், ஏகாதிபத்திய உலகின் நிதியாதிக்கக் கும்பல்கள் ஊக வணிகத்தின் மூலம் உணவுப் பொருட்களைக் கட்டுப்படுத்தி மேலாதிக்கம் செய்து வருவதாலும் உலகெங்கும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் தட்டுப்பாடும் விலையேற்றமும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

ஏகாதிபத்தியம் உலகம் மிகக் கொடியது. மனித இனம் பட்டினியால் மாண்டு போனாலும் பரவாயில்லை, எமக்கு இலாபம்தான் வேண்டும் என வெறியோடு அலையும் ஏகாதிபத்திய வாதிகள் உலகில் நீடிக்கும்வரை, உலகைக் கவ்வியுள்ள பட்டினிப் பேராயத்திலிருந்து மனித இனம் மீள முடியாது. ஏகாதிபத்தியத்தைத் தூக்கியெறியும் அரசியல் புரட்சிகள் நடக்காமல், சுயசார்பான தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியமைக்காமல் மனித இனம் இனிச் சுதந்திரமாக உயிர் வாழவும் முடியாது.

இம்மாபெரும் புரட்சிப் போருக்கு நாம் அணிதிரளப் போகிறோமா? அல்லது விதியை நொந்து கொண்டு ஹெய்தி மக்களைப் போல களிமண்ணைத் தின்றுச் சாகப் போகிறோமா?

● குமார்

## "ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளிகள் பகத் சிங் - சுகதேவ் - ராஜகுரு நினைவை நெஞ்சிலேந்துவோம்!"

## – புரட்சிகர மாணவர்–இளைஞர் முன்னணியின் உறுதியேற்பு

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளிகளான பகத் சிங், சுகதேவ், ராஜகுரு ஆகியோரின் 77-ஆவது நினைவு நாளில், அவர்களின் சோசலிசப் புரட்சிக் கனவை, உழைக்கும் மக்களின் விடுதலை எனும் இலட்சியத்தைச் சாதிக்க உறுதியேற்று, இம்மாவீரர்கள் வெள்ளை ஏகாதிபத்தியத்தால் தூக்கிலிடப்பட்ட நாளான மார்ச் 23-ஆம் தேதியன்று சென்னை-சேத்துப்பட்டு சமூகநலக் கூடத்தில் பு.மா.இ.மு. அரங்கக்கூட்டத்தை நடத்தியது.

பு.மா.இ.மு.-வின் சென்னை மாவட்டச் செயலர் தோழர் கார்த்திகேயன் தலைமையில் இளந்தோழர் தமிழ்ச்சுடரின் பறை முழக்கத்துடன் தொடங்கிய இக்கூட்டத்தில் பு.மா.இ.மு. தோழர் சக்திவேல், சட்டக் கல்லூரி பு.மா.இ.மு. கிளைச் செயலர் தோழர் ராஜேஷ், பெண்கள் விடுதலை முன்னணியின் தோழர் உஷா ஆகியோர் இவ்வீரத் தியாகிகளின் போராட்ட வாழ்வையும், நாட்டு விடுதலையின் மீது கொண்டிருந்த மாளாக் காதலையும், இளைஞர்களையும், பெண்களையும் அமைப்பாக்கிப் போராடிய படிப்பினைகளையும் விளக்கி, இத்தியாகிகள் வழியில் மறுகாலனியாக்கத்தை வீழ்த்தச் சூளுரைத்தனர்.

சிறப்புரையாற்றிய ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன், "இந்திய மக்களின் விடுதலையை சோசலிசப் புரட்சிப் பாதையில் மட்டுமே சாதிக்க முடியும் என அரசியல் - சித்தாந்த வழியை வகுத்துக் கொண்டுப் போராடிய மாவீரன் பகத் சிங் ஒரு மார்க்சியவாதி" என்று ஆணித்தரமாக எடுத்துரைத்து, பகத் சிங் வழியில் பு.மா.இ.மு.வினர் மாணவர்-இளைஞர்களை அணிதிரட்டி ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரைத் தொடுக்க அறைகூவினார்.

அரங்கக் கூட்டத்தில் உரையாற்றும் சட்டக் கல்லூரி பு.மா.இ.மு. கிளைச் செயலர் தோழர் ராஜேஷ். (அமர்ந்திருப்போர் இடமிருந்து) தோழர்கள் கார்த்திகேயன், காளியப்பன் மற்றும் உஷா.




இன்றைய மாணவர்-இளைஞர்களைக் கவ்வியுள்ள சாதி-மத மூடத்தனங்களைத் தூக்கியெறிந்து, நாட்டையும் சமுதாயத்தையும் விடுவிக்க வேண்டுமானால், இளைய தலைமுறையினருக்கு அறிவியல்பூர்வமான சிந்தனையும் செயல்பாடும் அவசியம் என்பதை விளக்கும் வகையில் பு.மா.இ.மு. தயாரித்துள்ள "அறிவியக்கத்தின் அவசியம்" என்ற நூலை ம.க.இ.க. தோழர் வீராச்சாமி வெளியிட, ஓவிய ஆசிரியர் திரு.இராசகோபாலன் பெற்றுக் கொண்டார். ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளிகளான பகத்சிங், சுகதேவ், ராஜகுருவைப் பற்றி மாணவர்கள் கவிதை வாசித்து உறுதியேற்றனர். இளம் ஓவியர் தோழர் இரகுவின் கருத்தோவியங்களும், பு.மா.இ.மு. தோழர்களின் புரட்சிகரப் பாடல்களும் புரட்சிகர உணர்வைப் பொங்கியெழச் செய்தன. திரளாக மாணவர்-இளைஞர்களும் உழைக்கும் மக்களும் பங்கேற்ற இக்கூட்டம், பகத் சிங் வழியில் மீண்டுமொரு விடுதலைப் போரைத் தொடுக்க உறுதியேற்பதாக அமைந்தது.

— புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி, சென்னை.

www.padippakam.com

# தில்லைச் சமரில் வென்றது தமிழ்

**தில்லைப் போராட்ட வெற்றியானது ஒரு துவக்கப்புள்ளிதான். சமஸ்கிருத வழிபாட்டை அகற்றுதல், தமிழ் வழிபாடு, அனைத்து சாதியினரும் அர்ச்சகராதல் - என நீண்டதொரு போராட்டத்தை தமிழினம் நடத்த வேண்டியுள்ளது.**

மார்ச் 2-ஆம் நாள். தில்லைக் கோயிலில் தீட்சிதப் பார்ப்பனர்கள் நிலைநாட்டி வந்த மொழித் தீண்டாமை வீழ்ந்தது. தில்லைச் சமரில் தமிழ் வென்றது. இது ஒரு வரலாற்றுச் சாதனை!

இந்தச் சாதனை ஒரேநாளில் எளிதில் நிகழ்ந்து விடவில்லை. நீண்ட நெடிய உறுதியான போராட்டத்தின் வாயிலாகவே இந்த வெற்றி சாதிக்கப்பட்டுள்ளது. தில்லைச் சிற்றம்பல மேடையில் தேவாரத் தமிழ் பாடிய 'குற்றத்திற்காக' 8 ஆண்டுகளுக்கு முன்பு சிவனடியார் ஆறுமுகசாமியின் கையை உடைத்து வெளியே தூக்கி வீசினார்கள், தீட்சிதப் பார்ப்பனர்கள். அதைத் தொடர்ந்து, சிவனடியார் ஆறுமுகசாமிக்கு ஆதரவாக நின்று, தில்லைச் சிற்றம்பல மேடையில் தமிழை அரங்கேற்ற உறுதியேற்று மனித உரிமை பாதுகாப்பு மையம், ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய அமைப்புகளின் முன்முயற்சியில், சிதம்பரம் நகர விடுதலைச் சிறுத்தைகள், பா.ம.க., தி.க. மற்றும் தமிழ் ஆர்வலர்களின் பங்களிப்புடன் எண்ணற்ற பொதுக்கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன.

''தில்லை நடராஜர் கோயில் சிற்றம்பல மேடையில் தமிழ் ஒலிக்க வேண்டும்; இக்கோயிலை அறநிலைய ஆட்சித்துறை கைப்பற்ற வேண்டும்; நந்தன் நுழைந்த தெற்கு வாயிலை அடைத்து தீட்சிதர்கள் எழுப்பியுள்ள தீண்டாமைச் சுவரை இடிக்க வேண்டும்'' என்ற கோரிக்கைகளுடன் இவ்வமைப்புகளும் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் ஒருங்கிணைப்பில் சிதம்பரம் நகர பா.ம.க., விடுதலைச் சிறுத்தைகள், தி.க., கடலூர் தமிழ்ச் சங்கம் ஆகிய அமைப்புகளும் கொண்ட ஒரு கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு போராட்டங்கள் தொடர்ந்தன. முன்னாள் அறநிலையத்துறை அமைச்சர் வி.வி. சாமிநாதன், சட்டமன்ற உறுப்பினர் வேல்முருகன் போன்றோர் இம்முயற்சிக்குத் துணை நின்றனர். மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் இளம் வழக்குரைஞர்கள் சிதம்பரம் நீதிமன்றத்திலும் உயர்நீதி மன்றத்திலும் தீட்சித கும்பலின் வழக்கை முறியடிக்க கடுமையாக உழைத்துள்ளனர். இத்தொடர் போராட்டங்களாலும், தமிழக மக்களின் பொதுக்கருத்து தீட்சிதக் கும்பலுக்கு எதிராக இருந்ததாலும் கடந்த பிப்ரவரி 29-ஆம் தேதியன்று சிற்றம்பல மேடையில் பக்தர்கள் அனைவரும் தேவாரம் பாடலாம் என்று தமிழக அரசு ஆணை பிறப்பித்தது.

இந்த அரசாணையைப் பெற்ற ம.உ.பா. மையத்தின் வழக்குரைஞர்கள், மார்ச் 2-ஆம் நாளன்று காலை கடலூர் மாவட்ட ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. தோழர்களுடன் சிவனடியார் ஆறுமுகசாமியை யானை மீதேற்றி போர் இசை முழங்க ஊர்வலமாக கோவிலுக்கு அழைத்து வந்தனர். சிவனடியார் ஆறுமுகசாமி போலீசு பாதுகாப்புடன் சிற்றம்பல மேடையேறியதும், தீட்சித ரௌடிகள் கருவறையை மூடினார்கள்; நடராசனுக்குக் குறுக்கே நந்தியாய் மறைத்து நின்றார்கள்; சூத்திரன் வாயிலிருந்து வரும் நீச பாஷையான தமிழ் இறைவனின் காதில் நுழைந்து விடக் கூடாது என்பதற்காக ஊளையிட்டார்கள்; ஆறுமுகசாமியை அடித்தார்கள்; போலீசு அதிகாரிகளைத் தாக்கினார்கள்; படிக்கட்டுகளில் எண்ணெயை ஊற்றி வழுக்கி விழ வைத்தார்கள்; கிலோ கணக்கில் கற்பூரத்தைக் கொளுத்தி புகை மூட்டத்தால்

**சிதம்பரம் நகரில் 2.3.08 அன்று, சிற்றம்பல மேடையேறித் தேவாரம் பாட, போராளி ஆறுமுகசாமியை யானை மீதேற்றி ஊர்வலமாக அழைத்து வரும் புரட்சிகர அமைப்பினர்.**



www.padippakam.com

திக்குமுக்காடச்செய்தார்கள்.

இந்தக் கலவரத்தில் ஆறுமுகசாமியின் உதடுகள் அசைந்ததைக் கூட யாரும் காண முடியவில்லை. அவர் பாடி முடித்து விட்டதாகக் கூறி அடுத்த சில நொடிகளில் முதியவர் ஆறுமுகசாமியை போலீசார் ஆலயத்துக்கு வெளியே தூக்கிக் கொண்டு வந்து விட்டனர். "சிற்றம்பல மேடையில் 2 வரிகள் கூட தேவாரம் பாட இயலவில்லை; அரசு ஆணையின் படி அமைதியாக தேவாரம் பாடி வழிபட போலீசு வழி செய்ய வேண்டும். தாக்குதலில் ஈடுபட்ட தீட்சிதர்கள் மீது கொலை முயற்சி மற்றும் தீண்டாமைக் குற்றவழக்குகள் பதிவு செய்ய வேண்டும்" என்று ஆறுமுகசாமியும் தோழர்களும் அக்கோயில் வாசலிலே ஆர்ப்பாட்டம் செய்தனர். அவர்கள் மீது காட்டுமிராண்டித்தனமாக தடியடி தாக்குதல் நடத்தி விரட்டியடித்து, முன்னணியாளர்களின் மண்டையை உடைத்து, வழக்குரைஞர் உள்ளிட்டு 34 பேரைக் கைது செய்து சிறையிலடைத்தது சிதம்பரம் நகர போலீசு. ஆறுமுகசாமியும் கைது செய்யப்பட்டார்.




**சிற்றம்பல மேடையில் மீண்டும் தேவாரம் பாட 6.3.08 அன்று நடந்த ஊர்வலத்தில் தந்தை பெரியாரின் சிலைக்கு மாலை அணிவிக்கும் போராளிகள்.**

ஆறுமுகசாமியுடன் வந்தவர்கள் போலீசின் மீது கல்லெறிந்து தாக்கியதாகவும் அதனால் தடியடி நடத்தியதாகவும் ஒரு பொய்யை சிதம்பரம் போலீசு, ஊடகங்கள் மத்தியில் பரப்பியது. சிற்றம்பல மேடையில் தேவாரம் பாடலாம் என்ற அரசாணையை அமல்படுத்துவதுபோல நாடகமாடிக் கொண்டே, ஒரு கலவரத்தை உருவாக்கி அதன்மூலம் அந்த அரசாணையை முறியடிக்க தீட்சிதர்களின் கைக்கூலிகளாகச் செயல்படும் சில போலீசு அதிகாரிகள் திட்டமிட்டே இப்படியொரு நாடகத்தை நடத்தியுள்ளனர். அதேசமயம், தீண்டாமை - வன்முறையில் இறங்கிய தீட்சிதர்கள் மீது அக்குற்றங்களுக்காக வழக்குக்கூட பதிவு செய்யப்படவில்லை.

கைது செய்யப்பட்ட தோழர்கள், இந்தப் போராட்டத்தையும் பார்ப்பன ஆதிக்கத்தையும் விளக்கி, சிதம்பரம் நீதிமன்ற வளாகத்தையே பிரச்சார மேடையாக்கி முழக்கமிட்டனர். தீட்சிதர் கும்பலைக் கைது செய்யவும், தில்லைக் கோயிலை அறநிலைய ஆட்சித்துறை கைப்பற்றவும் கோரி கடலூர் மத்திய சிறையில் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

**அரசு ஆணை வந்தபிறகும் சைவ மெய்யன்பர்களோ, ஓதுவார்களோ சிற்றம்பல மேடையேறிப் பாடவராத நிலையில், நாத்திகர்களான புரட்சிகர அமைப்புகளின் தோழர்கள் 5.3.08 அன்று சிற்றம்பல மேடையேறித் தேவாரம் பாடிய காட்சி.**



சிவனடியார் ஆறுமுகசாமியோ கண்கள் மங்கி தள்ளாத வயதிலுள்ள முதியவர். ஆன்மீகவாதியாக இருந்தாலும் சுயமரியாதை உணர்வுமிக்கவர். அந்தக் கிழவரிடமுள்ள தமிழ்ப்பற்றும் போராட்ட உறுதியும் பார்ப்பன எதிர்ப்பும் தில்லைச் சுற்றியுள்ள ஆதீனங்கள் - சைவ மடாதிபதிகளுக்கு இல்லை. ஓதுவார்களுக்கும் தமிழறிஞர்களுக்கும் இல்லை. அப்படி இருந்திருந்தால், அரசாணை பிறப்பிக்கப்பட்ட உடனேயே சிற்றம்பல மேடையேறி அவர்கள் தமிழில் பாடியிருக்க முடியும். போராட்டத்தைத் தொடர்ந்திருக்கவும் முடியும். ஆனால், சிற்றம்பல மேடையேறி தமிழ் பாட ஒருவரும் வரவில்லை.

இந்த அடிமைத்தனத்தையும் கோழைத்தனத்தையும் கண்டு வேதனைப்பட்ட புரட்சிகர அமைப்புகளின் தோழர்களே, 5.3.08 அன்று மீண்டும் சிற்றம்பல மேடையேறி தேவாரம் பாடினர். "நாங்கள் கம்யூனிஸ்டுகள்; நாத்திகர்கள். இன, மொழி, வர்க்க ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடுவது கம்யூனிஸ்டுகளின் கடமை. இழிமொழி என்று தமிழையும், சூத்திரர்-பஞ்சமர் என்று உழைக்கும் மக்களையும் இழிவுபடுத்தும் பார்ப்பன கொடுங்கோன்மைக்கு எதிரான போராட்டத்தின் ஓர் அங்கமாகவே நாங்கள் சிற்றம்பல மேடையேறி தேவாரம் பாடினோம்" என்று அவர்கள் ஊடகங்களுக்குப் பேட்டியும் அளித்தனர்.

5.3.08 அன்று மாலையில் சிவனடியார் ஆறுமுகசாமி உள்ளிட்டு கைதான போராளிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். கடலூர் மத்திய சிறை வாசலிலேயேயும், அதன் பிறகு சிதம்பரம் நகரிலும் இப்போராளிகளுக்கு அதிர் வேட்டுகள் முழங்க சிறப்பானதொரு வரவேற்பு அளிக்கப் பட்டது. மறுநாள், 6.3.08 அன்று காலையில் ஆறுமுகசாமியுடன் ஊர்வலமாகச் சென்ற தோழர்கள் பெரியார் சிலைக்கு மாலையணிவித்துவிட்டு, சிவனடியார் ஆறுமுகசாமியை சிற்றம்பல மேடையேற்றி மீண்டும் தேவாரம் பாட வைத்தனர்.

இப்படி நீண்ட காலமாக ம.உ.பா. மையமும் புரட்சிகர அமைப்புகளும் போராடிப் பெற்ற வெற்றியை, "நாங்கள் நான்காண்டுகளுக்கு முன்பு பேரணி நடத்தியதற்குக் கிடைத்த வெற்றி" என்று உரிமை கொண்டாடுகிறது, சி.பி.எம். கட்சியின் சிதம்பரம் நகர "டைஃபி" அமைப்பு. "1982 முதல் நாங்கள் நடத்திவரும் போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றி" என்று

www.padippakam.com

உரிமை பாராட்டுகிறார் தி.க.வீரமணி. இப்படி இவர்கள் கூசாமல் புளுகுவதைப் போலவே பார்ப்பன தீட்சிதக் கும்பலும், தேவாரம் பாட தாங்கள் எந்தத் தடையும் விதிக்கவில்லையென்றும், தினமும் பூசை நேரத்தில் தேவாரம் பாடப்பட்டு வருவதாகவும் கூசாமல் புளுகி வருகிறது. சிற்றம்பல மேடையில் தேவாரம் பாடுவதற்கு எதிராக அக்கும்பல் இடைக்கால தடை கோரி வழக்கு தொடுத்த விவகாரத்தை திட்டமிட்டே மூடி மறைக்க முயற்சிக்கிறது. தில்லை போராட்டத்துக்குப் பிறகு, கைக்கூலிகளைக் கொண்ட ''அமைதிக் குழு''வை உருவாக்கி காலை 7 மணி முதல் 7.30 மணி வரை தமிழில் பாடலாம் என தீர்மானித்து, காலையிலிருந்து மாலை வரை பூஜை இடைவெளியில் சிற்றம்பல மேடையில் தமிழில் பாடலாம் என்ற அரசு ஆணையை நீர்த்துப் போகச் செய்ய முயற்சித்து வருகிறது.



தனக்கு மாதாந்திர உதவித் தொகை அளிக்க உத்தரவிட்ட தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்து, தில்லைக் கோயிலை அறநிலையத்துறை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரக்கோரி மனு கொடுக்கும் சிவனடியார் ஆறுமுகசாமி.

ஏற்கெனவே சூழ்ச்சிகள் - சதிகள் மூலம் தில்லைக் கோயிலைக் களவாடிக் கொண்ட தீட்சிதர்கள், அது தொடர்பான எல்லா வழக்குகளையும் பலவிதமான தந்திரங்களைக் கையாண்டு நீதிமன்றத்தில் முடக்கி வந்திருக்கிறார்கள். தற்போது தமிழனின் உரிமையை நிலைநாட்டும் வகையில் தமிழக அரசு பிறப்பித்துள்ள இந்த அரசாணையையும் நீதிமன்றம் மூலம் முடக்குவதற்கு முயல்வார்கள். தீட்சிதர்களின் பிடியிலுள்ள அந்தக் கோயிலை அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வராத வரையில், இந்த அரசாணை என்பது அரசாலேயே அமல்படுத்த முடியாத ஒரு வெற்றுக் காகிதமாகவே இருக்கும்.

எனவேதான், ''அறநிலையத் துறையே, தில்லைக் கோயிலைக் கைப்பற்று! தீண்டாமையைப் பறைசாற்றும் தெற்கு வாயில் சுவரை இடி! தீண்டாமை வெறிபிடித்த தீட்சிதர் கும்பலைக் கைது செய்!'' என்ற கோரிக்கைகளுடன் தில்லைப் போராட்ட வெற்றியைத் தொடர்ந்து புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் வீச்சாக பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன.

1987-ஆம் ஆண்டிலேயே சிதம்பரம் நடராஜர் கோயிலை இந்து அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வர புதிதாக விதிகள் உருவாக்கப்பட்ட போதிலும், கடந்த 21 ஆண்டுகளாக இந்தக் கோயிலில் ஒரு நிர்வாக அதிகாரியைக் கூட நியமிக்காமல், தமிழக அரசு கையைக் கட்டிக் கொண்டு நிற்கிறது. சிற்றம்பல மேடையில் தேவாரம் பாட ஆணை பிறப்பித்தும், போராளி ஆறுமுகசாமிக்கு மாதந்தோறும் உதவித் தொகை அறிவித்தும் இந்த விவகாரத்தை தமிழக அரசு சாந்தப்படுத்தி விட முயற்சிக்கிறது. அரைக்கிணறு தாண்டும் அரசின் இத்தகைய நடவடிக்கைகளால், பார்ப்பன தீட்சித கும்பலை வீழ்த்த முடியாது; மொழித் தீண்டாமையை முறியடிக்கவும் முடியாது.

சி.பி.எம். கட்சியின் அற்பத்தனம்: புரட்சிகர அமைப்புகளின் தில்லைப் போராட்ட வெற்றியைத் தமது வெற்றியாக உரிமை பாராட்டிக் கொள்ளும் சிதம்பரம் ''டைஃபி'' கிளையின் சுவரொட்டி.




மேலும், அரசாங்க சட்டம் உரிமையை வழங்கத் தான் முடியும். அந்த உரிமையைப் பயன்படுத்தும் உணர்வை வழங்க முடியாது. அந்த உணர்வை வர்க்கம், சாதி, இனம், மொழி, பாலினம் போன்ற ஒவ்வொரு துறையிலும் நிலவும் ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தினூடாவே பெற முடியும்.

பார்ப்பன ஆதிக்கத்துக்கும் மொழித் தீண்டாமைக்கும் எதிரான தில்லைப் போராட்ட வெற்றியானது ஒரு துவக்கப் புள்ளிதான். சமஸ்கிருத வழிபாட்டை அகற்றுதல், தமிழ் வழிபாடு, அனைத்து சாதியினரும் அர்ச்சகராதல் - என நீண்டதொரு போராட்டத்தை, அனைத்து வகை தீண்டாமைக்கும் ஆதிக்கத்துக்கும் எதிரான போராட்டத்தை தமிழினம் நடத்த வேண்டியுள்ளது. இன்றைய போராட்ட வெற்றியைத் தக்கவைத்துக் கொள்ளவும் நாளைய வெற்றியை நோக்கி முன்னேறவும் இது மிக அவசியமாகியுள்ளது.

ஓங்கட்டும் போராட்டம்! ஒழியட்டும் பார்ப்பன ஆதிக்கம்!

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.
படிப்பகம்

www.padippakam.com

# தில்லை இருப்பது தமிழ்நாடா? இல்லை, தீட்சிதருக்கு அது தனிநாடா?

## பார்ப்பனத் தீட்சிதக் கும்பலின் பிடியில் இருந்து தில்லை நடராசர் கோயிலை விடுவிக்கக் கோரி புரட்சிகர அமைப்புகளின் ஆர்ப்பாட்டம்.

தில்லை நடராசன் திருச்சிற்றம்பல மேடையில் மார்ச் 2-ஆம் நாளன்று காலையில் தமிழ் ஒலித்தது. சிற்றம்பல மேடையில் நின்று தமிழ் பாடக் கூடாது; தமிழன் பாடக்கூடாது என்று தீட்சிதப் பார்ப்பனர்கள் அந்தக் கோயிலில் நிலைநாட்டி வந்த மொழித் தீண்டாமை வீழ்ந்தது. கடந்த நான்கு ஆண்டுகளில் மனித உரிமைப் பாதுகாப்பு மையம், ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய அமைப்புகளின் நெடியதொரு போராட்டத்தாலும், பல்வேறு அரசியல் கட்சிகள், பிரமுகர்களின் பங்களிப்பாலும் இந்த வெற்றி சாதிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 2-ஆம் நாளன்று புரட்சிகர அமைப்புகளின் துணையோடு சிவனடியார் ஆறுமுகசாமி சிற்றம்பல மேடையேறிப் பாடத் தொடங்கியதும் தீட்சிதர்கள் கருவறையை மூடினார்கள்; நடராசனுக்குக் குறுக்கே நந்தியாய் மறைத்து நின்றார்கள். சூத்திரன் வாயிலிருந்து வரும் நீஷபாஷையான தமிழ், இறைவனின் காதில் நுழைந்துவிடக் கூடாது என்பதற்காக ஊளையிட்டார்கள்; ஆறுமுகசாமியை அடித்தார்கள்; அரசு ஆணையை அமுல்படுத்த வந்த போலீசு அதிகாரிகளையும் தாக்கினார்கள். இந்தப் பார்ப்பனவெறிக் கூத்தை வென்றடக்கிய பின்னர்தான் அம்பலத்தில் ஏறியது, தமிழ்!

தீண்டாமை வெறியாட்டம் போட்ட பார்ப்பன தீட்சிதக் கும்பலைக் கைது செய்து தண்டிக்கக் கோரியும், அரசு ஆணையைச் செயல்படுத்தக் கோரியும் அன்று அக்கோயில் வாசலிலே ஆர்ப்பாட்டம் செய்த இப்புரட்சிகர அமைப்புகளின் தோழர்களின் மீது காட்டுமிராண்டித்தனமான தடியடித் தாக்குதல் நடத்திப் பலரது மண்டையை உடைத்த போலீசு, வழக்குரைஞர்கள் உள்ளிட்டு 34 பேரைக் கைது செய்து சிறையிலடைத்தது. சிவனடியார் ஆறுமுகசாமியும் சிறைப்படுத்தப்பட்டார்.



கோத்தகிரியில்...

போலீசின் இத்தாக்குதலை எதிர்த்தும், தீட்சிதர் கும்பலைக் கைது செய்து தண்டிக்கக் கோரியும், தீட்சிதக் கும்பல் திருடிக் கொண்ட தில்லைக் கோயிலை அறநிலையத்துறை கைப்பற்றக் கோரியும் மறுநாளே (3.3.08) **சென்னை** - நுங்கம்பாக்கத்திலுள்ள இந்து அறநிலையத் துறை ஆணையர் அலுவலகம் முன்பு ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. தோழர்கள் அணிதிரண்டு விண்ணதிரும் முழக்கங்களுடன் திடீர் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.




சென்னையில்...

இதன் தொடர்ச்சியாக, "தில்லை இருப்பது தமிழ்நாடா? இல்லை, தீட்சிதருக்கு அது தனிநாடா? தமிழக அரசே, தில்லைக் கோயிலைக் கைப்பற்று! நந்தன் நுழைந்ததால் தீட்டு என்று கூறி கோயிலின் தெற்கு வாயிலை அடைத்து தீட்சிதர்கள் எழுப்பியுள்ள தீண்டாமைச் சுவரை இடித்துத் தள்ளு!" என்ற முழக்கங்களுடன் தமிழகமெங்கும் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்ட இப்புரட்சிகர அமைப்புகள், தாங்கள் செயல்படும் பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ச்சியாக நடத்தின.

**பென்னாகரத்தில்** 4.3.08 அன்று வி.வி.மு. சார்பில் வட்டாட்சியர் அலுவலகம் எதிரிலும், **திருச்சியில்** ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. மற்றும் மனித உரிமைப் பாதுகாப்பு மையம் ஆகிய அமைப்புகள் இணைந்து 5.3.08 அன்று மாவட்ட நீதிமன்ற முன்பாகவும், அதேநாளில் **ஈரோட்டில்** பு.மா.இ.மு. சார்பில் தலைமை அஞ்சலகம் அருகிலும், **ஓசூரில்** பு.ஜ.தொ.மு. சார்பில் ராம்நகர்-அண்ணாசிலை அருகிலும், **கோத்தகிரியில்** 6.3.09 அன்று மார்க்கெட் அருகே நீலமலை அனைத்துத் தொழிலாளர் சங்கத்தின் சார்பிலும், **மதுரையில்** 6.3.08 அன்று தெற்கு வாசல் பகுதியிலுள்ள பள்ளிவாசல் அருகே ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகளின் சார்பிலும், **சிவகங்கையில்** 7.3.08 அன்று ம.க.இ.க. சார்பில் பேருந்து நிலையம் அருகிலும், **கரூரில்** 8.3.08 அன்று பு.மா.இ.மு. சார்பில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாகவும் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

இந்த ஆர்ப்பாட்டங்களில் பா.ம.க., விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பிரமுகர்களும் பகுத்தறிவாளர்களும் வரலாற்றியலாளர்களும் வழக்குரைஞர்களும் பார்ப்பன எதிர்ப்பாளர்களும் பங்கேற்று கண்டன உரையாற்றினர். தில்லை மட்டுமின்றி அனைத்து அரங்குகளிலும் நிலவும் பார்ப்பன ஆதிக்கத்தையும் தீண்டாமையையும் எதிர்த்துப் போராட உழைக்கும் மக்களை அறைகூவுவதாக இந்த ஆர்ப்பாட்டங்கள் அமைந்தன.

— பு.ஜ. செய்தியாளர்கள்.



படிப்பகம்

www.padippakam.com


PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/06-08 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08

# தில்லைச் சிற்றம்பலம் ஏறியது தமிழ்!
# ஆலயத் தீண்டாமை அகலும் வரை ஓயாது எமது சமர்!

**மார்ச் 2 அன்று, தில்லைச் சிற்றம்பலத்தில் தமிழ் மறைகளை ஒலிப்பதற்காக, தீட்சிதக் கும்பலின் தாக்குதலையும் போலீசின் தடியடியையும் எதிர்கொண்டு, மனித உரிமை பாதுகாப்பு மையம் மற்றும் நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகள், தமிழ்மொழி மீது நிலைநாட்டப்பட்டிருந்த மொழித் தீண்டாமையை வீழ்த்திய போராட்டக் காட்சிகள்.**









படிப்பகம்